# ஆண்டு அறிக்கை
# 2013 - 14

## பொருளடக்கம்


| வ.எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | வாரிய இயக்குநர்கள் | 112 |
| 2. | வாரியத்தின் வரலாறு | 113 |
| 3. | வாரியத்தின் குறிக்கோள் | 115 |
| 4. | நிறுவனத்தின் விளக்கப்படம் | 116 |
| 5. | நீர் ஆதாரங்கள் | 117 |
| 6. | இயக்குதல் மற்றும் பராமரிப்பு | 118 |
| 7. | நிர்வாக ஒப்புதல் பெறப்பட்ட பணிகளின் பட்டியல் | 122 |
| 8. | நிதி குறித்த திட்டப் பணிகள் | 123 |
| 9. | நிதி | 167 |
| | (அ) தணிக்கையாளர்களின் அறிக்கை | 169 |
| | (ஆ) இருப்பு நிலைக்குறிப்பு, வரவு-செலவு கணக்கு மற்றும் அட்டவணை | 176 |
| | (இ) கணக்குகள் மீதான குறிப்புகள் | 189 |
| | (ஈ) தமிழக அரசின் ஆய்வறிக்கை | 202 |
| | (உ) நிதிநிலைச் சுருக்கம் - ஐந்தாண்டு ஒரு கண்ணோட்டம் | 216 |
| 10. | பணி மற்றும் நிர்வாகத் துறை | 217 |
| 11. | பயிற்சி மையம் | 222 |
| 12. | பகுதி அலுவலகம் மற்றும் பணிமனை விவரங்கள் | 223 |
| 13. | அசையா சொத்து விவரம் | 224 |

# வாரியத்தின் இயக்குநர்கள் அறிக்கை காலம்



**திரு. கே. முனுசாமி, பி.ஏ., பி.எல்.,**
அமைச்சர், நகராட்சி நிர்வாகம் மற்றும்
ஊரக வளர்ச்சித் துறை,
தலைவர், சென்னைக் குடிநீர் வாரியம்
01.04.2013 - 31.03.2014

## முழுநேர இயக்குநர்கள்



**திரு. க. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப.,**
அரசு முதன்மைச் செயலர்
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச் செயலகம்
01.04.2013 - 31.03.2014



**டாக்டர் பி. சந்திர மோகன், இ.ஆ.ப.,**
நிர்வாக இயக்குநர்
சென்னைக் குடிநீர் வாரியம்
01.04.2013 - 31.03.2014



**திரு. ந. சந்தீப், இ.ஆ.ப.,**
செயல் இயக்குநர்
சென்னைக் குடிநீர் வாரியம்
16.09.2013 - 31.03.2014



**திரு. சி. ஆறுமுகம், இ.ஆ.ப.,**
நிதி இயக்குநர்
சென்னைக் குடிநீர் வாரியம்
01.04.2013 - 31.03.2014



**திரு. வி. பால்ராஜ் எம்.இ.,**
பொறியியல் இயக்குநர்,
சென்னைக் குடிநீர் வாரியம்
01.07.2012 முதல் 30.06.2013



**திரு. டி.வி. பிரபாகர், எம்.இ.,**
பொறியியல் இயக்குநர்,
சென்னைக் குடிநீர் வாரியம்,
01.07.2013 - 31.03.2014

## அலுவல் வழி இயக்குநர்கள்



**திரு. கே. சண்முகம், இ.ஆ.ப.,**
அரசு முதன்மைச் செயலர்,
நிதித்துறை,
தலைமைச் செயலகம்.
01.04.2013 - 31.03.2014



**திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப.,**
முதன்மைச் செயலர் / ஆணையர்,
சென்னை மாநகராட்சி.
01.04.2013 - 31.03.2014



**திரு. ஆர். வெங்கடேசன், இ.ஆ.ப.,**
உறுப்பினர் - செயலர்,
சென்னை வளர்ச்சிக் குழுமம் மற்றும்
இயக்குநர், சென்னைக் குடிநீர் வாரியம்,
01.04.2012 முதல் 31.03.2014



**திரு. அ. கார்த்திக், இ.ஆ.ப.,**
உறுப்பினர் - செயலர்
சென்னை வளர்ச்சிக் குழுமம் மற்றும்
இயக்குநர், சென்னைக் குடிநீர் வாரியம்
01.04.2013 - 31.03.2014



**திரு. பி. ஏகாம்பரம், இ.ஆ.ப.,**
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும்
இயக்குநர், சென்னைக் குடிநீர் வாரியம்,
01.04.2013 - 31.03.2014



**திரு. சி. விஜயராஜ் குமார், இ.ஆ.ப.,**
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
01.04.2013 - 31.03.2014

# வாரியத்தின் வரலாறு

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் (மெட்ரோ வாட்டர்) தமிழ்நாடு சட்டமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் மூலம் (சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று சட்டம் 1978 (1978 ன் சட்ட எண் 28) ஏற்படுத்தப்பட்டு 1.8.78 முதல் செயல்படத் தொடங்கியிருக்கிறது. சென்னை மாநகராட்சியும், தமிழ்நாடு நில நீர்த்துறையினரால் செயல்பட்டு வந்த குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் சம்பந்தப்பட்ட பணிகளை வாரியம் எடுத்துக்கொண்டது.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் செயல் படக்கூடிய பகுதிகள்:**

வாரியம் தோற்றுவிக்கப்பட்ட காலத்தில், சென்னை நகரம் முழுவதும் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதிக்கும் பகுதி அலுவலகம் இருந்தது. ஒரு பகுதிப் பொறியாளரின் தலைமையின் கீழ் இயங்கியது. ஒவ்வொரு பகுதி அலுவலகத்தின் கீழ் சராசரியாக 20 பணிமனைகள் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றுப் பணிகளை மக்களுக்குச் செய்வதற்கு அமைக்கப்பட்டுள்ளது. பணிமனை அலுவலகம் வாரியத்தின் அடிப்படை பிரிவாகும். பொதுமக்கள் தங்களுடைய தேவைகள் குறித்தும், புகார்கள் குறித்தும் பணிமனை அலுவலர்களை அணுகுவார்கள். தற்போது வாரியம் 15 பகுதி அலுவலகங்கள் மற்றும் 200 பணிமனை அலுவலகங்களாக விரிவடைந்துள்ளது. வாரியம் இரண்டு வகை செயல் மண்டல அலுவலகங்களையும் கொண்டிருக்கிறது. ஒரு மண்டல அலுவலகம் செங்குன்றம், சோழவரம், பூண்டி மற்றும் கீழ்ப்பாக்கம் குடிநீர்ப் பணிகளில் உள்ள தரைமேல் நீர் வழங்குவதில் வழிமுறைகள் பற்றி செயல்படுகிறது. மற்றொரு மண்டல அலுவலகம் முக்கியமாகத் தொழிற்சாலைகளுக்கு மொத்தமாக நீர் வழங்குவது பற்றி நகரத்திற்கு வெளியில் கிடைக்கும் நிலநீர் வழிமுறைகளைப் பற்றி செயல்படுத்துகிறது.

**கூடுதல் நீராதாரங்கள்:**

வாரியம் தோற்றுவிக்கப்பட்ட பிறகு கீழ்காணும் திட்டங்களை செயல்படுத்தியதின் மூலமாக கூடுதலான நீராதாரங்களை அதிகப்படுத்தியுள்ளது

**1. கிருஷ்ணா குடிநீர் வழங்கல் திட்டம்:**

ஏப்ரல் 14, 1976 அன்று ஓர் உடன்படிக்கை மகாராஷ்டிரா , கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேச அரசுகளால், 15 ஆயிரம் மில்லியன் கன அடி கிருஷ்னா நதிநீரை சென்னைக்கு வழங்க கையெழுத்தானது. இதையடுத்து, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு அரசுகளுக்கு இடையில் ஓர் ஒப்பந்தம், 1983 ம் வருடம் ஏப்ரல் மாதம் 18ம் தேதி அன்று 15 ஆயிரம் மில்லியன் கன அடி (டி.எம்.சி) கிருஷ்ணா நீர் வழங்க கையெழுத்தானது. அந்த நீர் ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து சோமசீலா வழியாக கண்டலேறு நீர்த்தேக்கத்திற்கு அனுப்பி முடிவாக நிகர அளவான 12 டி.எம்.சி நீர் (வழியில் நீர் ஆவியாவது மற்றும் கசிவு இழப்பு 3 டி.எம்.சி போக) தமிழ்நாடு எல்லையை வந்தடையும்.

**2. வீராணம் குடிநீர் வழங்கல் திட்டம்:**

சென்னை நகரத்திற்கு வீராணம் குடிநீர் வழங்கல் திட்டம் செயல்படுத்தியதன் மூலமாக கூடுதலாக நீராதாரம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2004 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதன் மூலம் 180 எம்.எல்.டி குடிநீரை, வீராணம் ஏரியிலிருந்து பெறப்பட்டு, சென்னை நகரத்திற்கு வழங்கப்படுகிறது.

**3. 100 எம்.எல்.டி கடல்நீரை குடிநீராக்கும் திட்டம், மீஞ்சூர்**

**4. 100 எம்.எ ல்.டி கடல்நீரை குடிநீராக்கும் திட்டம், நெம்மேலி**

சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மேற்கண்ட திட்டங்கள் மூலமாக தினந்தோறும் பெறப்படுகிறது.

**முக்கியமான வருவாய் இனங்கள்:**

1. குடிநீர் வரி மற்றும் கழிவு நீரகற்று வரி

2. குடிநீர் விற்பனை

3. குடிநீர் கட்டணங்கள்

4. அரசிடமிருந்து பெறப்படும் மாணியம்

சென்னை மாநகராட்சி விதித்து வந்த சொத்து வரியின் பல பகுதிகளில் ஒரு பகுதியே குடிநீர் வரியும் கழிவு நீரகற்று வரியும் ஆகும். வாரியம் ஏற்படுத்தப்பட்ட பிறகு சென்னை மாநகராட்சி விதித்த சொத்து வரியிலிருந்து இந்தப் பகுதி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக குடிநீர் வரி மற்றும் கழிவு நீரகற்று வரி தனியாக விதிக்க வாரியத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. நிர்வாக வசதிக்காக வாரியத்தின் சார்பில் சென்னை மாநகராட்சி 31-3-79 முடிய குடிநீர் வரி மற்றும் கழிவு நீரகற்று வரிகளை விதித்தும், வசூலித்தும் வந்தது. 1-4-79 முதல் வாரியம் தானாகவே குடிநீர் வரி மற்றும் கழிவு நீரகற்று வரிகளை விதித்தும் வசூலித்தும் வருகிறது. வாரியத்தின் சட்டங்கள் அமைக்கும் பொழுது குடிநீர் வரி நிர்ணயிக்கப்பட்ட ஆண்டு மதிப்பில் அதிகபட்சமாக 20 சதவீதமும், கழிவு நீரகற்று வரியாக நிர்ணயிக்கப்பட்ட ஆண்டு மதிப்பில் 10 சதவீதமும் வசூலிக்க அதிகாரம் வழங்கப்பட்டது. வாரியம் ஆண்டு மதிப்பில் 1 1/2 சதவீதம் குடிநீர் வரியும் 5.5 சதவீதம் கழிவு நீரகற்று வரியுமாக மொத்தம் ஆண்டு மதிப்பில் 7 சதவீதமாக வசூலிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டது. சொத்து வரி விதித்த போது எவ்வளவு இருந்ததோ அந்தத் தொகைதான். தற்போது வாரியம் விதித்த வரிகளின் அளவாகும். சென்னை மாநகராட்சி பின்பற்றிய அதே மதிப்பில் தான் தற்போது வாரியமும் ஒவ்வொரு வீட்டின் நிர்ணயிக்ககப்பட்ட ஆண்டு மதிப்பைப் பின்பற்றுகிறது. குடிநீர் வரி மற்றும் கழிவு நீரகற்று வரிக்கான ஆண்டு மதிப்பில் 7 சதவீதத்தை இரண்டாகப் பிரித்து அரையாண்டிற்கு ஒருமுறை வசூலிக்கின்றது.

பலவகைப்பட்ட விதத்தில் குடிநீர் பயன்படுத்துபவர்களுக்கு விற்கப்பட்டு அவர்கள் பயன்படுத்துகிற குடிநீரின் அடிப்படையில் குடிநீர்க் கட்டணம் விதிக்கப்படுகிறது. கட்டணம் மற்றும் கேட்போலை மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

வாரியம் பொதுமக்களிடமிருந்து பெரும்பாலும் குடிநீர் கட்டணத்தை ஒரே விலை விகிதத்தில் வசூல் செய்கிறது.

வாரியம் பல்வேறு விதமான திட்டங்களை செயல்படுத்துவதற்கு, அரசிடமிருந்து அவ்வப்போது மானியம் பெறுகிறது.

# வாரியத்தின் குறிக்கோள்

சென்னை மாநகரில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வசதிகள் அமைத்தளித்துப் பராமரிக்கவும் அதனைச் செம்மையுற இயக்கவும் திட்டமிட்ட விரிவாக்கப் பணிகளை மேம்படுத்துதல்.

சென்னை பெருநகரின் வருங்காலக் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று தேவை மதிப்பீடு கிடைக்கக்கூடிய நீரின் அளவு பயன்பாடு மற்றும் ஏனைய விவரங்களுக்கு ஏற்ப தொடர்ந்து ஆய்வு செய்து அதற் கேற்ப தற்கால நடைமுறை அடிப்படையில் நீண்ட காலத்திட்டங்களைத் தயாரித்தல். மறுமதிப்பீடு. மற்றும் மறு ஆய்வு செய்து தற்காலத்திற்கேற்ப திட்டம் தயார் செய்தல்.

சென்னை மாநகரின் வருங்காலக் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வசதித் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் விரிவாக்கத்திட்டங்களை மேற்கொள்ளல்.

அரசு வாரியத்திடம் ஒப்படைக்கும் வகையில் அறிவிப்பு செய்தலுக்கு ஏற்ப குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வசதிகளை இயக்கிப் பராமரித்தல்.

வாரியத்திற்கு அறிவிக்கை செய்து, அரசு ஒப்படைக்கும் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வசதிப் பணிகள் அனைத்தையும் செய்து முடித்தல்.

மேற்குறித்த கடமைகள் தொடர்பான துணை, இடை நிகழ்வு அல்லது, இவற்றின் விளைவாக நேரிடும் எந்த கடமைகளையும் மேற்கொளல்.

வாரியத்திற்கு சட்ட பூர்வமாகவோ அல்லது அவ்வப்போது அளிக்கப்படும் இவ்வாறான வேறு கடமைகள் மேற்கொளல்

**வாரியப் பணிகளை நிறைவேற்றும் போது பின் வருவனவற்றில் கவனம் செலுத்துகிறது.**

அ. பொது நலவாழ்வு, பாதுகாப்பு மற்றம் பொது மக்களின் வாய்ப்பு நலன் ஆகியவற்றில் கவனம் செலுத்துதல்,

ஆ. சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வசதி அமைக்கும் விரிவாக்கத் திட்டங்களில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்துடன் இணைந்து ஆலோசித்து செயல்படுவதுடன், உள்ளாட்சித் துறைகளில் செயற்படுத்தப்படும் குடிநீர் வழங்கல் திட்டங்கள் அல்லது குடிநீர் வசதிப் பணிகள் அல்லது கழிவு நீரகற்று வசதிப் பணிகள் அல்லது சாலை அமைப்புப் பணிகள் அல்லது இது போன்ற பணிகள் யாவற்றிக்கும் முழு ஒத்துழைப்பையும் நல்குதல்.

இ. குடிநீர் வழங்கல், கழிவு நீர் தீர்வு செய்தல் ஆகிய துறைகளில் தேவைக்கேற்ப சிறந்த தொழில் நுட்பங்களை ஏற்றுக் கொள்ள நிபுணர்களைக் கொண்டு பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

ஈ. மாநிலத்திலுள்ள நகர உள்ளாட்சிகளுக்காக திட்டங்கள் மேற்கொளல், கலந்தறிதல் மற்றும நிர்வாகப் பணிகள் அமைத்தல், விரிவான வடிவமைப்பு மற்றும் மதிப்பீடுகள் தயாரித்தல் அடிப்படை அளவுகள் அளிப்பதில் ஒருங்கிணைந்த திட்டங்களை நிறைவேற்றல், கண்காணித்தல், மதிப்பாய்வு செய்தல்.

உ. சென்னை மாநகரில் நிலத்தடிநீர் உறிஞ்சப்படுவதைக் கட்டுப்படுத்தி, பாதுகாத்து அதனைப் பயன்படுத்தல்.

ஊ. நீர் ஆதாரங்கள் சென்னை மாநகரிலுள்ள நீர் அமைப்புகள் கால்வாய்கள் ஆகியவற்றில் நீர் மாசுபடுவதைத் தடுத்தல்.

எ. தொழிலகக் கழிவு நீர் வெளியேற்றப்படுவதற்கு முன்னர் அவற்றைச் சென்னை மாநகரில் கழிவுநீர்க் கால்வாய்கள், ஆறுகள் அல்லது நீர்ப்படுகைகள் ஆகியவற்றில் செலுத்துவதற்கு ஏற்ப அளவு மற்றும் தன்மையினை அளவிடுதல்.

ஏ. தேவையான ஆராய்ச்சி, சோதனை, ஆராய்வு ஆகிவற்றை மேற்கொள்ளுதல்.

ஐ. தன் இயக்கங்களை நிறைவேற்றுவதற்காக உடமைகளைக் கையகப்படுத்துதல் மற்றும் தீர்வு செய்தல்.

ஒ. ஆண்டு கணக்குகள் மற்றும் வரவு செலவு மதிப்பீடு தயாரித்து மேற்கொள்ளுதல்.

ஓ. வரி விதிப்பு வசூலிப்பு வீதங்கள் தொகைகள், கட்டணங்கள் மேல் வரிகள், வாடகை விலை மற்றும் செலவினங்கள் ஆகியவை குறித்து நிர்ணயம் செய்தல்.

ஔ. சென்னைக் குடிநீர் வாரிய சட்ட விதி 1978 (1978 ஆம் ஆண்டு சட்ட விதி 28 ) - இன் கீழ் வரி வகைகளையும், பணிகளையும் செயற்படுத்தும் வண்ணம் அனைத்துத் தேவைகளையும் செய்தல்,

# நிறுவனத்தின் விளக்கப்படம்




## விரிவாக்கம்

| | |
|---|---|
| த.பொ | தலைமைப் பொறியாளர் |
| மு.நி.க.அ. | முதன்மை நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர் |
| நி.க.அ. | நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர் |
| மே.பொ | மேற்பார்வை பொறியாளர் |
| | ஒருங்கிணைப்பு |
| ம.தொ.மே | மக்கள் தொடர்பு மேலாளர் |
| தொ.தொ.மே | தொழில் தொடர்பு மேலாளர் |
| த.தொ.நு.மே | தகவல் தொழில்நுட்ப மேலாளர் |
| வி.வ.மே | விவர வகைப்பாட்டு மேலாளர் |
| து.நி.க.அ. | துணை நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர் |
| கொ.மே | கொள்முதல் மேலாளர் |
| ப.க.மே | பண்டகக் கட்டுப்பாட்டு மேலாளர் |
| செ.பொ | செயற்பொறியாளர் |
| ம.அ.(1) | மண்டல அலுவலகம்-1 |
| ம.அ.(2) | மண்டல அலுவலகம்-2 |
| து.ம.தொ.மே | துணை மக்கள் தொடர்பு மேலாளர் |
| கு.நி.உ.அ | குறை நிவாரணம் மற்றும் உதவி அலுவலர் |

## விரிவாக்கம்

| | |
|---|---|
| இ.ம.ப | இயக்குதல் மற்றும் பராமரிப்பு |
| கு.சு.&செ | குடிநீர் சுத்திகரிப்பு மற்றும் செலுத்துதல் |
| க.சு.&ம.உ | கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் மறு உபயோகம் |
| க.நீ.சு | கடல்நீர் சுத்திகரிப்பு |
| த.உ.பி | தர உறுதிப் பிரிவு |
| ஒ.ம.க | ஒப்பந்தம் மற்றும் கண்காணிப்பு |
| தி&வ | திட்டம் மற்றும் வரைவு |
| ம | மத்திய |
| தெ.தெ.மே | தென்தென் மேற்கு |
| வ/வகி | வடக்கு/வட கிழக்கு |
| க.சு.நி | கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் |
| நி.அ.க.ப | நிர்வாக அலுவலகம் கட்டிட பராமரிப்பு |
| ப.மை | பயிற்சி மையம் |
| மே.த.அ | மேலாண்மை தகவல் அமைப்பு |

# நீர் ஆதாரங்கள்

சென்னை நகரின் குடிநீர் ஆதாரங்கள் ஏரிகள் மற்றும் நிலத்தடி நீர் ஆகும். பூண்டி, சோழவரம், புழல் மற்றும் செம்பரம்பாக்கம் ஆகியவை ஏரிகள் ஆகும். மஹாராஷ்டிரம், கர்நாடகம் மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகிய மூன்று மாநில அரசுகளும் வருடத்திற்கு 15 ஆயிரம் மில்லியன் கன அடி (டி.எம்.சி) கிருஷ்ணா நீரை சென்னை நகருக்கு கொடுக்கவேண்டும் என்ற உடன்படிக்கையில் ஏப்ரல் 14, 1976ல் கையொப்பமிட்டன. ஸ்ரீ சைலம் நீர்த்தேக்கத்திலிருந்து சோமசீலா மற்றும் கண்டலேறு நீர்த்தேக்கங்கள் வழியாக 12 ஆயிரம் மில்லியன் கன அடி (டி.எம்.சி) நீர் (வரும் வழியில் 3 கன அடி நீர் ஆவியாதல் மற்றும் நீர்கசிவு போன்ற இழப்புகள் நீங்கலாக) தமிழக எல்லையை கீழே குறிப்பிட்ட முறைப்படி வந்தடையும்.

**ஜுலை முதல் அக்டோபர் வரை – 8 ஆயிரம் மில்லியன் கன அடி**

**ஜனவரி முதல் ஏப்ரல் வரை – 4 ஆயிரம் மில்லியன் கன அடி**

சென்னைநகர குடிநீர்தேவையை பூர்த்தி செய்ய மேலும் ஒரு ஆதாரமாக அக்டோபர் 2004 ஆம் ஆண்டு முதல் சென்னைக்கு 230 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள வீராணம் ஏரியும் இணைந்துள்ளது. மேலும் மீஞ்சூரில் வடிவமைத்து நிறுவி, சொந்தமாக்கி இயக்கி மற்றும் திருப்பி தரும் அடிப்படையில் (31.07.2010 முதல் இயங்கி வரும்) கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் நீர் பெறப்படுகிறது. மேலும் நெம்மேலியில் 100 மில்லியன் லிட்டர் கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 22.02.2013 அன்று துவக்கி வைத்தார்கள். பூண்டி, தாமரைப்பாக்கம், வெள்ளப்பெருக்கு பகுதி, கன்னிகைப்பேர், பஞ்செட்டி, மீஞ்சூர் மற்றும் தென்கடற்கரை படுகையில் அமைந்துள்ள கிணற்று தளங்கல் நிலத்தடி நீர் ஆதாரங்களாகும்.

2. அ. புழல், சோழவரம் மற்றும் பூண்டி சராசரி மழை அளவு

| வருடம் | மழையின் அளவு மி.மி |
|---|---|
| 2007 | 1449.47 |
| 2008 | 1655.00 |
| 2009 | 1119.60 |
| 2010 | 1561.03 |
| 2011 | 1315.80 |
| 2012 | 981.80 |
| 2013 | 1064.87 |
| 2014 | 1025.80 |

2. இ. சராசரி மொத்த குடிநீர் வழங்கல்

| நிதி ஆண்டு | குடிநீரின் அளவு (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டரில்) |
|---|---|
| 2007 - 08 | 642.79 |
| 2008 - 09 | 653.57 |
| 2009 - 10 | 610.95 |
| 2010 - 11 | 682.49 |
| 2011 - 12 | 794.77 |
| 2012 - 13 | 828.83 |
| 2013 - 14 | 604.07 |
| 2014 - 15 | 586.02 |

2.ஆ) ஏரிகளின் நீர் இருப்பு

| வ. எண். | ஏரியின் பெயர் | முழுக் கொள்ளளவு | நீர் இருப்பு (மில்லியன் கன அடியில்) | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | ஜுன் 2010 | ஜுன் 2011 | ஜுன் 2012 | ஜுன் 2013 | ஜுன் 2014 |
| 1 | பூண்டி | 3231 | 1195 | 1700 | 2080 | 337 | 429 |
| 2 | சோழவரம் | 881 | 98 | 218 | 83 | 0 | 3 |
| 3 | புழல் | 3300 | 2004 | 2207 | 1319 | 821 | 1507 |
| 4 | செம்பரம்பாக்கம் | 3645 | 2106 | 1822 | 1177 | 1012 | 1264 |
| 5 | வீராணம் | 1465 | 1124 | 0 | 499 | 0 | 1051 |

2.ஈ) தேவை மற்றும் வழங்கலின் இடையே உள்ள இடைவெளி

| நிதி ஆண்டு | மக்கள் தொகை (இலட்சத்தில்) | குடிநீரின் தேவை | நகர குடிநீர் வழங்கல் | இடைவெளி |
|---|---|---|---|---|
| | | நாளொன்றுக்கு மில்லியன் லிட்டரில் | | |
| 2007 - 08 | 45.43 | 681.45 | 582.22 | 99.23 |
| 2008 - 09 | 45.77 | 686.55 | 586.59 | 99.96 |
| 2009 - 10 | 46.12 | 691.80 | 535.88 | 155.92 |
| 2010 - 11 | 46.46 | 696.90 | 606.13 | 90.77 |
| 2011 - 12 | 67.27 | 1009.05 | 722.85 | 286.20 |
| 2012 - 13 | 68.97 | 1034.55 | 766.25 | 268.30 |
| 2013 - 14 | 70.68 | 1060.20 | 555.61 | 504.59 |
| 2014 - 15 | 71.88 | 1078.20 | 540.65 | 537.55 |

# இயக்குதல் மற்றும் பராமரிப்பு

## i) செயலாக்க பரப்பளவு

சென்னைக் குடிநீர் வாரியத்தின் செயலாக்கப் பரப்பளவு 426 சதுர கிலோ மீட்டராகும்.

## ii) குடிநீர் வழங்கல்

வாரியம், தனது சேவைகளை வழங்க, விரிவான வசதிகளையும், தொடர் அமைப்புகளையும் பெற்றுள்ளது. 1978ல் உருவாக்கப்பட்ட வாரியம் தனது சேவையிலும், அடிப்படை கட்டமைப்பிலும் விரிவான வளர்ச்சி அடைந்துள்ளது.

சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நுண்கிருமிகள் அகற்றப்பட்டு 16 பிரதான மற்றும் 30 சிறிய விநியோக நிலையங்கள் மற்றும் 5275 கி.மீ. நீளமுள்ள பகிர்மான குழாய்கள் மூலம் சென்னை நகருக்கு வழங்கப்படுகிறது. 2013-14ல், 9 கி.லிட்டர் கொள்ளளவு கொண்ட 300 லாரிகள் மற்றும் 6 கிலோ லிட்டர் கொள்ளளவு கொண்ட 150 லாரிகள் மூலம் 35 இடங்களில் உள்ள நீர் நிரப்பும் நிலையங்களிலிருந்து நாளொன்றுக்கு சராசரி 3700 நடைகள் மூலமாக குடிநீர் வழங்கப்பட்டது.

## iii) குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

புழல் ஏரியிலிருந்து பெறப்படும் நீர் புழல், சூரப்பட்டு (01.08.2009 அன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட்டது) மற்றும் கீழ்பாக்கத்தில் அமைந்துள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிக்கப்பட்டு, சென்னை மாநகருக்கு விநியோகிக்கபடுகின்றது. செம்பரம்பாக்கம் ஏரியின் நீர் செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் (19.07.2007 அன்று செயலாக்கப்பட்டது) சுத்திகரிக்கப்பட்டு சென்னைக்கு வழங்கப்படுகிறது. (சென்னைக்கு தெற்கே 230 கி.மீ தொலைவில் அமைந்துள்ள) வீராணம் ஏரியின் நீர், (அக்டோபர் 2004 முதல் சென்னைக் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய மேலும் ஒரு ஆதாரமாகியது) வடக்குத்து சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்டு, போரூர் நீரேற்று நிலையத்திற்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து சென்னை நகருக்கு விநியோகிக்கப்படுகிறது. மேலும் மீஞ்சூரில் வடிவமைத்து, நிறுவி, சொந்தமாக்கி, இயக்கி மற்றும் திருப்பித் தரும் அடிப்படையில் (31.07.2010 முதல் இயங்கி வரும்) கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் நீர் பெறப்படுகிறது. மற்றுமொரு 100 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட் நெம்மேலி கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையம் மத்திய அரசின் நிதி உதவியுடன் 22.02.13 முதல் செயல்பாட்டில் உள்ளது.

| வ. எண். | குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் | திறன் நாளொன்றுக்கு மி.லிட்டரில்) | நிறுவப்பட்ட ஆண்டு | தற்போதைய சுத்திகரிப்பு நாளொன்றுக்கு மி.லிட்டரில்) | இடைவெளிக்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| 1 | கீழ்ப்பாக்கம் | 270 | 1914-ல் நிறுவப்பட்டு 2005-ல் புதுப்பிக்கப்பட்டது | 270 | ஏரியிலிருந்து நீர் பெறும் கால்வாய் புதுப்பிக்கப்பட வேண்டும் |
| 2 | புழல் | 300 | 1996 | 210 | கூடுதலாக நீர் உள்வாங்கும் அமைப்பு ஏற்படுத்த வேண்டும் |
| 3 | வீராணம் | 180 | 2004 | 180 | - |
| 4 | செம்பரம்பாக்கம் | 530 | 2007 | 265 | கூடுதலான நீர் அனுப்பும் குழாய் பதிக்கப்பட வேண்டும் |
| 5 | சூரப்பட்டு | 14 | 2009 ல் தமிழ்நாடு குடிநீா வடிகால் வாரியத்திடம் இருந்து மேற்கொள்ளப்பட்டது | 11.5 | - |
| 6 | கடல் நீரை குடிநீராக்கும் நிலையம் - மீஞ்சூர் | 100 | 31.07.2010 | 100 | - |
| 7 | கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் - நெம்மேலி | 100 | 22.02.2013 | 68.63 | நிலைபடுத்தும் காலம் |
| | **மொத்த சுத்திகரிப்பு திறன்** | **1494** | | | |

### iv) மழைநீர் சேகரிப்புத் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சரின் தொலை நோக்குத் திட்டத்தில் பார்வையில் உருவான மழைநீர் சேகரிப்பு திட்டத்தை அமுல்படுத்தியதில் தமிழகம் முன்னோடியாகத் திகழ்கின்றது. சென்னைக் குடிநீர் வாரியம் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை சென்னை வாழ் மக்களிடையே பிரபலமடையச் செய்ய பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சென்னைக் குடிநீர் வாரியத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சிறப்பு மழைநீர் சேகரிப்பு பிரிவு. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை ஏற்படுத்துவது மற்றும் அதன் பராமரிப்பு பற்றிய ஆலாசனைகளை வழங்கி வருகிறது.

அனைத்து கட்டடங்களிலும், மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்துவதை கட்டாயமாக்கும் விதமாக, சென்னைப் பெருநகர் நிலத்தடி நீர் ஒழுங்கு முறை விதி 27/1987ஐ, அக்டோபர் 2002ஆம் ஆண்டில் திருத்தம் செய்யப்பட்டது.

குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பை பெறுவதற்கும், பழைய இணைப்பைப் புதுப்பிப்பதற்கும், மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துவது அனைத்து கட்டிடங்களுக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சென்னை நகரில், நிலத்தடி நீர் மட்டம் மற்றும் அதன் தரம், நகரெங்கும் உள்ள கண்காணிப்பு கிணறுகள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு கண்காணிப்பதன் மூலம், நிலத்தடி நீரின் மட்டம் 15 முதல் 20 அடி வரை உயர்ந்துள்ளதும், அதன் உப்புத்தன்மை 500 முதல் 3,000 பிபிஎம் வரை குறைந்துள்ளதும் கண்டறியப்பட்டுள்ளது. மழைநீர் சேகரிப்பு திட்டத்தை அமுல்படுத்தியதால் நிலத்தடி நீரின் மட்டமும், தன் தரமும் ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்து வருகிறது.

### v) சென்னைக் குடிநீர் வாரியம் குடிநீரின் தரத்தினை மேம்படுத்த மேற்கொள்ளும் முயற்சிகள்

426 சதுர கி.மீ. பரப்பளவு கொண்டு விரிவாக்கப்பட்டுள்ள சென்னை மாநகரம் 15 பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. மாநகரத்தின் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் பணியினை சென்னைக் குடிநீர் வாரியம் மேற்கொண்டுள்ளது.

அவ்வாறு மக்களுக்கு வழங்கிவரும் குடிநீரின் தரத்தை வாரியத்தின் தர உறுதி பிரிவு தினமும் 150 நீர்மாதிரிகளை சேகரித்து, அதில் உள்ள எஞ்சிய குளோரின் அளவினையும், 60 நீர்மாதிரிகளில் உள்ள நுண்ணுயிரிகளையும் ஆய்வு செய்து தரத்தினை உறுதி செய்கின்றனர். மேலும் 200 பணிமனை அலுவலக கள ஊழியர்களினால் 2500 நீர்மாதிரிகளில் உள்ள எஞ்சிய குளோரின் சோதனை செய்யப்படுகிறது.

கீழ்ப்பாக்கத்தில் அமைந்துள்ள வாரியத்தின் தர உறுதி பிரிவின் நீர் ஆய்வுக்கூடத்தில் நீர் பரிசோதிக்கப்பட்டு முடிவுகள் உரிய பகுதி அலுவலகங்களுக்கு தகவலுக்காகவும், நிவாரண நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது. குளோரின் குறைபாடுகள் களப்பொறியாளர்களின் கவனத்திற்கு உடனடி நடவடிக்கை தெரிவிக்கப்படுகிறது. களப்பொறியாளர்களால் குறைபாட்டுள்ள காரணம் கண்டரியப்பட்டு நீக்கப்பட்ட பிறகு, தரத்தினை உறுதி செய்யும் வரை தொடர்கிறது.

களப்பொறியாளர்கள் மாசு அடைந்த பகுதிகளின் புகாரினை ஆராய்ந்து தேவைப்படின் அப்பகுதியில் உள்ள நீர்குழாய்களை தற்காலிகமாக துண்டித்துவிட்டு, தேவையான குடிநீரை லாரியின் மூலம் மக்களுக்கு விநியோகிக்கின்றனர். மாசினை களைந்த பிறகு குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

நீரினால் பரவும் காலரா போன்ற தொற்று நோயினால் அனுமதிக்கப்பட்டவர்களை தர உறுதி பிரிவின் களப்பொறியாளர், தண்டையார் பேட்டையில் உள்ள தொற்று நோய் மருத்துவமனையை தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளில் உள்ள களப்பொறியாளர்களை குடிநீர் தரத்தை ஆய்வு செய்து மேம்படுத்துகின்றனர்.

பருவமழைக் காலங்களில் அனைத்து நீர்சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீர் வழங்கும் நிலையங்களில் உள்ள மேல் நிலைத்தொட்டி மற்றும் கீழ்நிலைத் தொட்டிகள் சுத்தம் செய்யப்பட்டு குழாயின் கடைசி பகுதியிலுள்ள நீரின் தேவையான எஞ்சிய குளோரின் அளவு இருக்குமாறு பராமரிக்கப்படுகிறது.

மேலும் தர உறுதி பிரிவு களப் பொறியாளர்கள், சென்னை மாநகராட்சியின் சுகாதார அலுவலர்கள் மற்றும் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநருடன் இணைந்து நீரின் தரத்தினை இந்தியதர அளவுப்படி பராமரிக்கிறார்கள்.

vi) **கழிவு நீரகற்றல்**

வீட்டு கழிவுநீர் இணைப்புகளிலிருந்து உற்பத்தியாகும் கழிவுநீர் 4,265 கி.மீ. நீளமுள்ள கழிவுநீர் குழாய்கள் மூலம், 95607 ஆழ் நுழைவாயில் மூலமாகவும், 250 கழிவு நீரகற்று நிலையங்களைக் சென்றடைகிறது. அங்கிருந்து சென்னையில் 6 இடங்களில் அமைந்துள்ள நாளொன்றுக்கு 764 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட 12 கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு சுத்திகரிக்கப்படுகிறது. நகரின் கழிவுநீர் அகற்றும் அமைப்பானது 6 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் தனித்தனியாக கழிவுநீர் சேகரிப்பு, அனுப்புதல், சுத்தம் செய்தல் மற்றும் வெளியேற்றும் வசதியைக் கொண்டுள்ளது.

vii) **பயன்பாட்டிலுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்**

| வ. எண். | சுத்திகரிப்பு நிலையங்கள் | திறன் (நாளொன்றுக்கு மி.லிட்டரில்) | பயன்படுத்தும் திறன் (நாளொன்றுக்கு மி.லிட்டரில்) |
|---|---|---|---|
| 1. | நெசப்பாக்கம் (3 பிரிவுகள் 23+40+54 எம்.எல்.டி) | 117 | 98 |
| 2. | கொடுங்கையூர் (3 பிரிவுகள் 110+80+80 எம்.எல்.டி) | 270 | 218 |
| 3. | கோயம்பேடு (3 பிரிவுகள் 34+60+120 எம்.எல்.டி) | 214 | 105 |
| 4. | பெருங்குடி (3 பிரிவுகள் 79+72+12 எம்.எல்.டி) | 163 | 139 |
| | மொத்தம் ( 12 பிரிவுகள்) | 764 | 560 |

**கூடுதல்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (பணி நடைபெறுகிறது)**

புதிதாக சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை வசதிகள் அமைக்கும் பணிகள் நிறைவேற்றியவுடன் ஏற்கனவே உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் சுத்திகரிப்பு கொள்ளளவுகள் மற்றும் தற்சமயம் கட்டப்பட்டுவரும் சுத்திகரிப்பு நிலையங்களை கோயம்பேடு (120 எம்.எல்.டி) சுத்திகரிப்பு கொள்ளளவுகள் முழுமையாக பயன்படுத்தப்படும்.

**கழிவுநீர் அகற்றும் பணிகளை இயந்திரயமாக்குதல்**

கழிவுநீர் அகற்றும் அமைப்பை சுத்தம் செய்யும் பணிகளில் இயந்திரமயமாக்கலை, வாரியம் நடைமுறைபடுத்தியுள்ளது. இதற்கான தேவையான இயந்திரங்களை சென்னைக் குடிநீர் வாரியம் வாங்கியுள்ளது. தற்போது 129 ஜெட்ராடிங் இயந்திரங்கள், 211 தூர் வாரும் இயந்திரங்கள், 27 ஜெட்டிங் மற்றும் உறிஞ்சும் இயந்திரங்கள் மற்றும் 43 அதிவேக உறிஞ்சும் இயந்திரங்கள் கழிவு நீர் அமைப்பினை பராமாத்திட பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**viii) தானியங்கி கண்காணிக்கும் நடவடிக்கை புவியிடம் காட்டிடும் அமைப்பு**

சென்னைக் குடிநீர் வாரியத்தின் குடிநீர் ஊர்திகள் செல்லும் வழி தடத்தினை கண்ட்றிந்து தண்ணீர் திருட்டினை கண்டறிய குடிநீர் வாரிய ஊர்திகளில் புவியிடம் காட்டிடும் அமைப்புகளை பொருந்தும் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.

### ix) நுகர்வோர் நலன் மற்றும் புகார் கண்காணிக்கும் அமைப்பு

வாரியத்தின் அனைத்து பகுதி அலுவலங்கள், பணிமனை அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகம் ஆகியவை என்ற இணையதளத்தின் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. நுகர்வோர்கள் தங்களது சொத்து அமைவிடம் பற்றி பொருட்படுத்தாது அவர்களது புகார்களை வாரியத்தின் ஏதாவது ஒரு அலுவலகத்தில் தொலைபேசி தொடர்பு அல்லது நேரடியாக பதிவு செய்ய முடியும். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட புகார்கள் உடனடியாக புகார் கண்காணிப்பு அமைப்பின் மூலம், உரிய நடவடிக்கை உடனுக்குடன் எடுப்பதற்காக சம்பந்தப்பட்ட பணிமனை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இப்புகார்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கை குறித்தும் இந்த அமைப்பின்மூலமாக கண்காணிக்கப்படுகிறது.

சென்னைக் குடிநீர் வாரியம் குறுந்தகவல் சேவை முறையையும் செயற்படுத்தியுள்ளது. இதன் மூலமாக நுகர்வோர் தங்களது புகார்களை அலைபேசி தொடர்பு மூலமாக பதிவு செய்தவுடன், வாரியத்திடமிருந்து புகார் பெறப்பட்டதற்கான ஒப்புகையை குறுந்தகவல் சேவை மூலமாக பெற முடியும். வாரியத்தால் அவ்வாறு பெறப்படும் புகார்கள், தானாகவே புகார் கண்காணிப்பு அமைப்பு மூலமாக சம்பந்தப்பட்ட பணிமனை பொறியாளர்களுக்கு புகார்களின் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதற்காக குறுந்தகவல் சேவை வாயிலாகவே அனுப்பப்படுகிறது. புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட பிறகு நுகர்வோருக்கு மீண்டும் குறுந்தகவல் சேவை மூலமாக அவர்கள் கொடுத்துள்ள அலைபேசி எண்ணுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து தகவல் தரப்படுகிறது.

தொடர்ச்சியாக பெறப்படும் புகார்கள் இம்முறையின் மூலம் பெருமளவில், புகார்கள் பெறப்படும் நிலையிலேயே குறைக்கப்பட்டுள்ளது. 2013-14ஆம் ஆண்டு 1,93,121 நுகர்வோர்களிடம் இருந்து புகார்கள் பெறப்பட்டு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

# 2013 - 2014 ஆம் ஆண்டு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்ட பணிகள்

குடிநீர்

| வ. எண் | பணிகள் | திட்ட மதிப்பீடு (கோடியில்) | நிர்வாக ஒப்புதல் பெறப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1 | ஒருங்கிணைக்கப்பட்ட ஸ்ரீ பெரும்புதூர் குடிநீர் வழங்கல் திட்டம் | 42.20 | 05.06.2012 |
| 2 | ஒருங்கிணைக்கப்பட்ட நொளம்பூர் குடிநீர் வழங்கல் திட்டம் | 18.00 | 22.10.2012 |
| 3 | ஒருங்கிணைக்கப்பட்ட காரம்பாக்கம் குடிநீர் வழங்கல் திட்டம் பகுதி - 150 | 20.56 | 22.10.2012 |
| 4 | ஒருங்கிணைக்கப்பட்ட ராமாபுரம் குடிநீர் வழங்கல் திட்டம் | 32.54 | 22.10.2012 |
| 5 | ஒருங்கிணைக்கப்பட்ட மணப்பாக்கம் குடிநீர் வழங்கல் திட்டம் | 10.92 | 22.10.2012 |
| 6 | ஒருங்கிணைக்கப்பட்ட நந்தம்பாக்கம் குடிநீர் வழங்கல் திட்டம் பகுதி - 158 | 6.00 | 22.10.2012 |
| 7 | ஒருங்கிணைக்கப்பட்ட ஒக்கியம்-துரைப்பாக்கம் குடிநீர் வழங்கல் திட்டம் பகுதி 193(பகுதி 194 & 195) | 46.00 | 22.10.2012 |
| 8 | ஒருங்கிணைக்கப்பட்ட ஈஞ்சம்பாக்கம் குடிநீர் வழங்கல் திட்டம் பகுதி - 196 | 22.30 | 22.10.2012 |
| 9 | ஒருங்கிணைக்கப்பட்ட குடிநீர் வழங்கல் திட்டம் சோழிங்கநல்லூர் காரப்பாக்கம் பகுதி - 197 & 198 | 35.70 | 22.10.2012 |
| 10 | பூந்தமல்லி மாற்றுப்பாதை சந்திப்பு வரை (சவீதா பல் மருத்துவ கல்லூரி) தாம்பரம் வரை 1200 மி.மீ. விட்டமுள்ள உருக்கு இரும்பு குழாய் வழங்குதல், பதித்தல், இணைத்தல், பரிசோதனை செய்தல் மற்றும் இயக்க துவக்குதல் | 97.95 | 23.11.2012 |
| 11 | நெய்வேலி சுரங்கம் 1 எ ல் டி 10 மற்றும் டி 11 லிருந்து விடுவிக்கப்படும் நீர் குழாய் மூலமாக வடக்குத்து குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லுதல் | 5.95 | 08.03.2013 |
| 12 | பரவணாற்றில் தண்ணீர் விடுவிக்கப்படும் இடத்தில் இருந்து வடக்குத்தில் ஏற்கனவே உள்ள குடிநீர் குழாயில் கொண்டு செல்ல குழாய் பதித்தல். | 2.92 | 08.03.2013 |

கழிவுநீர்

| வ. எண் | பணிகள் | திட்ட மதிப்பீடு (கோடியில்) | நிர்வாக ஒப்புதல் பெறப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1. | ஒருங்கிணைக்கப்பட்ட ஸ்ரீ பெரும்புதூர் பாதாளச் சாக்கடைத் திட்டம் | 47.40 | 05.06.2012 |
| 2. | ஒருங்கிணைக்கப்பட்ட கத்திவாக்கம் பாதாளச் சாக்கடைத் திட்டம் | 86.15 | 22.10.2012 |
| 3. | ஒருங்கிணைக்கப்பட்ட ராமாபுரம் பாதாளச் சாக்கடைத் திட்டம் | 48.50 | 22.10.2012 |
| 4. | ஒருங்கிணைக்கப்பட்ட சோழிங்கநல்லூர் காரப்பாக்கம் பகுதி - 197 & 198, பாதாளச் சாக்கடைத் திட்டம் | 110.90 | 22.10.2012 |

# திட்டப் பணிகளுக்கான நிதி நிறுவனம்

| வ. எண். | திட்ட பணி | ஒப்பந்த மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | திட்டம்/ ஆதாரம் | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | செயல் (%) | நிதி பற்றிய (%) |
| | **குடிநீர் வழங்கும் திட்டங்கள்** | | | | |
| 1 | அம்பத்தூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 18276.62 | ஜநேதேநபுதி | 100% | 84% |
| 2 | நெற்குன்றம் குடிநீர் வழங்கும் திட்டம் | 1460.22 | ஜநேதேநபுதி | 34% | 33% |
| 3 | மதுரவாயல் குடிநீர் வழங்கும் திட்டம் | 1415.40 | ஜநேதேநபுதி | 99% | 82% |
| 4 | உள்ளகரம் புழுதிவாக்கம் குடிநீர் வழங்கும் திட்டம் | 1750.00 | ஜநேதேநபுதி | 87% | 58% |
| 5 | திருவொற்றியூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 7120.00 | ஜநேதேநபுதி | 81% | 73% |
| 6 | ஆவடி குடிநீர் வழங்கும் திட்டம் | 8329.00 | ஜநேதேநபுதி | 99% | 80% |
| 7 | ஆலந்தூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 3738.00 | ஜநேதேநபுதி | 100% | 72% |
| 8 | சென்னை நகர குடிநீர் விநியோக மேம்பாட்டு பணிகள் | 31266.00 | ஜநேதேநபுதி | 100% | 83% |
| 9 | மாதவரம் குடிநீர் வழங்கும் திட்டம் | 4507.00 | ஜபநிதி | 15% | 14% |
| 10 | மீனம்பாக்கம் குடிநீர் வழங்கும் திட்டம் | 34.14 | தமிநகுமாவ | 100% | 78% |
| 11 | ஒக்கியம் துரைப்பாக்கம் குடிநீர் வழங்கும் திட்டம் | 352.00 | தமிநகுமாவ | 100% | 69% |
| 12 | பெரும்பாக்கம் குடிநீர் வழங்கும் திட்டம் (வைப்பு தொகை) | 96.19 | வைப்பு தொகை தமிநகுமாவ | 100% | 67% |
| 13 | சோழிங்கநல்லூர் காரப்பாக்கம் குடிநீர் வழங்கும் திட்டம் - மண்டலம் 15 | 2759.00 | செபெவகு | 16% | 41% |
| 14 | ஸ்ரீ பெரும்புதூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 2736.98 | வைப்பு தொகை (யூஐடிஎஸ்எஸ்டி) | 31% | 16% |
| 15 | காரப்பாக்கம் குடிநீர் வழங்கும் திட்டம் | 1716.38 | செபெவகு | 24% | 18% |
| 16 | ஈஞ்சம்பாக்கம் குடிநீர் வழங்கும் திட்டம் | 1970.73 | செபெவகு | 34% | 62% |
| 17 | நொளம்பூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 1480.00 | செபெவகு | 15% | 20% |
| 18 | ராமாபுரம் குடிநீர் வழங்கும் திட்டம் | 2442.00 | செபெவகு | 1% | 2% |
| 19 | மணப்பாக்கம் குடிநீர் வழங்கும் திட்டம் | 1005.00 | செபெவகு | - | 0.15% |

| வ. எண். | திட்ட பணி | ஒப்பந்த மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | திட்டம்/ ஆதாரம் | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | செயல் (%) | நிதி பற்றிய (%) |
| 20 | நந்தம்பாக்கம் குடிநீர் வழங்கும் திட்டம் | 424.00 | செபெவகு | - | 0.3% |
| 21 | ஒக்கியம் துரைப்பாக்கம் குடிநீர் வழங்கும் திட்டம் | 3968.00 | செபெவகு | - | 0.04% |
| 22 | பல்லாவரம் குடிநீர் வழங்கும் திட்டம் | 9887.33 | தநாதேநபுதி - III | 1.2% | 0.4% |
| 23 | பம்மல் குடிநீர் வழங்கும் திட்டம் | 4539.00 | தநாதேநபுதி - III | 0.75% | 0.82% |
| 24 | பூந்தமல்லி புறவழிச்சாலை சந்திப்பிலிருந்து தாம்பரம் வரை 1,200 மில்லி மீட்டர் விட்டமுள்ள குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாய் பதித்தல் | 6576.20 | உகமேநிதி | 34% | 34% |
| 25 | தொர்வாய்கண்டிகை | 3561.93 | வைப்பு | 64% | 41% |
| 26 | செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பூந்தமல்லி புறவழிக் சாலை வரை 2000 மில்லி மீட்டர் விட்டமுள்ள குடிநீர் விநியோகத்திற்காக குழாய் பதித்தல் | 3967.00 | உகமேநிதி | - | 9% |
| | **கழிவுநீர் திட்டங்கள்** | | | | |
| 27 | மதுரவாயல் பாதாளச் சாக்கடைத் திட்டம் | 4691.67 | ஜநேதேநபுதி நிதி | 93% | 55% |
| 28 | போரூர் பாதாளச் சாக்கடைத் திட்டம் | 3441.29 | ஜநேதேநபுதி நிதி | 70% | 45% |
| 29 | அம்பத்தூர் பாதாளச் சாக்கடைத் திட்டம் (பகுதி-3) ஜநேதேநபுதி / அரசு மற்றும் உ.அ | 12384.00 | ஜநேதேநபுதி நிதி | 89% | 65% |
| 30 | அம்பத்தூர் பாதாளச் சாக்கடைத் திட்டம் (பகுதி-1) மீதமுள்ள பணிகள் | 4130.68 | தநாதேநபுதி - III | 97% | 89% |
| 31 | உள்ளகரம் புழுதிவாக்கம் பாதாளச் சாக்கடைத் திட்டம் (நஉஅ) | 2780.13 | ஜநேதேநபுதி நிதி | 80% | 58% |
| 32 | பெருங்குடி பாதாளச் சாக்கடைத் திட்டம் (நஉஅ) | 2195.04 | ஜநேதேநபுதி நிதி | 75% | 46% |
| 33 | பள்ளிக்கரணை பாதாளச் சாக்கடைத் திட்டம் (நஉஅ) | 4611.68 | ஜநேதேநபுதி நிதி | 84% | 88% |
| 34 | திருவெற்றியூர் பாதாளச் சாக்கடைத் திட்டம் (நஉஅ) | 5475.00 | தநாதேநபுதி - III | 78% | 76% |

| வ. எண். | திட்ட பணி | ஒப்பந்த மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | திட்டம்/ ஆதாரம் | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | செயல் (%) | நிதி பற்றிய (%) |
| 35 | மாதவரம் பாதாளச சாக்கடைத் திட்டம் (நஉஅ) | 4133.00 | தநாதேநபுதி-III | 100% | 89% |
| 36 | ஆவடி பாதாளச் சாக்கடைத் திட்டம் (நஉஅ) | 17352.00 | ஜநேதேநபுதி நிதி | 89% | 76% |
| 37 | திருமழிசை பாதாளச் சாக்கடைத் திட்டம் (நஉஅ) | 1624.33 | ஜநேதேநபுதி நிதி | 99% | 77% |
| 38 | தாம்பரம் பாதாளச் சாக்கடைத் திட்டம் (நஉஅ) | 14464.00 | ஜநேதேநபுதி நிதி | 52% | 35% |
| 39 | கோயம்பேடு (எஸ்டிபி) | 7670.71 | ஜநேதேநபுதி நிதி | 83% | 79% |
| 40 | நெசப்பாக்கம் - 54 எம்.எல்.டி | 4843.52 | ஜநேதேநபுதி நிதி | 98% | 87% |
| 41 | தகவல் தொழில்நுட்ப பாதாளச் சாக்கடைத் திட்டம் - 14 நீரகற்று நிலையங்கள் | 2875.00 | உகமேநிதி | 39% | 28% |
| 42 | மீனம்பாக்கம் பாதாளச் சாக்கடைத் திட்டம் | 522.00 | செபெவகு | 61% | 57% |
| 43 | சோழிங்கநல்லூர் மற்றும் காரம்பாக்கம் பாதாளச் சாக்கடைத் திட்டம் | 8726.00 | செபெவகு | 16% | 47% |
| 44 | சோழிங்கநல்லூர் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை - 18 எம்.எல்.டி | 1770.00 | ஜநேதேநபுதி நிதி | 23% | 16% |
| 45 | ஒக்கியம் துறைப்பாக்கம் பாதாளச் சாக்கடைத் திட்டம் | 176.00 | தமிநகுமாவ | 99% | 60% |
| 46 | ஸ்ரீபெரும்புதூர் பாதாளச் சாக்கடைத் திட்டம் | 3352.36 | வைப்பு(யூஐடி எஸ்எஸ்டி) | 38% | 46% |
| 47 | கத்திவாக்கம் பாதாளச் சாக்கடைத் திட்டம் | 7509.95 | செபெவகு | 26% | 20% |
| 48 | இராமபுரம் பாதாளச் சாக்கடைத் திட்டம் | 4165.00 | செபெவகு | 2% | 1.5% |
| 49 | சென்னை நகர நீர் வழிப்பாதைகளில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்காக பல்வேறு இடங்களில் கழிவுநீர் பிரதான குழாய்களை விரிவுபடுத்துதல். | 13608.00 | உகமேநிதி | 50% | 11.27% |

## 100எம்.எல்.டி. கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் - நெம்மேலி

மக்கள் தொகை - 15.00,000 தெருக்கள் - 2794

**அரசு ஆணை எண் 108, தேதி 29.06.2003.**

| நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (கோடியில்) |
|---|---|---|
| மத்திய அரசு | 97.46% | 519.82 |
| தமிழக அரசு | 2.54% | 13.56 |
| மொத்தம் | **100%** | **533.38** |

| திட்ட மதிப்பீடு (கோடியில்) | ஒப்பந்த மதிப்பீடு (கோடியில்) | ஒப்பந்த காலம் (மாதத்தில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டம் முடிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|---|
| 740.52 | 533.38+500.30 | 24 | 30.12.09 | 23.02.10 | 31.12.13 |

### திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 09-10 | 10-11 | 11-12 | 12-13 | 13-14 | 14-15 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| வழங்குதல் | 100% | - | 48% | 50% | 2% | - | - | 100% |
| நிறுவுதல் | 100% | - | 20% | 60% | 10% | - | - | 100% |
| கட்டமைப்பு | 100% | 5% | 65% | 20% | 10% | - | - | 100% |

### நிதி முன்னேற்றம் (இலட்சத்தில்)

| பொருள் | 10 - 11 | 11 - 12 | 12 - 13 | 13 - 14 | 14 - 15 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 22550 | 11300 | 11000 | 12118 | 17288 | 74256 |
| செலவு | 16465 | 19177 | 16868 | 6666 | 5589 | 64765 |

## கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து குடிநீரை எடுத்துச் செல்லும் கட்டமைப்பு - (நெம்மேலி)

நிதி : மத்திய அரசு

**அரசு ஆணை எண் 108, நாள் 29.06.2009.**

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டம் முடிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|---|
| 14561.60 | 12249.70 | 20 | 30.12.09 | 24.02.10 | ஜனவரி 2013 |

திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 10 - 11 | 11 - 12 | 12 - 13 | 13 - 14 | 14 - 15 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| குழாய் பதித்தல் (மீட்டரில்) | 64370 | 45920 | 12320 | 6130 | - | - | 64370 |
| நெகீழ்நிலை தொட்டி கட்டுதல் மற்றும் நீரேற்று நிலையம் கட்டுதல் ( 4 எண்ணிக்கை) | 100% | 42% | 50% | 8% | - | - | 100% |

நிதி முன்னேற்றம் (இலட்சத்தில்)

| பொருள் | 08 - 09 | 09 - 10 | 10 - 11 | 11 - 12 | 12 - 13 | 13 - 14 | 14 - 15 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | | | 7450 | 3700 | 3100 | - | - | 14250 |
| செலவு | | | 7422 | 3729 | 1267 | 1855 | 109 | 14383 |

## மாதவரம் குடிநீர் வழங்கல் திட்டம்

மக்கள் தொகை - 3,83,433 தெருக்கள்-607

நிதி : ஜப்பான் பன்னாட்டு நிதி நிறுவனம்

**அரசு ஆணை எண் 201, நாள் 11.07.2012 ரூபாய் 55.00 கோடி**

| வருடம் | | நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| அடிப்படை வருடம் | 2012 | ஜ.ப.நி.நி முதலீட்டு மானியத்தின் கீழ் | 30% | 1650 |
| இடைப்பட்ட வருடம் | 2027 | த.நா.வா.தி. கடன் உதவி | 60% | 3300 |
| உச்ச வருடம் | 2042 | சென்னைக் குடிநீர் வாரிய நிதி | 10% | 550 |
| | | மொத்தம் | 100% | 5500 |

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில் | ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டம் முடிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|---|
| 5500 | 4507 | 24 | 17.05.2012 | 17.10.2012 | முன்னேற்றத்தில் உள்ளது |

### திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 12 - 13 | 13 - 14 | 14 - 15 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பகிர்மான குழாய்கள் பொருத்துதல் (மீட்டரில்) | 149253 | - | 47901 | 21185 | 69086 |
| குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாய் (மீட்டரில்) | 6690 | - | - | 222 | 222 |
| வீட்டு குழாய் இணைப்புகள் (எண்ணிக்கையில்) | 19737 | - | 5355 | 2015 | 7472 |
| மேல் நிலை தொட்டி கட்டுதல் (எண்கள்) | 6 | 2% | 7% | 21.08% | 28.08% |
| கீழ் நிலை தொட்டி கட்டுதல் (எண்கள்) | 4 | 5% | 19% | 58% | 77% |
| நீரேற்று நிலையம் கட்டுதல் (எண்ணிக்கை) | 2 | - | - | 11% | 11% |

### நிதி முன்னேற்றம் (இலட்சத்தில்)

| பொருள் | 12 - 13 | 13 - 14 | 14 - 15 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 455.00 | 1111.00 | 430.00 | 1541.00 |
| செலவு | 455.48 | 780.46 | 1474.84 | 2260.80 |

## ஒக்கியம் - துரைப்பாக்கம் குடிநீர் வழங்கல் திட்டம்

மக்கள் தொகை - 41,211

நிதி : தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய நிதி

வாரிய தீர்மான எண் 22/2012

| நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய நிதி | 100% | 353 |
| மொத்தம் | 100% | 353 |

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில் | ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டம் முடிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|---|
| 353 | 352 | 6 | 21.06.2012 | 03.10.2012 | முன்னேற்றத்தில் உள்ளது |

### திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 12 - 13 | 13 - 14 | 14 - 15 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பிரதானபகிர்மான குழாய் (மீட்டரில்) | 5548 | 4784 | 764 | - | 5548 |
| விசைக் குழாய் (மீட்டரில்) | 1500 | 54.6 | 1445.4 | - | 1500 |
| கீழ் நிலை தொட்டி(2) மற்றும் நீரேற்று நிலையம் கட்டுமானம் | 100% | 30% | 70% | - | 100% |

### நிதி முன்னேற்றம் (இலட்சத்தில்)

| பொருள் | 12 - 13 | 13 - 14 | 14 - 15 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 353.00 | - | - | 353.00 |
| செலவு | 82.00 | 161.27 | 101.68 | 344.95 |

## மீனம்பாக்கம் குடிநீர் வழங்கல் திட்டம்

மக்கள் தொகை - 14,629 (வருடம் 2044) தெருக்கள் - 16

நிதி : சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் (2011-2012)

அரசு ஆணை எண் 31, நநி & குவ நாள் 07.02.2012

| நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| தமிழக அரசு | 100% | 59 |
| மொத்தம் | 100% | 59 |

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில் | ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டம் முடிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|---|
| 59 | 34.14 | 12 | 07.09.2012 | 28.11.2012 | 30.04.2015 |

திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 12 - 13 | 13 - 14 | 14 - 15 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பிரதான பகிர்மான குழாய் (மீட்டரில்) | 1885 | 370 | 1515 | - | 1885 |
| வீட்டுக் குழாய் இணைப்பு (எண்ணில்) | 250 | - | 410 | - | 410 |

நிதி முன்னேற்றம் (இலட்சத்தில்)

| பொருள் | 12 - 13 | 13 - 14 | 14 - 15 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 2817.00 | 7136.00 | - | 9953 |
| செலவு | 7.55 | 38.64 | 6.90 | 53.09 |

## பெரும்பாக்கம் குடிநீர் வழங்கல் திட்டம்

நிதி : தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய நிதி

வாரிய தீர்மான எண் 22/2012

| நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் | 100% | 107 |
| மொத்தம் | 100% | 107 |

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டம் முடிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|---|
| 107 | 96.19 | 6 | 19.07.2012 | 17.08.2012 | 30.08.2014 |

திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 12 - 13 | 13 - 14 | 14 - 15 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|
| குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாய் (மீட்டரில்) | 2520 | 1920 | 600 | - | 2520 |

நிதி முன்னேற்றம் (இலட்சத்தில்)

| பொருள் | 11 - 12 | 12 - 13 | 13 - 14 | 14 - 15 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 121.00 | - | - | - | 121.00 |
| செலவு | - | - | 71.25 | 7.77 | 79.02 |

## அம்பத்தூர் குடிநீர் வழங்கல் திட்டம்

மக்கள் தொகை - 4,42,252 தெருக்கள் - 2350

நிதி : ஜநேதேநபுதி

அரசு ஆணை எண் 330, நநி & குவ நாள் 17.07.2009, ரூ.26708 இலட்சம்

| வருடம் | | நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| அடிப்படை வருடம் | 2009 | மத்திய அரசு | 35% | 9347.80 |
| இடைப்பட்ட வருடம் | 2024 | மாநில அரசு | 15% | 4006.20 |
| உச்ச வருடம் | 2039 | உள்ளாட்சி அமைப்பு | 50% | 13354.00 |
| | | மொத்தம் | 100% | 26708.00 |

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில் | ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டம் முடிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|---|
| 20480 | 18276.62 | 24 | 30.09.09 | 28.10.09 | 30.06.13 |

### திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 09-10 | 10-11 | 11-12 | 12-13 | 13-14 | 14-15 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| பகிர்மான குழாய்கள் பொருத்துதல் (மீ.) | 502373 | 89074 | 320562 | 73148 | 19492 | 97 | - | 502373 |
| குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாய் (மீட்டரில்) | 17726 | 0 | 8992 | 4191 | 4483 | 60 | - | 17726 |
| வீட்டு குழாய் இணைப்பு (எண்ணிக்கையில்) | 48800 | 0 | 26397 | 19285 | 3093 | 25 | - | 48800 |
| மேல் நிலை தொட்டி கட்டுதல் (எண்கள்) | 22 | 1% | 73% | 18% | 8% | - | - | 100% |
| கீழ் நிலை தொட்டி கட்டுதல் (எண்கள்) | 11 | 2% | 48% | 40% | 10% | - | - | 100% |
| நீரேற்று நிலையம் கட்டுதல் (எண்ணிக்கை) | 19 | 2% | 14% | 74% | 10% | - | - | 100% |

### நிதி முன்னேற்றம் (இலட்சத்தில்)

| பொருள் | 09 - 10 | 10 - 11 | 11 - 12 | 12 - 13 | 13 - 14 | 14 - 15 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 3100.00 | 9450.00 | 1360.00 | 4117.90 | 1227.45 | 3575.45 | 22830.8 |
| செலவு | 4364.48 | 7798.54 | 3048.68 | 979.30 | 893.91 | 1541.73 | 18626.64 |

## நெற்குன்றம் குடிநீர் வழங்கல் திட்டம்

மக்கள் தொகை - 1,20,869 தெருக்கள் - 562

நிதி : ஜநேநேதேநபுதி

அரசு ஆணை எண்.(எம் எஸ் 43, நநி & குவ நாள் 26.02.10)

| வருடம் | | நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| அடிப்படை வருடம் | 2008 | மத்திய அரசு | 35% | 670.95 |
| இடைப்பட்ட வருடம் | 2023 | மாநில அரசு | 15% | 287.55 |
| உச்ச வருடம் | 2038 | உள்ளாட்சி அமைப்பு | 50% | 958.50 |
| | | மொத்தம் | 100% | 1917.00 |

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில் | ஒப்பந்த காலம் (இலட்சத்தில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டம் முடிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|---|
| 1730 | 1460.22 | 18 | 28.07.10 | 24.01.11 | முன்னேற்றத்தில் உள்ளது |

### திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 11 - 12 | 12 - 13 | 13 - 14 | 14 - 15 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| பகிர்மான குழாய்கள் பொருத்துதல் (மீட்டரில்) | 66540 | 48388 | 2583 | 8960 | 756 | 60687 |
| குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாய் (மீட்டரில்) | 1000 | - | - | - | - | - |
| விசைக் குழாய் (மீட்டரில்) | 3672 | - | - | - | - | - |
| மேல் நிலை தொட்டி கட்டுதல் (எண்கள்) | 4 | 5% | 0.5% | 4% | 25.50% | 35% |
| கீழ் நிலை தொட்டி கட்டுதல் (எண்கள்) | 1 | - | - | - | 2.5% | 2.5% |

### நிதி முன்னேற்றம் (இலட்சத்தில்)

| பொருள் | 11 - 12 | 12 - 13 | 13 - 14 | 14 - 15 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 18.21 | 608.02 | 125.16 | 283.40 | 1034.79 |
| செலவு | 343.90 | 150.18 | 95.48 | 292.65 | 882.21 |

## மதுரவாயல் குடிநீர் வழங்கல் திட்டம்

மக்கள் தொகை - 1,31,200 தெருக்கள் - 740

நிதி ஜநேதேநபுதி

**அரசு ஆணை எண் 407, நாள் 31.08.2007, ரூ.2330 இலட்சம்**

| வருடம் | நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| அடிப்படை வருடம் 2008 | மத்திய அரசு | 35% | 815.50 |
| இடைப்பட்ட வருடம் 2023 | மாநில அரசு | 15% | 349.50 |
| உச்ச வருடம் 2038 | உள்ளாட்சி அமைப்பு | 50% | 1165.00 |
| | **மொத்தம்** | **100%** | **2330.00** |

| சிப்பம் | திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டம் முடிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|---|---|
| I | 233 | 275.27 | 15 | 05.05.08 | 22.08.08 | பணி முடிவடைந்தது |
| II | 1910 | 1415.40 | 24 | 25.03.10 | 23.04.10 | முன்னேற்றத்தில் உள்ளது |

திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 08-09 | 09-10 | 10-11 | 11-12 | 12-13 | 13-14 | 14-15 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகிர்மான குழாய் (மீட்டரில்) | 93763 | - | - | 35410 | 52790 | 5536 | - | - | 93763 |
| விசைக் குழாய் (மீட்டரில்) | 577 | 500 | 77 | - | - | - | - | - | 577 |
| வீட்டு குழாய் இணைப்பு (எண்ணிக்கையில்) | 11407 | - | - | 250 | 2335 | 7495 | 1327 | - | 11407 |
| மேல் நிலை தொட்டி கட்டுதல் (எண்ணில்) | 4 | - | - | 47% | 23% | 29% | 1% | - | 100% |

நிதி முன்னேற்றம் (இலட்சத்தில்)

| பொருள் | 08 - 09 | 09 - 10 | 10 - 11 | 11 - 12 | 12 - 13 | 13 - 14 | 14 - 15 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 200.00 | 100.00 | 370.00 | 125.00 | 439.99 | 708.13 | - | 1943.12 |
| செலவு | 6.60 | 473.64 | 501.03 | 388.74 | 288.03 | 177.08 | - | 1835.12 |

## உள்ளகரம் - புழுதிவாக்கம் குடிநீர் வழங்கல் திட்டம்

மக்கள் தொகை - 1.09.789 தெருக்கள் - 497

நிதி : ஜநேதேநபுதி

அரசு ஆணை எண் 619, நாள் 20.12.2007, ரூ.2424 இலட்சம்

| வருடம் | நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| அடிப்படை வருடம் 2008 | மத்திய அரசு | 35% | 848.40 |
| இடைப்பட்ட வருடம் 2023 | மாநில அரசு | 15% | 363.60 |
| உச்ச வருடம் 2038 | உள்ளாட்சி அமைப்பு | 50% | 1212.00 |
| | மொத்தம் | 100% | 2424.00 |

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டம் முடிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|---|
| 2242 | 1750 | 24 | 21.06.10 | 09.07.10 | பணி நடந்து கொண்டிருக்கிறது |

### திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 10 - 11 | 11 - 12 | 12 - 13 | 13 - 14 | 14 - 15 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| பிரதான பகிர்மான குழாய்கள் பொருத்துதல் (மீட்டரில்) | 80300 | 16849 | 46725 | 1520 | 10666 | 4141 | 79901 |
| விசைக் குழாய் (மீட்டரில்) | 5650 | - | 4758 | 392 | 440 | 25 | 5615 |
| குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாய் (மீட்டரில்) | 4050 | - | 1178 | 1566 | 230 | 876 | 3850 |
| மேல் நிலை தொட்டி கட்டுதல் (6 எண்ணிக்கை) | 100% | 7% | 36% | 15% | 12% | 25.50% | 95.50% |
| கீழ் நிலை தொட்டி கட்டுதல் (6 எண்ணிக்கை) | 100% | 30% | 41% | 29% | - | - | 100% |

### நிதி முன்னேற்றம் (இலட்சத்தில்)

| பொருள் | 08 - 09 | 09 - 10 | 10 - 11 | 11 - 12 | 12 - 13 | 13 - 14 | 14 - 15 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 303.00 | - | 314.80 | 671.22 | 162.51 | - | 390.71 | 1842.24 |
| செலவு | - | - | 347.00 | 565.92 | 332.58 | 54.63 | 258.22 | 1558.35 |

## திருவொற்றியூர் குடிநீர் வழங்கல் திட்டம்

மக்கள் தொகை - 3.78.000 தெருக்கள் - 1235

நிதி : ஜநேதேநபுதி

அரசு ஆணை எண் 46, நறி & குவநாள் 02.06.09, ரூ. 8511.70 இலட்சம்

| வருடம் | நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| அடிப்படை வருடம் 2008 | மத்திய அரசு | 35% | 2979.10 |
| இடைப்பட்ட வருடம் 2023 | மாநில அரசு | 15% | 1276.75 |
| உச்ச வருடம் 2038 | உள்ளாட்சி அமைப்பு | 50% | 4255.85 |
| | மொத்தம் | 100% | 8511.70 |

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில் | ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டம் முடிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|---|
| 8800 | 7120 | 24 | 06.05.10 | 20.07.10 | 15.07.15 |

### திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 10 - 11 | 11 - 12 | 12 - 13 | 13 - 14 | 14 - 15 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| பகிர்மான குழாய் (மீட்டரில்) | 172775 | 19440 | 98805 | 35817 | 13655 | 5018 | 172735 |
| குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாய் (மீட்டரில்) | 14220 | - | 4295 | 3024 | 5472 | 1429 | 14220 |
| கூட்டு குழாய் இணைப்பு (எண்கள்) | 22719 | - | 9990 | 3550 | 191 | - | 13731 |
| குடிநீர் பகிர்மான நிலையம் (4 எண்கள்) | 100% | 3% | 27% | 43% | 2% | 0% | 75% |

### நிதி முன்னேற்றம் (இலட்சத்தில்)

| பொருள் | 08 - 09 | 09 - 10 | 10 - 11 | 11 - 12 | 12 - 13 | 13 - 14 | 14 - 15 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 1064.00 | - | - | 2185.84 | - | - | 2978.36 | 6228.20 |
| செலவு | - | - | 2359.33 | - | 3040.67 | 994.00 | 1004.53 | 7398.53 |

## ஆவடி குடிநீர் வழங்கல் திட்டம்

### 2013–14ல் கொடுங்கையூர் 110 எம்.எல்.டி. கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தின் பயோ கேஸ் இயந்திரம் மூலம் பெறப்பட்ட மின்சாரத்தின் அளவு

| மாதாந்திர இயக்கம் | மின்சார பயன்பாடு கசடு இயந்திரத்தின் மூலம் கிலோவாட்டில் மணித்துளிகள் | மின்சார வாரியத்தின் செலவு மெகாவாட்டில் மணித்துளிகள் (ரூ.) | மொத்த சேமிப்பு கசடு இயந்திரம் மூலம் (ரூ. இலட்சங்களில்) |
|---|---|---|---|
| ஏப்ரல்-13 | 373800 | 4.50 | 16.82 |
| மே-13 | 349800 | 4.50 | 15.74 |
| ஜூன்-13 | 394900 | 4.50 | 17.77 |
| ஜூலை-13 | 350800 | 4.50 | 15.79 |
| ஆகஸ்ட்-13 | 412000 | 4.50 | 18.54 |
| செப்டம்பர்-13 | 391000 | 4.50 | 17.60 |
| அக்டோபர்-13 | 414900 | 4.50 | 18.67 |
| நவம்பர்-13 | 405300 | 4.50 | 18.24 |
| டிசம்பர்-13 | 315900 | 4.50 | 14.22 |
| ஜனவரி-14 | 386100 | 4.50 | 17.37 |
| பிப்ரவரி-14 | 371600 | 4.50 | 16.72 |
| மார்ச்-14 | 418900 | 4.50 | 18.85 |
| மொத்தம் | 4585000 | | 206.33 |

# நிதி

## நிதி விளைவுகள்

சென்னை மாநகராட்சின் விரிவாக்கத்தின் விளைவாக நடப்பு ஆண்டில் வாரியத்தின் பணி தொகுதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதால் பணியாளர் செலவினங்களும் செயல்முறை மற்றும் பராமரிப்பு செலவினங்களும் கணிசமாக அதிகரித்தமையால் வாரியம் தொடர்ச்சியாக எட்டாவது ஆண்டும் பற்றாக்குறை நிலையில் உள்ளது. இந்த ஆண்டில் மொத்த வருமானம் ரூபாய் 714.85 கோடிகளும் செலவினங்கள் ரூபாய் 897.57 கோடிகளும் விளைவாக, நிகர பற்றாக்குறை ரூபாய் 182.73 கோடிகளும் ஆகும். சென்ற ஆண்டு(2012-13) பற்றாக்குறை ரூபாய் 167.08 கோடிகள் ஆகும். இந்த ஆண்டு மழை போதுமானதாய் இல்லாததால், வாரியம், வறட்சியை சமாளித்து குடிநீர் வழங்கும் அளவை தக்க வைக்கவும் மற்றும் சென்னை நகரத்தின் கீழ் விரிவாக்கப்பட்ட தொகுதிகளின் தேவைகளை பூர்த்தி செய்யவும் அதிகமான செலவுகளை மேற்கொண்டுள்ளது.







சென்ற ஆண்டைப் போல், குடிநீர் கட்டணம் மொத்த வருவாயில் சென்னை நகர் விரிவாக்கத்தினால் செயல்முறை மற்றும் பராமரிப்புச் செலவினங்கள் பெரும் பங்கு வகிக்கிறது. இருப்பினும் வாரியம் தொடர்ந்து ஊழியர் நலத்திற்கு முன்னுரிமை கொடுத்து வருகிறது.

**2013-14 ஆண்டிற்கான வருவாய் கூறுகள்**




**2013-14 ஆண்டிற்கான செலவின கூறுகள்**




## பண நிர்வாகம்

பண நிர்வாகம் நடப்பாண்டிலும் சிறந்த முறையில் கையாளப்பட்டுள்ளது என்பது மகிழ்ச்சிகரமான செய்தியாகும். எதிர்பாராத வறட்சி மற்றும் குறைந்த சேவை அளவிலும் வாரியத்திற்கு வரவேண்டிய பணவரவு திருப்திகரமாகவே அமைந்தது. சிறந்த முறையில் ஒருங்கிணைந்த பட்டியலிடுதல் மற்றும் வசூலித்தல் ஆகியவற்றின் மேம்பாடு காரணமாகவே மேற்கண்ட சாதனைகளை அடைய முடிந்தது.

### திட்ட முதலீடுகள்

குடிநீர் வழங்குதல், கழிவு நீரகற்றுதல் பணிகளில் நுகர்வோரின் வளர்ந்து வரும் தேவையினைத் திருப்தி செய்வதென்பது வாரியத்தின் சட்டப்படியான நோக்கங்களில் ஒன்றாகும். விரிவாக்கப்பட்ட தொகுதிகளின் தேவைகளை பூர்த்தி செய்ய வாரியம் ஏற்கனவே பல வளர்ச்சிப் பணிகளை பெரும் அளவில் மேற்கொண்டுள்ளது இருந்த போதிலும் எந்த ஒரு நிலையான நிதி மேலாண்மை முறைக்கும் ஒரு வலுவான எதிர்காலத்திட்டங்கள் அனைத்திற்கும் குறைந்த செலவுச் சுமையில் நிதி ஏற்பாடு செய்வதென்பதுவாரியத்தின் முன் உள்ள பெரும் சவாலாகும். ஏனென்றால் வாரியம் முழுவதுமாக கடன் முதலீட்டையே சார்ந்திருக்க வேண்டியதிருக்கிறது.

### பட்டியல் மற்றும் வசூல்




*31.03.2014ன் படி நிலுவையிலுள்ள கடன்கள்*

சென்னைக் குடிநீர் வாரியத்தின் முக்கிய வருவாய் ஆதாரம் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி மற்றும் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று சேவை கட்டணங்களாகும். சென்னை மாநகராட்சியால் மதிப்பீடு செய்யப்பட்ட கட்டணங்களுக்கான ஆண்டு மதிப்பீட்டில் 7% குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரியாக ஆண்டுதோறும் சென்னைக் குடிநீர் வாரியத்தால் வசூல் செய்யப்பட்டு வருகிறது. சென்னை மாநகராட்சி ஒவ்வொரு முறை, ஆண்டு மதிப்பீட்டினை உயர்த்தும் போதும் சென்னைக் குடிநீர் வாரியத்தின் வரி வசூல் ஆதாரமும் உயரும். 2013-14 வருடத்திற்கான சென்னைக் குடிநீர் வாரியத்தின் ஒரு ஆண்டிற்கான குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி கேட்பு தொகை ரூ. 111.42 கோடியாகும்.

கட்டணவீதக் கொள்கையே முதுகெலும்பாக விளங்கும். வாரியத்தின் நுகர்வோர்களின் வகைப்பாடு (1) வீட்டு உபயோகம் (2) பகுதி வணிகம் (3) வணிகம் - குடிநீர் முனைப்பில்லாத மற்றும் குடிநீர் முனைப்புள்ள (4) நிறுவனங்கள் (5) நகராட்சி பெருமளவு பயனீட்டு வழங்கல் ஆகிய வகைப்பாடுகளுடன் பொருத்தமான கட்டணங்கள் வெவ்வேறு வகையான நுகர்வோரிடமிருந்து வசூலிக்கப் படுகிறது 2013-14 வருடத்திற்கான சென்னைக் குடிநீர் வாரியத்தின் ஒரு ஆண்டிற்கான குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று சேவைக் கட்டண கேட்புத் தொகை ரூ. 260.99 கோடியாகும். அதிகப்படியான வருவாயினை ஈட்டுவதற்கும் மற்றும் வசூல் திறனை மேம்படுத்தவும் எல்லாவிதமான முயற்சிகளும் எடுக்கப்பட்டு பட்டியல் மற்றும் வசூல் பிரிவு ஒழுங்குப்படுத்தப்பட்டிருக்கிறது.

# தன்னாண்மை தணிக்கையாளர் அறிக்கை

**எஸ். வெங்கட்ராம் மற்றும் குழுமம்**
பட்டயக் கணக்காளர்கள்

எண். 218, டி.டி.கே. சாலை,
ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018.

தொலைபேசி எண் : 2499 2155 / 6 / 7
குடியிருப்பு எண் : 24986292
தொலைநகலி : 24670343
மின் அஞ்சல் : svco@vsnl.com

## தணிக்கையாளர் அறிக்கை

### சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய இயக்குநர்களுக்கு

பெறுநர்
வாரிய இயக்குநர்கள்,
சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்,
சென்னை.

**நிதி நிலை மீதான அறிக்கை**

1. நாங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் 2014 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாளின் நிலவரப்படி இருப்பு நிலைக் குறிப்பினையும், அந்நாளில் முடிவுற்ற ஆண்டின் வரவு செலவுக் கணக்கையும், அதில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைகளையும், சுருக்கமான குறிப்பிடத்தக்க கணக்கு முறைக் கோட்பாடுகளையும் மற்றும் கணக்குகள் மீதான குறிப்புகளையும் தணிக்கை செய்து முடித்துள்ளோம்.

**நிதி நிலை அறிக்கைக்கு நிர்வாகத்தின் பொறுப்பு**

2. இந்த நிதிநிலை அறிக்கை தயாரிப்பிற்கு சென்னைக் குடிநீர் வாரிய நிர்வாகமே பொறுப்பாகும். இவ்வறிக்கையில் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய 1978 ஆம் வருட சட்டப்படியும், இந்தியவால் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்கியல் கோட்பாடுகள், கணக்கியல் தரநிலைகள் பொருத்தமான கணக்கு வைப்பு தரப்படியும், உண்மையான மற்றும் நியாயமான நோக்குடன் சென்னை குடிநீர் வாரியத்தின் நிதி நிலைமையும், நிதி செயலாக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நிதிநிலை அறிக்கையை உண்மையான மற்றும் நியாயமான நோக்குடன் தயாரித்து முன்னிலைப்படுத்துவதற்கு தொடர்பான வடிவமைத்தல், செயற்படுத்துதல் மற்றும் உள்கட்டுப்பாடு பராமரித்தல் நிர்வாகத்தின் பொறுப்பில் அடங்கும். தவறாகவோ அல்லது மோசடி காரணமாகவோ இந்த நிதிநிலை அறிக்கையில் தவறான தகவல் ஏதும் சேர்க்கப்படவில்லை. நிதிநிலை அறிக்கையில் மோசடி மற்றும் பிழை போன்ற இடர் மதிப்பீடு செய்வதற்கு அறிக்கை தயாரிக்கும் போது சூழ்நிலைக்கேற்ப நடைமுறைகள் பின்பற்றி உரியவாறு வடிவமைக்கப்பட்ட தக்க உட்கட்டமைப்பை நிர்வாகத்தின் அனைத்து நடவடிக்கைகளும் பயனுள்ளதாக இருக்கும் வகையில் நடைமுறைப்படுத்தி உள்ளது.

**தணிக்கையாளர்களின் பொறுப்பு**

3. இந்த நிதிநிலை அறிக்கையின் மீது எங்களது தணிக்கையை அடிப்படையாக வைத்து கருத்தைத் தெரிவிப்பது எங்களது பொறுப்பாகும். நாங்கள், இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிலையத்தின் பொதுவான ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள தணிக்கையின் தரத்தில் தணிக்கை செய்துள்ளோம். இந்த நிதிநிலை

அறிக்கையில் தவறான தகவல்கள் எதுவும் சேர்க்கப்படவில்லை என்று நியாயமாக உறுதியளிக்கும் வகையில் நாங்கள் ஒழுக்கவியல் தேவைக்கேற்ப தணிக்கையைத் திட்டமிட்டு, நடத்தி முடிக்க இந்த தணிக்கைத் தரங்கள் வலியுறுத்துகின்றன.

4. நிதிநிலை அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள தொகைகளுக்கும், வெளிப்படுத்தப்பட்ட விவரங்களுக்கும் தகுந்த ஆதாரங்கள் உள்ளது என்பதை சோதனை அடிப்படையில் பரிசீலனை செய்வதும் தணிக்கையில் அடங்கும். தணிக்கையாளர்களின் தீர்ப்பானது, நடைமுறை தெரிவு சார்ந்து, நிதி நிலை அறிக்கையில் எந்த வித முறைகேடுகளோ, இடையூறுகளோ, ஏமாற்றமோ, பிழையோ இன்றி மதிப்பிடப்பட்டுள்ளது என்பதை சார்ந்தது. மேற்படி இன்னலின்றி மதிப்பீட்டால், உள்தணிக்கை கட்டுப்பாடு வாரியத்தின் முன்னேற்பாட்டில் நிதிநிலை அறிக்கை, தணிக்கை நடைமுறை சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆனால் வாரியத்தின் உள் கட்டுப்பாடு குறித்த பயன்பாட்டின் கருத்தினை வெளிப்படுத்த நோக்கமில்லை. கணக்கு கோட்பாடுகளையும், நிர்வாகத்தால் செய்யப்பட்ட முக்கிய மதிப்பீடுகளையும் ஆய்வதுடன் ஒட்டு மொத்த நிதிநிலை அறிக்கையின் வெளிப்பாட்டை சீர்தூக்கிப் பார்த்தலும் இத்தணிக்கையில் அடங்கும்.

5. கணக்கியல் விதிகள் மற்றும் தணிக்கை தரத்திற்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டும் தணிக்கை அறிக்கைக்குச் சேர்ப்பதற்கான விஷயங்களையும் கருத்தில் கொண்டுள்ளோம்.

6. நாங்கள் மேற்கொண்ட தகுதியான தணிக்கை எங்களது கருத்துகளுக்கு அடிப்படையான, நம்பிக்கைக்கும் ஏற்ற வகையில் தேவையான அனைத்து தணிக்கை ஆதாரங்களையும் பெற்றுள்ளோம்.

**கீழ்க்கண்ட குறிப்புகளின் மீது கவனம் ஈர்க்கப்படுகிறது**

1. அட்டவணை-க்யூ இருப்பு நிலைப் பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் I - 3ஆ - மார்ச் 31, 2014 ஆம் ஆண்டு வரவு செலவு கணக்கில், சென்னை குடிநீர் வாரியம், சென்னை மெட்ரோரயில் நிறுவனத்திற்கு அதன் நிலத்தை விற்பனை செய்ததற்கான ஆதாயம் ரூபாய் 90.34 கோடி குறித்து அங்கீகரிக்கப்படாததால் அது குறித்து வரவு செலவு கணக்கு அறிந்து கொள்ள முடியாததின் விளைவாக, மார்ச் 31, 2014 ஆம் ஆண்டின் சேர்ந்த பற்றாக்குறை வரவைவிட கூடுதல் செலவாகவும் மற்றும் அதிகப்படியான பங்களிப்பு மற்றும் திரள் பற்றாக் குறையாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

2. அ) அட்டவணை க்யூ - இருப்பு நிலைப் பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் II - 1 இ - ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்திற்காக அரசிடமிருந்து பெறப்படுகின்ற மானியம் - ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புனரமைப்பித்திட்ட வழிகாட்டுதலுக்கு எதிராகவும் இந்தியபட்டயக் கணக்காளர் நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ள தணிக்கைத் தரம் 12ன் மீறியும் அனைத்து மூலதன மானியத்திற்கும் (அரசு மானியத்தை கணக்கிடல்) தனியாக வங்கிக் கணக்கை பரமாரிக்கப்படாமலிருப்பது விதி மீறிய செயலாக உள்ளது.

ஆ) அட்டவணை க்யூ - இருப்பு நிலைப் பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் II - 1 ஊ - ii - நவம்பர் 2013 முதல் ஏப்ரல் 2014 ம் காலத்திற்கான உள்ளாட்சி மானியமான 29.93 கோடியை 2014-15ம் ஆண்டின் அரசிடமிருந்து பெற்றுக் கொண்ட மானியம், 2014 மார்ச் 31 அன்றுள்ளபடி பொறுப்புக் கணக்கில் உள்ளாட்சி மானிய வருவாய் கணக்கில் காட்டாமல் குறைக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாக அவ்வருடத்தில் பொறுப்பு மற்றும் சொத்துக்கணக்கில் அத்தொகைக்கு ஈடான குறை மதிப்பீடு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இ) அட்டவணை க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் II - 1 ஊ - ii - நவம்பர் 2013 முதல் ஏப்ரல் 2014 முடிய உள்ள காலத்திற்கான உள்ளாட்சி மானியமான 29.93 கோடியை 2014-15 ம் ஆண்டில் அரசிடமிருந்து பெற்றுக்கொண்டதானது 2014ம் ஆண்டிற்கு உரிய வரவேண்டிய தொகையாக காட்டாமலிருப்பதால் அதன் தாக்கத்தை கணக்கில் அறிய இயலவில்லை.

ஈ) அட்டவணை-க்யூ-இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு-குறிப்பு எண் II - 1எ அரசு மானியம் -

பொறுப்புரிமை மாற்ற நிதியிலிருந்து செலவுக்கான ரூபாய் 210.31 கோடியை வரவு செலவு கணக்கில் தெரியப்படுத்துவதற்கு பதிலாக நிதி இருப்பிலிருந்து ஈடு செய்தது குறித்தான விளைவினை அதற்கான கணக்கில் உறுதிப்படுத்த இயலவில்லை.

உ) அட்டவணை க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் II - 1 எ (ii) அரசிடமிருந்து மானியம் - பிப்ரவரி 2014 மற்றும் மார்ச் 2014 ம் மாதங்களில் பெற்ற ரூ. 7.76 கோடிக்கான மானியத்தை கணக்கில் கொண்டு வராமலிருப்பது தணிக்கை தரம் - 4லினை மீறிய செயலாகும் மற்றும் இருப்பு நிலைகுறிப்பு தேதிக்கு பின்பு நடைபெற்ற இச்சம்பவம் இந்தியக் கணக்காளர் நிலையத்தால் அறிவிக்கப்பட்ட தணிக்கை தரம் - 12யினை மீறி உள்ளது. அதன் விளைவாக அரசு மானியம் பொறுப்புகள் தலைப்பின் கீழ் அதிகார பகிர்வு மற்றும் நடப்பு சொத்துக்கள் அட்டவணை இடப்பட்ட வங்கி நடப்பு கணக்கில் குறைவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊ) அட்டவணை க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் II - 2 - அரசு மானியம், பெருநகர வளர்ச்சி திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்திற்கான கூடுதல் மைய உதவி நெம்மேலி கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் மற்றும் இதர திட்டங்களுக்கு இந்த நடப்பு ஆண்டு பெறப்பட்ட தொகை 369.49 கோடி, பங்குகளுக்குப் பதிலாக அரசு மானியமாக கருதப்படுவது குறித்த இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் பிறப்பித்த கணக்கு வைப்பு முறை (திருத்திய) 12ன் படி, அதிகப்படியாக மானியம் பொறுப்பிலும் குறைவாக பங்குகளிலும் காட்டப்பட்டுள்ளது.

3. அ) அட்டவணை க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் V - 2அ, 2ஆ, 2இ மற்றும் 2உ - மற்றைய பொறுப்புக்கள் தலைப்பில் 0.37 கோடி பற்று நிலுவை தொகை கணக்கில் சரி செய்யாமலிருப்பது 13 பேரேட்டு கணக்கில் காட்டப்பட்டுள்ள மொத்தத் தொகையான ரூ. 105.26 கோடி வரவு இருப்புக் கணக்கில் காட்டப்பட்டுள்ளது. அதன் தாக்கம் எவ்வித விளைவு உண்டு பண்ணும், எனத் தீர்மானிக்க முடியவில்லை.

ஆ) அட்டவணை க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் V - 2 ஊ- மற்றைய பொறுப்புக்கள் - மற்றவை - தலைப்பில் ரூ. 62,799/- க்கான தொழிலாளர் காப்புறுதிற்காக ஒப்பந்தத் தொழிலாளருக்கு செலுத்த வேண்டிய தொகை நீண்ட நாட்களாக கணக்குத் தீர்க்காமலிருப்பதன் விளைவாக பொறுப்புக் கணக்கில் அதிகப் படியான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

4. அ) அட்டவணை க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் VI - 1 - நிலையான சொத்துக்கள் 2013-14 ஆம் நிதி ஆண்டில், கூடுதலாக சேர்கின்ற நிலையான சொத்துக்களின் (முன்னேற்ற திட்டங்கள்) பேரேட்டிலுள்ள சம்பந்தப்பட்ட கணக்குக்குறியீட்டு எண்ணில் காணப்படும் இருப்புத் தொகைக்கு எதிராக திட்டங்கள் செயல்படுத்தும் துறை பதிவேடுகளில் காணப்படும் இருப்புத்தொகையையும் ஒத்திசைவு செய்யாத காரணத்தால் கணக்கில் ஏற்படும் விளைவை தீர்மானிக்க இயலவில்லை.

ஆ) அட்டவணை க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் VI - 2 - நிலையான சொத்துக்கள் - ஒவ்வொரு தலைப்பில் முன்னேற்றத் திட்டங்களுக்கான கணக்குக் குறியீட்டு எண்ணிலுள்ள இருப்புத் தொகை( ரூ. 3052.40 கோடி)க்கும் சம்பந்தப்பட்ட திட்டத்துறைக்கான பதிவேடுகளிலுள்ள இருப்பு (ரூ. 3164.28 கோடி) ஒத்திசைவு செய்யாத காரணத்தால் கணக்கில் ஏற்படும் விளைவை தீர்மானிக்க இயலவில்லை.

இ) அட்டவணை க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்புகள்- குறிப்பு எண் VI- 3 - நிலையான சொத்துக்கள் - ஆறுபகுதி அலுவலங்களைச் சேர்த்து நிலையான சொத்துக்கள் மற்றும் முன்னேற்றத் திட்டங்களுக்கான இருப்புத் தொகையாக முறையே ரூ. 4.51 கோடி மற்றும் 0.16 கோடிக்கும் பகுதி அலுவலகம் ஒன்றின் கணக்கில் நிலையான சொத்துக்கணைக்கில் இருப்பு ரூ. 2.47(வரவு) இலட்சங்கள் ஒத்திசைவு செய்யாத காரணத்தால், கணக்கில் ஏற்படும் தாக்கத்தை தீர்மானிக்க இயலவில்லை.

ஈ) அட்டவணை க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்புகள் - குறிப்பு எண் VI- 7- நிலையான சொத்துக்கள் - மொத்த ரூபாய் 348.30 கோடிக்கான 530 முன்னேற்றத் திட்டங்களுக்கான கணக்கில் எவ்வித நடவடிக்கையோ, முன்னேற்றமோ 2012-13 மற்றும் 2013-14 ஆண்டுகளில் இல்லாமல் உள்ளது. மற்றும் கணக்கு முறைக்கோட்பாடுகளின் தற்காலிக விகிதமுறையில் தேய்மானத்திற்கு என்று எவ்வித ஒதுக்கீடும் செய்யாமலிருப்பதால், கணக்கில் ஏற்படும் தாக்கத்தை தீர்மானிக்க இயலவில்லை.

உ) அட்டவணை க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்புகள் - குறிப்பு எண் VI- 8- நிலையான சொத்துக்கள் - நிலையான சொத்துக்கள் - முன்பிருந்த உள்ளாட்சி அமைப்புக்கள் சில நிலையான சொத்துக்கள் மீது அவர்களுக்கு உரிமை இல்லாத நிலையில் பயன் படுத்தியதால் சென்னைக் குடிநீர் வாரியம் அதற்குண்டான இழப்பீட்டுத் தொகையை உண்மை வாரிசுதாரருக்கு செலுத்திய போதிலும் சென்னைக் குடிநீர் வாரியம் பெயரில் இன்னும் அச்சொத்துரிமை மாற்றாமலிருப்பதால் கணக்கில் ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

ஊ) அட்டவணை க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் VI- 9- நிலையான சொத்துக்கள் - வறட்சி நிவாரணப் பணிகள் தலைப்பில் உள்ள நிலையான சொத்துக்களின் மதிப்பு ரூ. 107.85 கோடியில் வழக்கொழிந்த சொத்தின் மதிப்பை தள்ளுபடி செய்யாத காரணத்தால் நிலையான சொத்துக்களின் மதிப்பு அதிகமாகவும் செலவினக் கணக்கில் வருவாயைக்காட்டிலும் குறைவாகவும் 31.3.2014 அன்றுள்ளபடி காட்டப்பட்டுள்ளதால் அதற்கீடான தொகை பற்றாக்குறையில் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

5. அ) அட்டவணை க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் VII - 1அ- 31.3.2014 அன்றுள்ளபடி பழமையான பொருட்கள் விவரப்பட்டியலை பகுத்தாய்வது இன்மையால், வழக்கொழிந்த/பயனற்ற இருப்புக்களை கண்டு பிடிக்கும் செயல்முறை இன்மையாலும், கணக்கில் ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

ஆ) அட்டவணை க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் VII - 1ஆ - பண்டகசாலை தனிக் கணக்கிலுள்ள நிலுவை இருப்புத் தொகை ரூ. 4.97 இலட்சத்தை தள்ளுபடி செய்யாத காரணத்தால், நடப்புச் சொத்துக்களின் கீழ் பொருட்கள் விவரப்பட்டியலில் அதிகப்படியாகவும், 31.3.2014அன்று முடிவுற்ற தேதியில் வரவு செலவுக் கணக்கில், வரவை விட செலவு அதிகம் என்பதால் அன்றைய தேதியில் திரட்டப்பட்ட பற்றாக்குறையாக காட்டப்பட்டுள்ளது.

இ) அட்டவணை க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் VII -1இ - 31.3.2014ம் அன்றுள்ள தேதியில் பேரேட்டில், பண்டகச்சாலை குறைவு என்ற கணக்கில் ரூ. 1.94 கோடி (பற்று இருப்புயும்), பண்டகச்சாலை மிகுதி என்ற கணக்கில் ரூ. 1.88 கோடி (வரவு இருப்பு) நிலுவை இருப்பை ஒத்திசைவு செய்யாத காரணத்தால் ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

ஈ) அட்டவணை க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் VII -1 ஈ - 31.3.2014 அன்றுள்ள தேதியில் பொருட்கள் பட்டியலில் கொடுத்துள்ள சான்றிதழின்படி உள்ள பொருட்கள் இருப்புக்கும் அது சம்பந்தப்பட்ட 7 பண்டகசாலை இருப்பு பேரேட்டுக் கணக்கில் உள்ள நிலுவை இருப்புக்கும் இடையில் மொத்தமாக 0.34 கோடி(பற்று இருப்பு) (ஒரு பண்டக சாலை) மற்றும் 0.72 கோடி (வரவு இருப்பு) (ஆறு பண்டக சாலை) காணப்படும் மாறுபாட்டை அதற்கென்ற கணக்கில் ஒத்திசைவு செய்யாத காரணத்தால் ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

உ) அட்டவணை க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் VII - 1 உ - 31.3.2014 அன்றுள்ள தேதியில் பொருட்கள் பட்டியலில் கொடுத்துள்ள சான்றிதழின்படி உள்ள பொருட்கள் இருப்புக்கும் அது சம்பந்தப்பட்ட 3 பண்டகசாலை பேரேட்டுக் கணக்கில் உள்ள நிலுவை இருப்பு ரூ. 0.64 கோடி (வரவு இருப்பு) மாறுபாட்டை சரக்கு இருப்பினை ஒத்திசைவு செய்யாத காரணத்தால் ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

ஊ) அட்டவணை க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் VII - 1உ - 31.3.2014ம் அன்றுள்ள தேதிய பேரேட்டு கணக்கு சிலவற்றில் பண்டக சாலை மொத்த நிலுவை இருப்புத் தொகையான ரூ. 7.28 இலட்சம் (வரவு இருப்பு) ரூ. 19.43 இலட்சம் (பற்று இருப்பு) ஆகிய நிலுவை இருப்புகளை திரும்பப் பெறாதது / தள்ளுபடி செய்யாதது என்பதால் அதற்கென்ற கணக்கில் ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

எ) அட்டவணை க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் VII - 1எ- பட்டயக்கணக்குகள் அலுவலகம் பிறப்பித்த கணக்கு வைப்புமுறை 2ன் படி, 31.3.2014 அன்றுள்ள தேதியில் பேரேட்டில் உள்ள கணக்குகள் சிலவற்றில் பொருட்கள் விவரப்பட்டியலில் காணப்படும் நிலுவை இருப்புத் தொகையை தள்ளுபடி செய்யாத காரணத்தால் ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

ஏ) அட்டவணை க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் VII - 1 ஏ - 31.3.2014 அன்றுள்ள தேதிப்படி, 6 பகுதி அலுவலகப் பண்டக சாலை கணக்கில் தேவையான கணக்கு பதிவுகள் செய்யாத காரணத்தால் மொத்தமாக ரூ.75.88 இலட்சத்திற்கு வரவு இருப்பு காட்டுவதன் விளைவால் நடப்பு சொத்துக்கணக்கு குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

6. அட்டவணை க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் VII - 2 - ஈ - 31.3.2014 அன்றுள்ள தேதிப்படி வரவேண்டிய நூற்று வீதக் கணக்கில் கீழ் காணப்படும் நிலுவை இருப்புத் தொகையான ரூ. 0.55 கோடி (வரவு இருப்பு) ஒத்திசைவு செய்யாத காரணத்தால் ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

7. அட்டவணை க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் VII - 3-அ- 31.3.2014 அன்றுள்ள தேதிப்படி - தலைமை அலுவலகம் / பகுதி அலுவலக நடவடிக்கை கணக்கில் காணப்படும் நிகர வரவு இருப்புத் தொகை ரூ. 71.01 கோடியை ஒத்திசைவு செய்யாத காரணத்தால் ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

8. அட்டவணை-க்யூ- நிதி இருப்பு நிலை தகவல் குறிப்பு - குறிப்பு எண் VII - 3-ஆ - வசூல்கட்டுப்பாடு கணக்கின் இருப்பு ரூ. 0.78 கோடி உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால், இந்த கணக்கின் மீதான தாக்கத்தை அறிய இயலவில்லை.

9. அ) அட்டவணை-க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் VII - 3 - இ (i) - 31.3.2014 அன்றுள்ளபடி தலைமை அலுவலக இரண்டு வங்கிக் கணக்குகள் (நடப்புக் கணக்கு) (பற்று இருப்பு) மொத்த நிலுவை இருப்புத் தொகை ரூ. 12.69 கோடியையும், ஒரு வங்கிக் கணக்கில் (நடப்புக் கணக்கில்) நிலுவை இருப்புத் தொகை ரூ. 0.26 (வரவு இருப்பும்), மற்றும் பகுதி அலுவலகத்தைச் சார்ந்த பத்து வங்கிக் கணக்குகள் (நடப்புக் கணக்கு) (பற்று இருப்பு) மொத்த நிலுவை இருப்புத் தொகை ரூ. 4.44 கோடியையும் ஒத்திசைவு செய்யாத காரணத்தால் ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

ஆ) அட்டவணை-க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் VII - 3 - இ (iii) - 31.3.2014 அன்றுள்ள தேதிப்படி ஒரு வங்கிக் கணக்கில் பற்று இருப்புத் தொகை ரூ. 1.58 கோடியை ஒத்திசைவு செய்யாத காரணத்தால் ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

இ) அட்டவணை-க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் VII - 3 - இ (iv) - 31.3.2014 அன்றுள்ள தேதிப்படி வங்கி ஒத்திசைவு அறிக்கையில் சரிக்கட்டல் செய்யப்படாதால் அதன் தாக்கத்தை அறிய முடியவில்லை.

ஈ) அட்டவணை-க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் VII - 3 - இ (v) -31.3.2014 அன்றைய தேதியில் குடிநீர் வாரிய வங்கி கணக்கு பதிவுகளுடன் ஒன்பது வங்கிக் பதிவு கணக்குகள் ஒத்திசைவு செய்யப்பட வேண்டிய மொத்த இருப்புத் தொகை ரூ. 37.41 கோடி, ஒத்திசைவு செய்ய படாததால் அதன் தாக்கத்தை அறிய முடியவில்லை.

உ) அட்டவணை-க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் VII - 3 - இ (vi) - 31.3.2014 அன்றுள்ள தேதிப்படி தலைமை அலுவலக திரட்டு கணக்கிலுள்ள வங்கிக் கணக்கில் காணப்படும் நிலுவை இருப்புத் தொகைக்கும், வங்கியிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்படி உள்ள நிலுவை இருப்புத் தொகைக்கும் ஒத்திசைவு செய்யாத காரணத்தால் அதன் தாக்கத்தை அறிய முடியவில்லை.

10. அ) அட்டவணை-க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் VII - 3 - ஈ - 31.03.2014 அன்றுள்ள தேதிப்படி முந்தைய உள்ளாட்சி அமைப்பிடமிருந்து பெற்ற நிலை வைப்புத் தொகை ரூ. 15.33 கோடியை நிலையான வைப்புத் தொகை ரூ. 27.79 யுடன் ஒத்திசைவு செய்யாததால் அதன் தாக்கத்தை அறிய முடியவில்லை.

ஆ) அட்டவணை-க்யூ - இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் VII - 3 - ஈ - 31.3.2014 அன்றைய தேதிப்படி, முந்தைய உள்ளாட்சி அமைப்பிடமிருந்து பெற்ற காலவரை வைப்புத் தொகை ரூ. 15.33 கோடியை வங்கிக் கணக்கு இருப்பாகவும் குறுகியகால வைப்புத் தொகையாக கணக்கில் காட்டியுள்ளதன் விளைவாக, அத்தொகை அளவுக்கு, நடப்பு சொத்துக் கணக்கில் அதிகமாகக் காட்டப்பட்டுள்ளது.

இ) அட்டவணை-க்யூ- இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் VII - 3-ஊ - வங்கிகளில் குறைந்த கால வைப்புத்தொகை ரூ. 154.55 கோடிகள் மார்ச் 2014ன் படி ஒத்திசைவு செய்யப்படாததால் கணக்குகளின் மீது அவற்றின் தாக்கத்தை உறுதிப்படுத்த இயலவில்லை.

ஈ) அட்டவணை-க்யூ- இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் VII - 5-அ - 31.3.2014 அன்றுள்ள தேதிப்படி, வங்கிகளில் வைத்துள்ள முதலீடான காலமுறை வைப்புத் தொகை பேரேட்டிலுள்ளபடி நிலுவை இருப்புத் தொகைக்கும் பணப்பிரிவிலுள்ள பதிவேடுகளிலுள்ள நிலுவை இருப்புத் தொகைக்கும் ஒத்திசைவு செய்யப்படாத காரணத்தால் அதன் தாக்கத்தை அறிய முடியவில்லை.

11. அட்டவணை-க்யூ- இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் VII - 5-ஆ மற்றும் 5-இ - ஓய்வு ஊதிய முதலீடு - தொகுப்பு வட்டி கணக்கில் உள்ள ரூ. 5.63 கோடி (வரவு இருப்பு) மற்றும் இதர தொகுப்பு வட்டி கணக்கில் உள்ள ரூ. 0.19 கோடி (பற்று இருப்பு) ஒத்திசைவு செய்யாத காரணத்தால் ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

12. அட்டவணை-க்யூ- வரவு செலவு கணக்கிற்கான குறிப்பு-குறிப்பு எண் I - 31.3.2014 அன்றுள்ள தேதிப்படி, மானியம் மற்றும் ஊக்க உதவி தலைப்பில் அரசிடமிருந்து பெற்ற மானியத்திற்கும் அதைப் பயன் படுத்தியதற்குமுள்ள வேறுபாட்டுத் தொகை ரூ. 4.63 கோடியை கணக்கில் கொண்டு வராமலிருப்பதால் அதிகப்படியான வருவாய்க் கணக்கிலும், வரவைக்காட்டிலும் செலவுக்கணக்கில் குறைத்தும் சேர்ந்துள்ள பற்றாக்குறையில் குறைத்தும் பொறுப்புக்களில் குறைத்தும் காட்டப்பட்டுள்ளது.

13. அட்டவணை-க்யூ- வரவு செலவு கணக்கிற்கான குறிப்பு - குறிப்பு எண் III - அ குறிப்பு எண் - அ - 31.3.2014 அன்றுள்ள தேதிப்படி வங்கிகளில் வைத்துள்ள நிலை வைப்புத்தொகைக்கான, தொகுப்பு வட்டியை கணக்கில் கொண்டு வராததால் அதன் தாக்கத்தை அறிய முடியவில்லை.

14. அட்டவணை-க்யூ- வரவு செலவு கணக்கிற்கான குறிப்பு - குறிப்பு எண் III - ஆ 31.3.2014 அன்றுள்ள தேதியிலும் அன்று முடிந்த தேதியிலும், பட்டயக் கணக்குகள் அலுவலகம் பிறப்பித்த கணக்கு வைப்பு முறை கணக்கியல் நியமம் 10ன் படி வாரியம் குறித்த காலத்தில் பணப்பட்டுவாடா பண்ணியதற்காக திட்டத்திற்கான பொருள் வழங்கியவர், அனுமதித்த தள்ளுபடித் தொகை ரூ. 1.61 கோடியை தள்ளுபடி சம்பாதித்ததாக கணக்கில் காட்டியது, நிலையான சொத்துக்களில் மதிப்பில் குறைப்பதற்கு பதிலாக, நிலையான சொத்துக்களில் அதிகமாகவும் தேய்மானத்தில் குறைவாகவும், வருவாயில் அதிகமாகவும், வரவை விட செலவுக்கணக்கில் குறைவாகவும், சேர்ந்துள்ள பற்றாக்குறையில் குறைவாகவும் உள்ளது.

15. அ) அட்டவணை-க்யூ-வரவு செலவு கணக்கிற்கான குறிப்பு-குறிப்பு எண் V - 1,2,3 - பணியாளர்கள்

ஓய்வு காலப் பலன்களான ஓய்வூதியம், பணிக்கொடை, விடுப்பிற்கான தொகை ஆகியவற்றிற்கான தொகுத்த பொறுப்புகள் 30.03.2014 முடிய கணக்கிடப்பட்டு, ஒதுக்கப்படாததால் இதுகுறித்து ஏற்படும் விளைவுகளை உறுதிப்படுத்த இயலவில்லை.

ஆ) அட்டவணை-க்யூ-வரவு செலவு கணக்கிற்கான குறிப்பு-குறிப்பு எண் V - 4அ மற்றும் 4ஆ-முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து பெறப்பட்ட பணியாளர்களின் ஓய்வு காலப் பயன்களான ஓய்வூதியம், பணிக்கொடை, விடுப்பிற்கான தொகை ஆகியவற்றிற்கான தொகுத்த பொறுப்புகள் 30.03.2014 முடிய கணக்கிடப்பட்டு ஒதுக்கப்படாததால் இதுகுறித்து ஏற்படும் விளைவுகளை உறுதிப்படுத்த இயலவில்லை.

16. அட்டவணை-க்யூ-வரவு செலவு கணக்கிற்கான குறிப்பு - குறிப்பு எண் VI - 1 - 31.3.2014 அன்றுள்ள தேதிப்படி முந்தைய உள்ளாட்சி அமைப்பிடமிருந்து வசூலிக்காமல் வங்கிக் கணக்கில் இருப்புத் தொகை ரூ. 4.13 கோடியை முந்தைய கால சரிக்கட்டுதல் கணக்கில் காட்டியுள்ளதால் நடப்பு சொத்துக்கணக்கில் குறைவாகவும் வரவைக் காட்டிலும் செலவுக்கணக்கில் அதிகமாகவும், சேர்ந்துள்ள பற்றாக்குறையில் அதிகமாகவும் உள்ளது. அவ்வாறு செய்வதற்கு வாரியத்திற்கு எவ்வித அதிகாரமும் இல்லை.

17. அட்டவணை-க்யூ-வரவு செலவு கணக்கிற்கான குறிப்புகள்-குறிப்பு எண் VIII - 24.10.2011 முதல் 31.03.2014 முடிய முந்தைய உள்ளாட்சி அமைப்புகள், நிதி நிறுவனங்களிடமிருந்து தகுதி பெற்ற சொத்துக்கள் வாங்கியவற்றை முதலீட்டாக்கம் செய்யப்படவில்லை. கடனாகப் பெற்ற தொகைக்கு ரூ.25.28 கோடி வட்டியாக வரவு செலவுக்கணக்கில் கொண்டுள்ளது. இதன் காரணமாக கணக்கீட்டில் நிரந்தர சொத்து, தேய்மானம், வரவை விட கூடுதல் செலவு, கூடுதலான பற்று ஆகியவை 31 மார்ச் 2014ன் படி திரண்ட பற்றாக்குறையாக உள்ளது.

18. அட்டவணை-க்யூ- மற்ற குறிப்புகள்-குறிப்பு எண் 3 - மூன்றாமவர் இருப்பு குறித்து உறுதி செய்தல் / ஒத்திசைவு செய்தல் ஆகியவற்றுக்கு உடன்பட்டது என்பதால் அதன் தாக்கத்தை அறிய இயலவில்லை.

## 8. கருத்து

உங்கள் கருத்துக்கள், எங்களுக்கு அளிக்கப்பட்ட விவரங்கள், விளக்கங்கள் மற்றும் முக்கிய கணக்கு முறை கோட்பாடுகளின் அடிப்படையில் இந்த இருப்பு நிலைக் குறிப்பும், வரவு செலவு கணக்கும் பொதுவாக நடைமுறையிலுள்ள இந்தியாவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கு கோட்பாடுகளுக்கு உகந்த வகையில் உண்மையான மற்றும் நியாயமான தகவல்களைத் தருவதாகக் கருதுகிறோம்.

i) இருப்பு நிலைக் குறிப்பு 31.03.2014 அன்று வாரியத்தின் செயல்பாட்டு நிலைமைகளுக்கானது, மற்றும்

ii) வாரியத்தின் வரவு செலவு கணக்கிலுள்ள பற்றாக்குறை (வருமானத்தை விட அதிக செலவு) அன்றைய தேதியில் முடிவடைந்த ஆண்டுக்கானதாகும்.

**எஸ். வெங்கட்ராம் மற்றும் குழுமம்**
பட்டயக் கணக்காளர்கள்
பதிவு எண் 04656S

**ஆர். கந்தவேலு**
கூட்டாளி
உறுப்பினர் எண் : 12811

இடம் : சென்னை
நாள் : 18/12/2015

## 2014 – ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31–ஆம் தேதிய இருப்பு நிலைக்குறிப்பு

| விவரங்கள் | அட்டவணை எண் | 2013–14 ரூபாய் | 2012–13 ரூபாய் |
|---|---|---|---|
| **பொறுப்புகள்** | | | |
| பங்குகள் | எ | 14,836,767,957.74 | 14,237,192,420.59 |
| அரசு மானியம் | பி | 25,079,707,963.53 | 19,394,218,304.53 |
| நீண்டகாலக் கடன்கள் | சி | 12,676,855,900.00 | 13,102,967,530.00 |
| நிறுத்திவைக்கப்பட்ட வரவுகளும் வைப்புத் தொகைகளும் | டி | 8,851,871,344.21 | 8,120,756,329.36 |
| நடப்புப் பொறுப்புகள் மற்றும் ஒதுக்கீடுகள் | இ | 9,350,099,684.77 | 9,004,263,346.87 |
| **மொத்தம்** | | **70,795,302,850.25** | **63,859,397,931.35** |
| **சொத்துக்கள்** | | | |
| நிலையான சொத்துக்கள் | எப் | 54,524,207,185.24 | 48,570,920,341.47 |
| நடப்புச் சொத்துக்கள், கடன்கள், முன்பணம் மற்றும் வைப்புத் தொகை | ஜி | 8,855,068,086.54 | 9,699,769,907.31 |
| சேர்ந்துள்ள பற்றாக்குறை | | 7,416,027,578.47 | 5,588,707,682.57 |
| **மொத்தம்** | | **70,795,302,850.25** | **63,859,397,931.35** |

இதே தேதியிட்ட எங்களது அறிக்கையின் படி
எஸ். வெங்கட்ராம் மற்றும் குழுமத்திற்காக,
**பட்டயக் கணக்காளர்கள்**
**பதிவு எண். 04656S**

வாரியத்திற்காக

-ஒம்-
**கீதா குமார், எ.சி.எம்.எ., எ.சி.எஸ்.**
நிதி இயக்குநர் பொறுப்பு

-ஒம்-
**டாக்டர் பி. சந்திரமோகன், இ.ஆ.ப.,**
நிர்வாக இயக்குநர்

-ஒம்-
**ஆர். கந்தவேலு**
கூட்டாளி
உ.எண்.12811

இடம் : சென்னை
நாள் : 18.12.2015

## 2014 – ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 -ம் தேதி முடிந்த ஆண்டின் வரவு–செலவு

| விவரங்கள் | அட்டவணை எண் | 2013–14 ரூபாய் | 2012–13 ரூபாய் |
|---|---|---|---|
| **வரவினங்கள்** | | | |
| குடிநீர் விற்பனை மற்றும் கழிவுநீர் கட்டணங்கள் | எச் | 2,609,874,945.93 | 2,596,863,064.30 |
| அரசு மானியம் | | 2,572,873,582.00 | 1,761,543,079.24 |
| குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி | ஐ | 1,114,164,866.29 | 1,074,100,144.95 |
| இதர வருமானம் | ஜே | 851,558,624.27 | 643,286,347.28 |
| ஐயப்பாடுள்ள கடன்களுக்குக் கூடுதல் ஒதுக்கீடு | | | |
| குடிநீர்க் கட்டணம் அளவி பொருத்தப்பட்டது | | 7,354,000.00 | 0.00 |
| குடிநீர்க் கட்டணம் அளவி பொருத்தப்படாதது | | 2,199,524.00 | 0.00 |
| வரிகள் | | - | - |
| வரவை விட செலவு அதிகம் | | 1,827,296,485.90 | 1,670,823,442.56 |
| **மொத்தம்** | | **8,985,322,028.39** | **7,746,616,078.33** |
| **செலவினங்கள்** | | | |
| இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவுகள் | கே | 4,394,702,929.56 | 3,272,976,874.34 |
| பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஒதுக்கீடுகள் | எல் | 1,572,693,648.27 | 1,537,134,601.60 |
| அலுவலகம் மற்றும் நிர்வாகச் செலவுகள் | எம் | 65,654,215.52 | 67,285,013.42 |
| முந்தையகால சரிக்கட்டல் கணக்கு | என் | 392,129,922.59 | 241,657,034.69 |
| குடிநீர் ஊர்தி வாடகைக் கட்டணங்கள் | | 185,917,825.00 | 252,034,355.00 |
| தேய்மானம் | | 1,463,766,926.45 | 1,384,337,397.28 |
| கடன் பணிச் செலவுகள் | ஓ | 905,728,149.00 | 960,456,094.00 |
| ஐயப்பாடுள்ள கடன்களுக்குக் ஒதுக்கீடு | | | |
| குடிநீர்க் கட்டணங்கள் அளவி பொறுத்தப்பட்டது | | 0.00 | 17,679,585.00 |
| குடிநீர்க் கட்டணம் அளவி பொருத்தப்படாதது | | 0.00 | 2,126,277.00 |
| வரிகள் | | 4,728,412.00 | 10,928,846.00 |
| **மொத்தம்** | | **8,985,322,028.39** | **7,746,616,078.33** |

இதே தேதியிட்ட எங்களது அறிக்கையின் படி
எஸ். வெங்கட்ராம் மற்றும் குழுமத்திற்காக.
**பட்டயக் கணக்காளர்கள்**
**பதிவு எண். 04656S**

வாரியத்திற்காக
-ஒம்-
**கீதா குமார், எ.சி.எம்.எ., எ.சி.எஸ்.**
நிதி இயக்குநர் பொறுப்பு

-ஒம்-
**டாக்டர் பி. சந்திரமோகன், இ.ஆ.ப.,**
நிர்வாக இயக்குநர்

-ஒம்-
**ஆர். கந்தவேலு**
கூட்டாளி
உ.எண்.12811

இடம் : சென்னை
நாள் : 18.12.2015

# அட்டவணைகள்

## அட்டவணை – ஏ

| பங்குகள் | 2013-14 ரூ. | 2012-13 ரூ. |
|---|---|---|
| அரசிடமிருந்து பங்குகள் | 4,879,658,365.32 | 4,879,658,365.32 |
| பொதுமக்களிடமிருந்து பங்குகள் | 6,341,700,586.65 | 5,980,770,933.70 |
| சென்னை மாநகராட்சியிடமிருந்து மாற்றப்பட்ட பொறுப்புகளை விட அதிக சொத்துக்கள் | 159,167,365.25 | 159,167,365.25 |
| பொதுப்பணித்துறையிலிருந்து மாற்றப்பட்ட பொறுப்புகளை விட அதிக சொத்துக்கள் | 51,887,380.46 | 51,887,380.46 |
| தற்காலிக வாரியத்திலிருந்து மாற்றப்பட்ட பொறுப்புகளைவிட அதிக சொத்துக்கள் | 842,251.86 | 842,251.86 |
| உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து மாற்றப்பட்ட சொத்துக்களை விட அதிக பொறுப்புகள் | -436,942,738.80 | -389,547,883.00 |
| மூலதன ஒதுக்கீடு | 2,748,124,150.00 | 2,553,533,755.00 |
| நிதி | 1,092,330,597.00 | 1,000,880,252.00 |
| **மொத்தம்** | **14,836,767,957.74** | **14,237,192,420.59** |

## அட்டவணை – பி

| அரசு மானியம் | 2013-14 ரூ. | 2012-13 ரூ. |
|---|---|---|
| இரண்டாவது சென்னைக் குடிநீர்த் திட்டம் | 1,373,790,000.53 | 1,373,790,000.53 |
| சென்னை மாநகர நதிநீர் பாதுகாப்புத் திட்டம் | 3,515,900,000.00 | 3,515,900,000.00 |
| ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் | 2,021,053,885.00 | 1,839,565,885.00 |
| நெம்மேலி கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் | 7,191,795,351.00 | 5,980,000,000.00 |
| இதர வகைகள் | 4,633,809,280.00 | 3,510,689,414.00 |
| சென்னை பெருநகர் வளர்ச்சி தூதுக்குழு திட்டம் | 2,583,300,000.00 | 281,700,000.00 |
| உள்ளாட்சி மானியங்கள் | 1,656,984,084.00 | 1,177,831,084.00 |
| பொறுப்புரிமை மற்றும் நிதி | 2,103,075,363.00 | 1,714,741,921.00 |
| **மொத்தம்** | **25,079,707,963.53** | **19,394,218,304.53** |

## அட்டவணை – சி

| நீண்ட கால கடன்கள் | 2013-14 ரூ. | 2012-13 ரூ. |
|---|---|---|
| அரசிடமிருந்து கடன்கள் | 7,275,113,540.00 | 7,275,113,540.00 |
| கடன் பத்திரங்கள் | --- | |
| நிதிநிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன் | 5,401,742,360.00 | 5,827,853,990.00 |
| **மொத்தம்** | **12,676,855,900.00** | **13,102,967,530.00** |

## அட்டவணை – டி

| நிறுத்தி வைக்கப்பட்ட வரவுகளும் வைப்புத் தொகைகளும் | 2013-14 ரூ. | 2012-13 ரூ. |
|---|---|---|
| **பொதுமக்களிடமிருந்து வைப்புத் தொகை** | | |
| - இணைப்புப் பணிகளுக்கு - கழிவுநீர் | 490,299,058.37 | 360,932,017.95 |
| - பொதுப்பணிகளுக்கு | 6,444,738,411.21 | 5,660,605,762.39 |
| - சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 22,518,408.00 | 22,518,408.00 |
| - மதுரை கும்பகோணம் | 1,440,906,870.00 | 1,440,906,870.00 |
| **பிணை வைப்புத் தொகைகள் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட பணம்** | | |
| அ. நிறுத்தி வைக்கப்பட்ட பணம் | | |
| - பொருட்கள் வழங்குபவர்கள் | 20,236,299.00 | 16,546,047.75 |
| - ஒப்பந்தக்காரர்கள் | 396,833,955.23 | 598,845,648.87 |
| ஆ. பிணை வைப்புத் தொகைகள் | | |
| - பணியாளர்கள் | 11,380,706.40 | 10,831,539.40 |
| - ஒப்பந்தக்காரர்கள் | 24,957,636.00 | 9,570,035.00 |
| நில விற்பனை முன்பணம் | — | — |
| **மொத்தம்** | **8,851,871,344.21** | **8,120,756,329.36** |

## அட்டவணை – இ

| நடப்பு பொறுப்புகள் மற்றும் ஒதுக்கீடுகள் | 2013-14 ரூ. | 2012-13 ரூ. |
|---|---|---|
| **கடனீந்தோர்:** | | |
| - பொருட்கள் வழங்குபவர்கள் | 187,918,277.35 | 259,949,226.20 |
| - ஒப்பந்தக்காரர்கள் | 932,238,106.08 | 903,516,781.60 |
| - செலவுகள் | 452,223,465.40 | 228,215,817.40 |
| **முதலீடு சேர்ந்த வட்டி** | | |
| - அரசுக் கடன்களுக்கு | 5,617,868,639.00 | 5,031,520,860.00 |
| - பத்திரம் | — | — |
| - நிதிநிறுவனக் கடன்களுக்கு | 186,796,989.00 | 276,726,232.00 |
| இதர பொறுப்புகள் | | |
| - பணியாளர்கள் | 1451,498,359.18 | 1,376,447,346.20 |
| - மற்றவை | 521,555,848.76 | 927,887,083.47 |
| **மொத்தம்** | **9,350,099,684.77** | **9,004,263,346.87** |

## அட்டவணை – எப்

| நிலையான சொத்துக்கள் | ரூ. | 2013-14 ரூ. | 2012-13 ரூ. |
|---|---|---|---|
| அ. அடக்கவிலையில் குடிநீர் வழங்கல் | 27,675,337,695.35 | | |
| கழிக்க: தேய்மானம் | 10,638,998,718.69 | 17,036,338,976.66 | 16,809,369,663.56 |
| | | | |
| ஆ. அடக்கவிலையில் கழிவுநீரகற்றல் | 10,278,858,253.38 | | |
| கழிக்க: தேய்மானம் | 4,757,058,749.98 | 5,521,799,503.40 | 5,013,109,870.02 |
| | | | |
| இ. அடக்கவிலையில் பொதுவானவை | 723,621,094.82 | | |
| கழிக்க: தேய்மானம் | 483,955,274.78 | 239,665,820.04 | 162,281,800.23 |
| | | | |
| ஈ. முன்னேற்றத்திலுள்ள திட்டங்கள் | | | |
| 1. குடிநீர் வழங்கல் இதர பணிகள் | | | |
| - வைப்புத் தொகை பணிகள் | 4,676,659,847.49 | | |
| - இதர பணிகள் | 13,131,833,562.81 | 17,808,493,410.30 | 15,952,199,332.08 |
| | | | |
| 2. கழிவுநீரகற்றல் | | | |
| - வைப்புத் தொகை பணிகள் | 6,612,426,288.68 | | |
| - இதர பணிகள் | 5,955,013,233.68 | 12,567,439,522.36 | 9,406,193,892.72 |
| | | | |
| 3. பொதுவானவை | | 162,472,436.45 | 149,277,530.92 |
| | | | |
| உ. வறட்சி / வெள்ள நிவாரணப் பணிகள் | | 1,078,488,251.94 | 1,078,488,251.94 |
| ஊ. வறட்சி நிவாரணப் பணிகள் - பொதுவானவை | | 109,509,264.09 | |
| | | | |
| **மொத்தம்** | | **54,524,207,185.24** | **48,570,920,341.47** |

## அட்டவணை - ஜி

| நடப்பிலுள்ள சொத்துக்கள், கடன்கள் முன்பணம் மற்றும் வைப்புத் தொகைகள் | ரூ. | 2013-14 ரூ. | 2012-13 ரூ. |
|---|---|---|---|
| அ. பொருட்கள் | | 120,225,839.82 | 174,840,072.94 |
| ஆ. கடனாளிகள் | | | |
| 1. குடிநீர்க் கட்டணங்கள் அளவி பொறுத்தப்பட்டது | 318,831,656.01 | | |
| கழிக்க: ஐயப்பாடுள்ள பற்று - ஒதுக்கீடு | 83,256,314.18 | 235,575,341.83 | 312,386,195.39 |
| 2. குடிநீர்க் கட்டணங்கள் அளவி பொறுத்தப்படாதது | 279,279,040.20 | | |
| கழிக்க: ஐயப்பாடுள்ள பற்று - ஒதுக்கீடு | 178,622,000.84 | 100,657,039.36 | 120,452,753.35 |
| 3. வரிகள் | 1,076,779,216.56 | | |
| கழிக்க: ஐயப்பாடுள்ள பற்று - ஒதுக்கீடு | 67,074,662.93 | 1,009,704,553.63 | 967,148,844.14 |
| 4. பொது ஆணைக் குழுக்களிடமிருந்து வரவேண்டியவை | | 22,956,271.27 | 21,434,207.27 |
| 5. கட்டண கடனாளிகள் - அரசுக்கு ஊர்தி மூலம் குடிநீர் வழங்கல் | | 205,195,649.11 | 277,014,109.84 |
| 6. கட்டண கடனாளிகள் கழிவுநீரகற்றல் | | 167,110,195.19 | 201,858,087.84 |
| 7. கட்டண கடனாளிகள் - குடிநீர் இதர வகைகள் | | 7,218.60 | 7,218.60 |
| 8. வரவேண்டிய நூற்று வீதக்கட்டணம் | | -5,473,000.00 | 123,812,000.00 |
| 9. செ.கு.வா. பணிக்கொடை பொ. குழுமம் | | 12,117,987.50 | -4,785,682.00 |
| 10 வரி பிடித்தங்கள் | | 31,717,389.70 | 29,762,653.00 |
| 11. கட்டணக் கடனாளிகள் - மேல்வரி | | 78,431,600.15 | 9,396,834.20 |
| 12. கட்டணக் கடனாளிகள் - அவமதிப்பு காசோலை | | 72,797.00 | 50,183.00 |
| 13. கட்டணக் கடனாளிகள் சுத்திகரிக்கப்படாத கழிவு | | 1,270,751.00 | 1,270,751.00 |
| 14. சென்னை மாநகராட்சியிடமிருந்து பெறப்பட வேண்டியவை - புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகள் | | 12,010,000.00 | 12,010,000.00 |
| 15. புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளிலிருந்து பெறப்பட்ட நிதி | | — | — |
| இ. கையிருப்பு மற்றும் வங்கி இருப்புகள் | | | |
| 1. தலைமை அலுவலக / பகுதி அலுவலக நடவடிக்கை | | -710,103,965.77 | -470,170,345.99 |
| 2. வசூல் கட்டுப்பாடு | | 7,780,964.50 | 9,488,316.50 |

## அட்டவணை – ஜி

| நடப்பிலுள்ள சொத்துக்கள், கடன்கள் முன்பணம் மற்றும் வைப்புத் தொகைகள் | ரூ. | 2013-14 ரூ. | 2012-13 ரூ. |
|---|---|---|---|
| 3. அட்டவணையிடப்பட்ட வங்கிகளில் நடப்புக்கணக்கு | | 315,481,212.68 | 320,595,430.26 |
| 4. இந்திய ரிசர்வ் வங்கி இருப்பு கணக்கு | | 1,411,558,167.62 | 1,560,737,454.62 |
| 5. அட்டவணையிடப்பட்ட வங்கிகளில் குறுகிய கால வைப்புத் தொகை | | 2,255,532,514.00 | 3,208,250,398.00 |
| 6. கையிருப்புத் தொகை | | 3,339.20 | 41,929.20 |
| 7. உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து பெறப்பட வேண்டிய பணத் தொகை | | 0.00 | 41,273,304.00 |
| 8. பணியாளர் முன்பணம் | | 146,751.00 | 45,261.00 |
| ஈ. கடன் மற்றும் முன்பணம் | | | |
| 1. ஒப்பந்தக்காரர்கள் | | 577,391,129.00 | 103,802,711.00 |
| 2. பொருள் வழங்குபவர்கள் | | 21,432,705.40 | 11,495,265.40 |
| 3. செலவினங்களுக்கு | | 9,607,927.10 | 81,62,835.10 |
| 4. பணியாளர்கள் | | 85,699,312.79 | 98,810,964.79 |
| 5. இதர வகை | | 499,449.79 | 499,449.79 |
| உ. வைப்புத்தொகை மற்றும் முதலீடு | | | |
| அ. பணியாளர்கள் | | | |
| 1. சிறப்பு சேமநல முதலீடு | | 56,627,408.00 | 51,313,489.00 |
| 2. பொது சேமநல முதலீடு | | 645,324,906.34 | 634,284,835.34 |
| 3. ஓய்வூதிய நிதி முதலீடு | | 1,094,108,308.00 | 911,511,549.00 |
| 4. செபெகுவா பணியாளர் சிறப்பு மருத்துவ நலநிதி | | 14,214,276.00 | 12,941,416.00 |
| 5. விபத்து உள்ளடக்கிய முதலீடு | | 8,643,158.00 | 7,235,950.00 |
| 6. முதலீடு சேர்ந்த இதர வட்டிகள் | | 1,919,710.00 | -35,997,373.00 |
| 7. முதலீடு சேர்ந்த வட்டி-வருங்கால வைப்புநிதி பங்களிப்புத் திட்டம் | | 3,935,194.00 | 4,108,660.00 |
| 8. முதலீடு சேர்ந்த வட்டி - ஓய்வூதிய முதலீடு | | -56,253,964.73 | -24,305,191.73 |
| (i) | | **1,768,518,995.61** | **1,561,093,334.61** |
| ஆ. மற்றவை | | | |
| 1. வைப்புத்தொகை | | 98,348,400.46 | 72,783,443.46 |
| 2. பொறுப்பாட்சி மற்றும் நிறுத்தி வைத்தல் முதலீடு | | 442,660,733.00 | 404,738,633.00 |
| 3. நிலையான சொத்து புதுப்பித்தல் நிதி முதலீடு | | 578,930,816.00 | 521,463,294.00 |
| (ii) | | **1,119,939,949.46** | **998,985,370.46** |
| (i)+(ii) | | 2,888,458,945.07 | 2,560,078,705.07 |
| **மொத்தம்** | | **8,855,068,086.54** | **9,699,769,907.31** |

## அட்டவணை – எச்

| குடிநீர் விற்பனை மற்றும் கழிவுநீர் கட்டணங்கள் | 2013-14 ரூ. | 2012-13 ரூ. |
|---|---|---|
| அளவி பொருத்தப்பட்டவை | | |
| வீட்டு உபயோகம் | 190,037,047.08 | 199,641,232.76 |
| வாணிபம் | 1,158,419,927.50 | 1,250,432,553.36 |
| நிறுவனங்கள் | 127,000,128.54 | 146,694,583.50 |
| நகராட்சிகள் | 70,658,284.00 | 26,679,961.00 |
| அளவி பொருத்தப்படாதவை | | |
| வீட்டு உபயோகம் | 288,087,295.00 | 290,579,219.00 |
| வாணிபம் | 179,460,506.00 | 177,629,714.00 |
| நிறுவனங்கள் | 2,209,300.00 | 2,167,200.00 |
| சுத்தகரிக்கப்பட்ட கழிவுநீர் வழங்கல் | 130,164,665.05 | 121,258,412.90 |
| ஊர்திகள் மூலம் குடிநீர் வழங்கல் | 265,647,168.40 | 169,128,038.00 |
| கழிவுநீர் கட்டணங்கள் | 198,190,624.36 | 212,652,149.78 |
| **மொத்தம்** | **2,609,874,945.93** | **2,596,863,064.30** |

## அட்டவணை – ஐ

| குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி | 2013-14 ரூ. | 2012-13 ரூ. |
|---|---|---|
| குடிநீர் வரி | 238,477,051.53 | 230,175,022.49 |
| கழிவுநீரகற்றுவரி | 875,687,814.76 | 843,925,122.46 |
| **மொத்தம்** | **1,114,164,866.29** | **1,074,100,144.95** |

## அட்டவணை – ஜே

| இதர வருமானம் | 2013-14 ரூ. | 2012-13 ரூ. |
|---|---|---|
| பயனற்ற பொருட்கள் விற்பனை | 945,000.00 | 2,543,150.00 |
| வங்கியிலிருந்து வட்டி | 50,879,896.00 | 63,923,514.00 |
| இதர வட்டி | 106,332,555.15 | 69,123,993.29 |
| ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்கள் விற்பனை | 382,475.00 | 375,000.00 |
| சரி செய்யப்பட்ட இழப்பீடு | 12,414,872.00 | 2,532,115.00 |
| ஈட்டிய ஆலோசனைக் கட்டணம் | 200,000.00 | 0.00 |
| இதர பல்வகைப்பட்ட வருமானம் | 680,403,826.12 | 504,788,574.99 |
| பண்ணை விளைச்சல் விற்பனை | - | - |
| **மொத்தம்** | **851,558,624.27** | **643,286,347.28** |

## அட்டவணை – கே

| இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவுகள் | 2013-14 ரூ. | 2012-13 ரூ. |
|---|---|---|
| **அ. இயக்குதல் செலவுகள்** | | |
| மின்சக்தி | 780,103,064.46 | 736,108,985.00 |
| இராசாயனப் பொருட்கள் | 35,627,754.27 | 51,118,022.75 |
| எரிபொருள் மற்றும் மசகுகள் | 56,646,862.65 | 60,858,541.10 |
| உதிரிக் கருவிகள் | 2,187,638.46 | 2,661,105.78 |
| சுமைக் கட்டணமும் காப்பீடும் | 0.00 | 52,726.00 |
| கழிவுநீர் ஊர்தி - வாடகைக் கட்டணம் | 33,490,046.00 | 17,865,372.00 |
| தூர் எடுப்பு | 36,170,588.33 | 30,252,393.38 |
| இதர இயக்குதல் செலவுகள் | 1,755,142,889.86 | 1,560,869,302.84 |
| | **2699368844.03** | **2,459,786,448.85** |
| **ஆ. பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்** | | |
| குழாய் வழிகள், நீரேற்றும் நிலையம், தளவாடம் மற்றும் இதர உபகரணங்கள் | 1,118,383,066.23 | 440,267,161.27 |
| கட்டடம் மற்றும் கட்டடப் பணிகள் | 133841271.30 | 129,374,258.00 |
| வாகனங்கள் | 1,632,211.00 | 1,311,404.00 |
| இதர பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவுகள் | 222,644,187.19 | 242,237,602.22 |
| வறட்சி நிவாரண செலவுகள் | 218,833,349.81 | - |
| | **1695334085.53** | **813,190,425.49** |
| **மொத்தம் ( அ + ஆ)** | **4394702929.56** | **3272976874.34** |

## அட்டவணை – எல்

| பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஒதுக்கீடுகள் | 2013-14 ரூ. | 2012-13 ரூ. |
|---|---|---|
| ஊதியம், கூலி மற்றும் படிகள் | 2,011,701,808.00 | 1,830,020,120.10 |
| பணியாளர் நலச் செலவுகள் | 92,559,533.49 | 165,636,428.50 |
| அயல்துறை பணியிலிருந்து வந்தவருக்குப் பங்களிப்பு | 732,863.00 | 622,155.00 |
| கழிக்க: திட்ட ஒதுக்கீடுகள் | 532,300,556.22 | 459,144,102.00 |
| **மொத்தம்** | **1,572,693,648.27** | **1,537,134,601.60** |

## அட்டவணை – எம்

| அலுவலகம் மற்றும் நிர்வாகச் செலவுகள் | 2013-14<br>ரூ. | 2012-13<br>ரூ. |
|---|---|---|
| **அலுவலகச் செலவுகள்:** | | |
| வாடகை மற்றும் வரி | 2,651,337.00 | 4,702,389.00 |
| மின் கட்டணம் | 10,913,347.00 | 11,351,495.00 |
| கம்பியில்லாத தந்தி, தகவல் தொடர்பு செலவு | 252,701.00 | 188,994.00 |
| தொலைபேசிக் கட்டணங்கள் | 10,004,943.75 | 9,122,272.98 |
| தபால் மற்றும் தந்திகள் | 4,888,611.00 | 5,048,450.00 |
| அச்சிடுதல் மற்றும் எழுது பொருட்கள் | 10176859.00 | 6,840,685.40 |
| பொருட்காட்சி மற்றும் விளம்பரம் | 1,513,542.00 | 1,742,817.00 |
| இதர அலுவலகச் செலவுகள் | 9,873,756.59 | 12,845,088.00 |
| பயணம் மற்றும் பயணப்படிச் செலவுகள் | 29,500,654.70 | 26,021,589.50 |
| **நிர்வாகச் செலவுகள்** | | |
| நிர்வாக சபை கூட்ட செலவுகள் | 0.00 | 0.00 |
| தணிக்கைக் கட்டணங்கள் | 100,000.00 | 165,450.00 |
| வழக்குகளுக்குச் செலவுகள் | 2,450,067.00 | 2,354,386.00 |
| ஆலோசனைக் கட்டணங்கள் மற்றும் செலவுகள் | 4,029,472.00 | 1,950,000.00 |
| வங்கிக் கட்டணம் | 7,387,684.95 | 7,327,228.54 |
| மதிப்பூதியம் | 787,358.00 | 2,000.00 |
| பத்திர கடன் நிர்வாகச் செலவு | 15,000.00 | 18,092.00 |
| பிற நிர்வாகச் செலவுகள் | 6,250,910.00 | 6,440,510.00 |
| வாரிய கலந்தாய்வுக்கான கட்டணம் | 36,000.00 | 0.00 |
| | 100,832,243.99 | 96,121,447.42 |
| கழிக்க: திட்ட ஒதுக்கீடு | 35,178,028.47 | 28,836,434.00 |
| **மொத்தம்** | **65,654,215.52** | **67,285,013.42** |

## அட்டவணை – என்

| முந்தைய கால சரிகட்டிய கணக்கு | 2013-14 ரூ. | 2012-13 ரூ. |
|---|---|---|
| **பற்று:** | | |
| குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வரி | 161,058,583.19 | 41,754,794.67 |
| குடிநீர்க் கட்டணம் - அளவி பொறுத்தப்படாதது | 16,986,465.06 | 12,876,761.35 |
| குடிநீர்க் கட்டணம் - அளவி பொறுத்தப்பட்டது | 4,769,048.26 | 10,839,302.83 |
| கழிவு நீர்க் கட்டணம் | 8,493,232.54 | 6,422,465.62 |
| வட்டி | 0.00 | 58,782,004.10 |
| சரி செய்யப்பட்ட இழப்பீடு | 128,709,017.00 | 4,165,000.00 |
| நிறுத்தி வைக்கப்பட்ட பணம் | - | - |
| பிணை வைப்புத் தொகை | - | - |
| அக விலைப்படி நிலுவை | - | - |
| வங்கியிலிருந்து பெறத்தக்க தொகை | 41,273,304.00 | - |
| இதர செலவுகள் | 600.00 | - |
| தேய்மானம் | 105,291,152.67 | 305,983,821.48 |
| **மொத்தம் -அ** | **466,581,402.72** | **440,824,150.05** |
| வரவு | | |
| குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வரி | 46,453,160.74 | 27,173,283.21 |
| குடிநீர்க் கட்டணம் - அளவி பொறுத்தப்படாதது | 15,015,965.22 | 18,717,324.31 |
| குடிநீர்க் கட்டணம் - அளவி பொறுத்தப்பட்டது | 5,294,989.07 | 68,700,366.52 |
| கழிவு நீர்க் கட்டணங்கள் | 7,146,640.10 | 4,180,505.12 |
| வட்டி | - | - |
| மின் கட்டணம் | 539,200.00 | - |
| இதர செலவுகள் | 1,525.00 | - |
| தேய்மானம் | 0.00 | 80,395,636.20 |
| **மொத்தம் – ஆ** | **74,451,480.13** | **199,167,115.36** |
| **மொத்தம் (அ–ஆ)** | **392,129,922.59** | **241,657,034.69** |

## அட்டவணை – ஓ

| கடன் மீதான வட்டி | 2013-14 ரூ. | 2012-13 ரூ. |
|---|---|---|
| வட்டி | | |
| அரசுக்கடன் | 586,347,779.00 | 586,347,779.00 |
| நிதி நிறுவனங்கள் | 336,028,605.00 | 394,677,717.00 |
| பத்திரங்கள் | 0.00 | 1,129,211.00 |
| | 922,376,384.00 | 982,154,707.00 |
| கழிக்க: வட்டி முதலாக்கம் | 16,648,235.00 | 21,698,613.00 |
| **மொத்தம்** | **905,728,149.00** | **960,456,094.00** |

## அட்டவணை – பி

### குறிப்பிடத்தக்க கணக்குமுறைக் கோட்பாடுகள்

**1. கணக்குமுறைக் கோட்பாடு :**

நிதிநிலை அறிக்கை வரலாறுமிக்க அடக்கவிலை கருத்து மற்றும் நிறுவன தொடர்ச்சி அனுமானம் ஆகியவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்படுகிறது. ஈட்டிய ஆதாயத்தின் அடிப்படையிலான கணக்குமுறையை சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் பின்பற்றுகிறது.

பொதுமக்களின் பங்களிப்பு குடிநீர் / கழிவுநீர் இணைப்புப் பணிகளுக்காக பொதுமக்களிடமிருந்து கடந்த நிதியாண்டில் பெறப்பட்ட தொகை அடுத்த நிதி ஆண்டில் பொதுமக்களின் பங்குக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது.

**2. சரக்கு மதிப்பீடு :**

பண்டக சாலையில் உள்ள பொருட்களின் அடக்கவிலை நிறையிட்ட சராசரி முறையில் கணக்கிடப்படுகிறது.

**3. இருப்புநிலைக் குறிப்பிற்குப் பின் நிகழ்ந்த நிகழ்வுகள் :**

இருப்புநிலைக் குறிப்பிற்குப் பின் நிகழ்ந்த நிகழ்வுகள் என்பது இருப்புநிலை குறிப்பு தேதி மற்றும் நிதி அறிக்கை அங்கீகரிக்கப்பட்ட நாட்களுக்கு இடையே நிகழ்ந்த நிகழ்வுகள்.

**4. முந்தைய கால வகைகள் :**

முந்தைய ஆண்டு நிதி அறிக்கைகள் தயாரிப்பதில் உள்ள வரவு, செலவு பிழைகள் நடப்பு ஆண்டில் குறிப்பிடுவது முந்தைய காலச் சரி கட்டுதல் ஆகும். முந்தைய ஆண்டிற்கான வரவு செலவு வைப்பு கணக்கையும் தேவையிருந்தால் ஏற்றுக்கொள்ளலாம். மேலும் வரவு செலவு தொடர்பான முந்தைய ஆண்டுகளோடு தொடர்புடைய இந்த ஆண்டு செலவுகள் கூட முந்தைய வகைகளாக கருதப்படுகிறது.

**5. தேய்மானம் :**

அசையாச் சொத்துக்களின் தேய்மானம் ஒரே தொகை முறையில் பதிவு செய்யப்படுகின்றன, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட உரிய தேய்மான விகிதப்படி தேய்மானம் கணக்கிடப்பட்டுள்ளது. சொத்துக்களின் தேய்மானம் வருடத்தில், செப்டம்பர் 30ம் தேதிக்கு முன் கணக்கில் கொள்ளப்பட்ட சொத்துக்களுக்கு ஒரு வருட தேய்மானமும், அக்டோபர் மாத ஆரம்பத்தில் இருந்து மார்ச் மாதம் முடிய புதியதாக சேர்த்துக்கொள்ளப்பட்ட சொத்துக்களுக்கு அரை ஆண்டு தேய்மானமும் கணக்கிடப்படுகிறது. மார்ச் மாதத்தில் சேர்க்கப்பட்ட சொத்துக்களுக்கு தேய்மானம் விடுவிக்கப்பட்டுள்ளது. முன்னேற்றத்தில் உள்ள திட்டப்பணிகள் முடிவடைந்து உபயோகத்திலுள்ள சொத்துக்களின் தேய்மானம் முடிப்பதற்காக காத்திருந்த போதிலும் (நேர்கோட்டு முறையில்) ஒரே தொகை முறையில் 5 சதவிகிதமும் கணக்கிடப்படுகிறது.

**6. வருவாய் ஏற்பு :**

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் ஈட்டிய ஆதாயத்தில் அடிப்படையிலான கணக்குமுறையை பின்பற்றுகிறது. ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாவிதமான வரவுகளும் செலவினங்களும் வரவேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்கு அடிப்படையில் நடப்பு ஆண்டில் கணக்கிடப்பட்டுள்ளது. பணியாளர்களின் கடனுக்கான வட்டி மற்றும் ஓய்வூதிய கால பலன்கள் ரொக்கமாக கணக்கிடப்பட்டுள்ளது.

**7. ஐயப்பாடுள்ள கடன்கள்:**

குடிநீர் வரி மற்றும் குடிநீர்க் கட்டணம் செலுத்தும் சில்லறைக் கடனாளிகளின் ஐயப்பாடுள்ள கடன்களுக்காக, அளவுமானி உள்ளோருக்கும், அளவுமானி இல்லாதோருக்கும் முறையே 20 சதவீதம் மற்றும் 10 சதவீதமும் மற்றும் வரிகளுக்கு 10 சதவீதமும் வேறுபடும் தொகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8. அசையாச் சொத்து :**

அசையாச் சொத்து எனப்படுவது கொள்முதல் விலை அல்லது கட்டமைப்பு செலவிலிருந்து வந்த அசையாச் சொத்தின் மீதான தொடர் தேய்மான மதிப்பீட்டை கழிக்கப் பெருவது ஆகும். அசையா சொத்துக்கான செலவு எனப்படுவது அடிப்படை செலவு மற்றும் நிறுவனத்திற்காக செலவழிக்கப்படும் செலவு முதல் அதை பயன்பாட்டுக்கு கொண்டு வரும் வரை செலவழிக்கப்படும் அனைத்து செலவுகளை உள்ளடக்கியது ஆகும். திட்டவளர்ச்சி செலவினங்கள் திட்டத்தை நடைமுறை படுத்துவதற்காக செய்யப்படும் அனைத்து செலவினங்களையும் குறிக்கும். திட்டத்தை நடைமுறை படுத்துவதற்காக கொடுக்கப்படும் ஊதியம், சம்பளம், மற்றும் இதரபடிகள், அலுவலக செலவுகள், நிர்வாகச் செலவுகள், எரிபொருள் மற்றும் மசகு ஆகியவற்றில் விகிதாச்சாரம் வாரியத்தால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**9. மானியம் :**

அரசிடமிருந்து பெறப்படும் மானியம் தனியாக காண்பிக்கப்படுகிறது. இந்த வகையான மானியத்திற்காக தொகை ஏதும் திருப்பி செலுத்தப்பட்டதாக தெரியவில்லை.

**10. முதலீடுகள் :**

பொதுவாக முதலீடு எனப்படுவது ரொக்கமாக வங்கிகளில் செலுத்தப்படும் குறித்த கால வைப்பு தொகை. அந்த வைப்பு தொகை மீது பெறப்படும் வட்டி, வரவு மற்றும் செலவு கணக்குகளில் வரவு வைக்கப்படும். இந்த வைப்பு தொகை அல்லாத மற்ற நிதிகள் அல்லது வளர்ச்சி திட்ட முதலீடுகள் மீது பெறப்படும் வட்டி அந்த நிதி திட்ட முதலீடு கணக்கில் வரவு வைக்கப்படும்.

**11. ஓய்வூதிய பணியாளர்களின் பலன்கள்:**

பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வு கால நிதி நலன்கள் ரொக்க அடிப்படியில் கணக்கிடப்படுகிறது.

**12. கடன்களின் மதிப்பு :**

சொத்து வாங்குவதற்காக வாங்கும் கடன் மீதான செலவுகளையும் அந்த சொத்து மதிப்பின் மீது முதலீடு செய்யப்படும்.

**13. ஒதுக்கீடு, நிச்சயமற்ற பொறுப்புகள் :**

வாரியத்திற்கு எதிரான நீதிமன்றத்திலுள்ள ஒவ்வொரு வழக்கும் சட்டபடியாக உண்மையான மதிப்பாய்வு செய்யப்பட்ட போதும் வாரியம் கடனாக ஏற்றுக் கொள்ளாமல் சில்லறைச் செலவினப் பொறுப்பாக வைத்துள்ளது.

**14. சரிசெய்யப்பட்ட இழப்பீடுகள் :**

சரிசெய்யப்பட்ட இழப்பீடுகள் இதர வருமானமாக கருத பட வேண்டும்.

## அட்டவணை - க்யூ

### 2014 மார்ச் 31 ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகள் மீதான குறிப்புகள்

### இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்புகள்

**I. அட்டவணை - எ - பங்குகள்**

**1. பொதுமக்களிடமிருந்து பெறப்படும் பங்குகள் - ரு. 634.17 கோடி - ( சென்ற ஆண்டு- 598.08 கோடி)**

குடிநீர் / கழிவு நீர் இணைப்புப் பணிகளுக்காக பொது மக்களிடமிருந்து கடந்த நிதியாண்டில் பெறப்பட்ட தொகை ரு. 36.09 கோடி (சென்ற ஆண்டு -ரு.42.37 கோடி) நடப்பு ஆண்டில் பொதுமக்களின் பங்குக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.

**2. கடன் பொறுப்புகளுக்கு மேற்பட்டகூடுதல் சொத்துகள் - ரு. 21.19 கோடி - (சென்ற ஆண்டு - 21.19 கோடி)**

சென்னை மாநகராட்சி, பொதுப்பணித்துறை மற்றும் இடைக்கால வாரியம் போன்றவற்றிலிருந்து முறையே ரூ. 15.92 கோடி, ரூ. 5.19 கோடி மற்றும் ரூ. 0.08 கோடி பெறப்பட்டகடன் பொறுப்புகளுக்கும் மிகையான தொகை என குறிப்பிடப்பட்ட தொகை சென்னைக் குடிநீர் வாரியத்தில் நீண்ட காலமாக தொடர்ந்து நிலுவையில் இருந்து வருகிறது. இந்த தொகைகள் அட்டவணை - எ - பங்குகள் முந்தைய ஆண்டுகளின் நடைமுறைகளின் படி காட்டப்பட்டுள்ளது.

**3. மூலதன ஒதுக்கீடு - ரூ. 274.81 கோடி (சென்ற ஆண்டு - 255.35 கோடி)**

அ. சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் வழியாக விண்ணப்பபிப்பவரிடம் நேரடியாக நடப்பு ஆண்டில் உள்கட்டமைப்பு மேம்பாட்டு கட்டணமாக பெறப்பட்ட ரூ. 19.46 கோடி (சென்ற ஆண்டு ரூ. 18.81 கோடி) மூலதன இருப்பு ஒதுக்கீடு கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

ஆ. நிலத்தை விற்றதன் இழப்பீடு ரு. 90.35 கோடி (சென்ற ஆண்டு ரூ. 90.35 கோடி) 2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை உள்ள காலகட்டில், சுமார் 5.604 ஏக்கர் பரப்பளவிலான கோயம்பேடு மற்றும் சென்னையில் மூன்று இடங்களில் உள்ள நிலத்தை வாரியம் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்திற்கு விற்பனை செய்ததில் பெறப்பட்ட தொகை ரு. 90.35 கோடி ஆகும். இழப்பீட்டு தொகை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனமும் சென்னை குடிநீர் வாரியமும் இணைந்து நிகழ்த்தியின் படியும் இணையாக நிலஅளவை பின்பற்றத் தக்க வழிகாட்டுதல் படி மதிப்பீடு அறிக்கைப்படியும் ஒரு ஏக்கர் ரூ. 43,658.23 என ஏற்றுக் கொள்ளப்பட்ட தொகை, அதன்படி சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்திற்கு விற்பனை செய்த கோயம்பேடு மற்றும் சென்னையில் உள்ள முன்று இடங்களின் நிலத்தின் புத்தக மதிப்பீட்டில் 22,678 சதுர மீட்டர் , ரூபாய் 99,008/- என கணக்கிடப்பட்டுள்ளது. பின்பற்றத்தக்க வழிமுறைகள் மதிப்பீட்டிற்கும், புத்தக மதிப்பீட்டிற்கும் உள்ள வேறுபாட்டுத் தொகை ரூபாய் 90.34 கோடி (ரூ. 90.35 கோடி கழிக்க ரூ. 0.01 கோடி) மூலதன ஒதுக்கீடாக கருதப்படுகிறது.

**4. நிதி - ரூ. 109.23 கோடி (சென்ற ஆண்டு - 100.09 கோடி)**

நிதி என்று குறிக்கின்ற நிலையான சொத்துக்களை புதுப்பிக்கும் நிதிக்காக ரூ. 57.89 கோடி அளவிற்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது. (சென்ற ஆண்டு ரூ. 52.15 கோடி). நிதிக்கணக்கில் உள்ள நிலுவை, கடந்த வருடங்களில் சேர்ந்துள்ள நிலையான சொத்துக்களுக்கு எதிராக ஒதுக்கீடு செய்யப்படாத நிதியைக் குறிக்கிறது.

## II). அட்டவணை – பி– அரசு மானியங்கள்

### 1. அரசு அரசிடமிருந்து பெறப்பட்ட மானியம் – ரூ. 2507.97 கோடி ( சென்ற ஆண்டு 1939.42 கோடி)

அ. சென்னை நகர குடிநீர் திட்டம் II, சென்னை நகர நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம், நகர உள்ளாட்சி மானியங்கள் திட்டம், ஆகியவை, வெவ்வேறு திட்டங்களுக்கு அரசிடமிருந்து பெறப்பட்ட மானியங்கள் தனியே காண்பிக்கப்பட்டுள்ளது.

**ஆ. அரசு மானியம் (சென்னை நகர குடிநீர் திட்டம் II மற்றும் சென்னை நகர நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம்) – ரூ. 488.97 கோடி (சென்ற ஆண்டு – 488.97 கோடி)**

மார்ச் 31, 2014 அன்றைய நிலுவையிலுள்ள மீத தொகை நிலவரப்படி, மேலே குறிப்பிட்டுள்ள திட்டங்களுக்கு முறையே சென்னை நகர குடிநீர் திட்டம் II 2008-09க்கு முன்பு உள்ளபடி ரூ. 137.38 கோடி என்ற தொகையாகவும் மற்றும் சென்னை நகர நதிநீர் பாதுகாப்புத் திட்டத்திற்கு 2009-10லிருந்து தொடர்ந்து ரூ.351.59 கோடி ஆகவும் நீடிக்கிறது.

**இ. அரசு மானியம் (ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம்) – ரூ. 202.11 கோடி ( சென்ற ஆண்டு – 183.96 கோடி)**

சென்னை குடிநீர் வாரியம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் பற்பல திட்டங்களுக்காகப் பெறப்படுகின்ற மானியத் தொகையை ஒரு வங்கிக் கணக்கில் கணக்கீடு செய்து பரமாரிக்கப்படுகிறது. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் பெறப்படுகின்ற மானியத்தைத் தவிர வேறு வருமானமும் அவ்வங்கி கணக்கில் கணக்கீடு செய்யப்படுகிறது.

**ஈ) அரசு மானியங்கள் (மற்றவை) – 15 ஆயிரம் மில்லியன் கன அடி சென்னை பெருநகர குடிநீர் விநியோகத்தின் பெருக்கத்திற்கான மானியம் ரூ. 105.60 கோடி ( சென்ற ஆண்டு – 105.60 கோடி)**

சென்னை நகரின் குடிநீர் விநியோகத்தின் பெருக்கத்திற்காக முன்மொழியப்பட்ட திட்டத்திற்காக 2012-13 நிதியாண்டிற்கு தமிழ்நாடு அரசிடமிருந்து பெறப்பட்ட மானியமாக குறிப்பதாகும்.

**உ) அரசு மானியங்கள் (மற்றவை) – கடன்கள் திரும்ப செலுத்தப்படுவதற்கான மானியம் – ரூ. 75.29 கோடி (சென்ற ஆண்டு இல்லை)**

I) முன்னாள் உள்ளாட்சி மன்றங்கள் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் உள்ளமைப்பு ஆகியவற்றிலிருந்து கடன் பெற்றுள்ளன.

ii) தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிறுவனத்திடம் பெறப்பட்ட கடன் தொகை ரூ. 129.73 கோடியும் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் பெறப்பட்ட கடன் தொகை ரூபாய் 34.87 கோடியும் சேர்ந்து ரூபாய் 164.60 கோடியை வாரியம், தமிழ்நாடு அரசிடம் இந்த இரு கடன்களையும் தீர்க்க கோரியுள்ளது. 31 மார்ச் 2014, முடிய தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிறுவனத்திடம் நிலுவையில் உள்ள தொகை அசல் ரூபாய் 45.33 கோடி மற்றும் வட்டி ரூபாய் 18.19 கோடி மற்றும் அபாரதவரி ரூபாய் 0.65 கோடி சேர்ந்து மொத்த தொகை ரூபாய் 64.17 கோடி ஆகும், 31 மார்ச் 2014 முடிய தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் நிலுவையில் உள்ள தொகை அசல் ரூபாய் 4.03 கோடி மற்றும் வட்டி ரூபாய் 7.09 கோடி சேர்ந்து ரூபாய் 11.12 கோடிகளாகும்.

iii) 31 மார்ச் 2014 முடிவடைந்த ஆண்டில் பெறப்பட்ட தொகை ரூ. 75.29 கோடி, தமிழ்நாடு நகர்ப்புற நிதி அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டுநிறுவனம் மற்றும் தமிழ்நாடு நகரப்புற உள்கட்டமைப்பு நிதி

சேவை நிறுவனங்களின் 2012-13 மற்றும் 2013-14 ஆண்டுகளின் தவணை கடந்த நிலுவை மானியமாகவே கருதப்படுகிறது.

**ஊ) அரசு மானியம்(நகர்ப்புற உள்ளாட்சி மன்ற மானியம்) – ரூ. 281.60 கோடி**

**(சென்ற ஆண்டு – 233.70 கோடி)**

அ) ரூபாய் 1.61 கோடி தாம்பரம் நகர்ப்புற உள்ளாட்சி மன்றத்தின் தொகையும் சேர்த்து ரூ. 47.91 கோடி 6 நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் மானியத்தொகையாக அரசிடமிருந்து 2013-14 ஆண்டு பெறப்பட்டுள்ளது. ஆனால் அவர்களின் பொறுப்புகளும் சொத்துகளும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

ஆ) நவம்பர் 2013 முதல் ஏப்ரல் 2014 வரையுள்ள காலங்களுக்கான நகர உள்ளாட்சி அமைப்பு மானியத் தொகையாக ரூ. 29.93 கோடி மே மாதம் 2014ல் பெறப்பட்டது. மேற்சொல்லப்பட்ட மானியத் தொகை (2014 ஏப்ரல் மாதத்திற்கும் சேர்த்து) பெறப்படவேண்டிய மானியத் தொகைக் கணக்கு தலைப்பில் (வருவாய் மானியம்) கணக்கீடு செய்வதற்குப் பதிலாக 31.3.2014 அன்றுள்ள தேதியில் வருகின்ற நகர உள்ளாட்சி மானியப் பொறுப்புக்கள் தலைப்பின் கீழ் குறைக்கப்படுகிறது.

**எ) பொறுப்புரிமை மாற்றம் நிதி – ரூ. 210.31 கோடி (சென்ற ஆண்டு – 171.47 கோடி)**

I) மேலே குறிப்பிட்டுள்ள நிதியின் மீதமுள்ள தொகை, மாநில வரி வருவாயிலிருந்து மானியமாக நிலையான சதவிகிதத்தில் பொது மேம்பாட்டு திட்டங்களுக்கு பயன்படுத்துவதற்காக பெறப்பட்ட தொகையாகும்.

ii) முடிவடைந்த 31 மார்ச் 2014 முடிவடைந்த ஆண்டில் பெறப்பட்ட தொகை ரூ. 38.84 கோடி (சென்ற ஆண்டு - ரூ. 45.22 கோடி) ஏப்ரல் 2013 முதல் ஜனவரி 2014 வரை மானியமாக எடுத்துரைக்கபட்டுள்ளது. பிப்ரவரி 2014 முதல் மார்ச் 2014 வரை மொத்த மானியமாக ரூ. 7.76 கோடி ஏப்ரல் 2014ல் பெறப்பட்டுள்ளது. இதனால் தற்போதைய நிதியாண்டில் கணக்கிடப்படவில்லை.

**ஏ) அரசு மானியம் (பெருநகர திட்டம்) – ரூ. 258.33 கோடி (சென்ற ஆண்டு – 28.17 கோடி)**

சென்னை பெருநகர திட்டத்திற்காக நடப்பு நிதியாண்டில் ரூ. 230.16 கோடி தமிழக அரசிடமிருந்து மானியமாக பெறப்பட்டுள்ளது. 2011-12, 2012-13 மற்றும் 2013-14 ஆண்டிற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டு மற்றும் பெறப்பட்ட மானிய தொகைகள் முறையே ரூ. 189 கோடி, ரூ. 248.75 கோடி, ரூ.513.33 கோடி, ரூ. 71.36 கோடி, ரூ. 134.35 கோடி மற்றும் ரூ. 24.45 கோடிகளாகும்.

**2. அரசிடமிருந்து பெறப்பட்ட மானியம்**

பெருநகர வளர்ச்சி கூடுதல் மத்திய உதவி திட்டத்திற்காக ரூ. 18.15 கோடி, ரூ. 121.18 கோடி மற்றும் ரூ. 230.16 கோடி மத்திய அரசின் கூடுதல் மானியமாக முறையே, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம், நெம்மேலி கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் மற்றும் சென்னை பெருநகர திட்டம் போன்ற திட்டங்களுக்காக இந்த நடப்பாண்டில் பெறப்பட்ட மானியங்கள் மார்ச் 31, 2014 அன்று மேம்படுத்துபவர் பங்குகளாக கருதப்படுகிறது.

**III. அட்டவணை – சி – நீண்ட கால கடன்கள்**

**1. அரசிடமிருந்து பெற்ற கடன் ரூ. 727.51 கோடி ( சென்ற ஆண்டு – 727.51 கோடி)**

அரசிடமிருந்து பெறப்பட்ட முதல் மற்றும் இரண்டாவது சென்னைக் குடிநீர் திட்டங்களுக்கும், வேறு திட்டங்களுக்கான கடன்கள் இந்த கணக்கில் காட்டப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் அசல் மற்றும் வட்டி வகைகள் இந்தக் கணக்கில் திருப்பி செலுத்தவில்லை. தவணை கடந்த நிலுவையாக உள்ள அசல் (ரூ.

338.03 கோடி), மற்றும் வட்டி (ரூ. 586.35 கோடி), 31 மார்ச் 2014ல் அசலும் வட்டியும் சேர்ந்து மொத்தம் ரூ. 924.38 கோடிகளாகும்.

2. **நிதி நிறுவனங்களிலிருந்து பெற்ற கடன்கள் ரூ. 180.49 கோடி ( சென்ற ஆண்டு – 184.37 கோடி)**

அ) முன்னாள் உள்ளாட்சி அமைப்புகள் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டுநிறுவனம் மற்றும் தமிழ்நாடு நகரப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனங்களிலிருந்து கடன் பெற்றுள்ளன.

ஆ) தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனத்திடம் கடனாக பெறப்பட்ட திருத்திய அசல் தொகை முறையே ரூ. 129.73 கோடி மற்றும் ரூ.34.87 கோடி ஆகும். மொத்தத் தொகை ரூ. 164.60 கோடியை மேற்காண் இரு நிதி நிறுவனங்களின் கடன்களை தீர்க்க வாரியம் தமிழக அரசிடமிருந்து மான்யமாக வழங்க அணுகியுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு நிறுவனத்திற்கு 31 மார்ச் 2014 முடிய செலுத்த வேண்டிய தவணை கடந்த மொத்த நிலுவைத் தொகை ரூ. 64.17 கோடி, இதில் அசல் 45.33 கோடி வட்டி ரூ 18.19 கோடி இதில் அபராத வட்டி ரூ. 0.65 கோடி ஆகியவை உள்ளடங்கும். தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை பணித்தொகுதி நிறுவனத்திற்கு 31 மார்ச் 2014 முடிய செலுத்த வேண்டிய தவணை கடந்த மொத்த நிலுவை தொகை ரூ. 11.12 கோடி, இதில் அசல் 4.03 கோடி, வட்டி ரூ 7.09 கோடி ஆகியவை உள்ளடங்கும்.

இ) தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுநிறுவனம் மற்றும் தமிழ்நாடு நகரப்புற கட்ட நிதி சேவை பணித்தொகுதி நிறுவனங்களின் தவணை கடந்த நிலுவைகளான அசல், வட்டி, அபாரதவரி ஆகியவற்றை சரி செய்வதற்காக சென்னை குடிநீர் வாரியம் தமிழ்நாடு அரசிடமிருந்து மானியமாக 2012-13 ஆம் ஆண்டிற்கு ரூ. 49.71 கோடியும் மற்றும் 2013-14 ஆண்டிற்கு ரூ. 25.58 கோடியும் மற்றும் மீதி நிலுவை மானியத்தை அடுத்துவரும் ஆண்டுகளில் வருடாந்திர அடிப்படையில் வழங்குமாறு கோரிக்கை வைக்கப்பட்டது, அதன்படி தமிழ்நாடு அரசிடமிருந்து மானியமாக ஜனவரி 2014ல் ரூ. 49.71 கோடி மற்றும் மார்ச் 2014ல் ரூ. 25.58 கோடி சேர்ந்து மொத்த தொகை ரூ. 75.29 கோடி சென்னை குடிநீர் வாரியத்தால் பெறப்பட்டது. அதன் காரணமாக 31 மார்ச் 2014 முடிய தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படைகட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற நிதி பற்றிய உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனங்களுக்கு எந்த காலங்கடந்த நிலுவை ஏதும் இல்லை.

## IV. அட்டவணை – டி – நிறுத்தி வைக்கப்பட்ட வரவுகளும் வைப்பு தொகைகளும்

1. **பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட வைப்புத் தொகை – பொதுப்பணிகள் – ரூ. 642.44 கோடி (சென்ற ஆண்டு – 617.35 கோடி)**

அ) முந்தைய உள்ளாட்சி பகுதியான பெருங்குடியில் குடிநீர் இணைப்பு அளிப்பதற்காக பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட வைப்பு தொகை ரூ. 0.65 கோடி இதுவரை இணைப்பு வழங்கப்பட வேண்டியவையும் இக்கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஆ) இந்த கணக்கில் மீதம் நிலுவையிலுள்ள தொகை முந்தைய உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து வாரியம் முன் வைப்புத் தொகையாக பெற்ற ரூ. 297.24 கோடியை நிகர் செய்த பிறகு உள்ளதாகும்.

2. **முன் வைப்பு தொகை – முன் வைப்பு தொகை ஆலோசனை பணிகளுக்கான – ரூ. 144.09 கோடி ( சென்ற ஆண்டு – 144.09 கோடி)**

பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட முன் வைப்புத்தொகை - கழிவு நீரகற்றல் - பிற பணிகளை கழிவு

நீரகற்றல் மற்றும் சென்னை மாநகர நதிநீர் பாதுகாப்பு திட்டத்திற்கான ரூ. 166.38 கோடி, மதுரை மற்றும் கும்பகோணம் பணிகளுக்கான திட்டத்திற்கு செலவிடப்பட்டது. 2013-14 ஆண்டுவரை வாரியம் முன் வைப்புத் தொகை ரூ. 165.27 கோடி பெற்றுள்ளது. திட்டப் பணிகள் முடிவு பெற்றதற்கான அறிக்கை பெற வேண்டியுள்ளதால் இந்த முன் வைப்புத் தொகை திட்ட பணிகளுக்கான செலவின ஒதுக்கீடு செய்யப்படாமல் நிலுவையில் உள்ளது.

## V. அட்டவணை – இ – நடப்பு பொறுப்புகளும் ஒதுக்கீடுகளும்

### 1. மற்ற கடன்கள் – பணியாளர்கள் – பொது வருங்கால வைப்பு நிதி – ரூ. 39.58 கோடி (சென்ற ஆண்டு – 42.16 கோடி)

பொது வருங்கால வைப்பு நிதியிலுள்ள இறுதி நிலுவை தொகையை, பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் முன்பணமாக வழங்கிய தொகை நடப்பு பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

### 2. இதர கடன்கள் – மற்றவை

அ. இரண்டு கணக்குகளின் இறுதி நிலுவை தொகை அதாவது, இறுதி நிலுவை பொறுப்பு- சென்னை மாநகராட்சி மன்றம் (பொது பேரேடு 5400) ரூ. 37,39,842/- (கடன் பற்றிய நிலுவை) மற்றும் செலவு கணக்கு - ஓய்வூதியம் (பொது பேரேடு 5370) - ரூ. 45,25,33,841/- ஒத்திசைவு செய்யப்படவேண்டி உள்ளது.

ஆ. வங்கியிலுள்ள குறுகிய கால வைப்பு நிதி வைக்கப்பட்டுள்ள தொகை அதற்குரிய முதிர்வு தேதியில் கிடைக்க பெறும் தொகையை தற்காலிகமாக தனியாக (பொது பேரேடு 5371 - பணம் செலுத்தப்படவேண்டிய கணக்குகள்) ஒரு கணக்கின் தொகை ரூ. 32,57,08,657/- வரவு வைக்கப்பட்டுள்ள தொகை ஒத்திசைவு கணக்கு சரி செய்யப்பட வேண்டியுள்ளது.

இ. சென்னை மாநகராட்சியிலிருந்து மாற்றப்பட்ட ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடையில் சேர்ந்துள்ள (பொது பேரேடு 5390) - ரூ. 20,09,651/- மற்றும் நிலுவையிலுள்ள பொறுப்புகள் பொதுப்பணித்துறை (பொது பேரேடு 5410) - ரூ. 13,18,201/- ஆகிய இரண்டு கணக்குகளில் நீண்டகாலமாக நிலுவையில் உள்ள தொகை ஒத்திசைவு சரி செய்யப்பட வேண்டியுள்ளது.

ஈ. பொறுப்புக்கள் மற்றவை என்ற தலைப்பில் காணப்படும் மொத்தத் தொகையான ரூ. 4.41 இலட்சம் (பற்று இருப்பு) நீதிமன்ற ஆணைப்படி பணியாளர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட தொகையாகும். இத்தொகையில் சேர்க்கப்பட்டுள்ள ரூ. 2.40 இலட்சம் நிலுவைத் தொகை 2013 ஆம் ஆண்டிற்கு முந்தியது ஆகும்.

உ. 31 மார்ச் 2014, நிலையில் வரும் ஒன்பது கணக்குகளில் ( பொது பேரேடுகள் 5580, 5600, 5760, 5810, 5311, 5315, 5460, 5515, 5331) - எதிர்மறையான மொத்த நிலுவைத் தொகை ரூ. 27,10,41,358/- ஒத்திசைவு செய்யப்பட்டு வருகிறது.

ஊ). இதர கடன்கள் - ஒப்பந்த தொழிலாளர்களுக்கு செலுத்த வேண்டிய தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகத் தொகை ரூ. 62,799/- நீண்ட கால நிலுவையில் உள்ளது மற்றும் இருப்பதை சரிசெய்வதற்காக நடவடிக்கைகள் தொடங்கபட்டு வருகிறது.

## VI. அட்டவணை – எப் – நிலையான சொத்துக்கள்

1. நிலையான சொத்துக் கணக்கில்(முன்னேற்றத்திலுள்ள) திட்டங்கள் நடப்பு நிதி ஆண்டு பேரேட்டுக் கணக்கின் படி நிலுவை இருப்பு முறையே தொடக்க இருப்பு, இறுதி இருப்பு தொகைக்கும் திட்டங்களை செயல்படுத்தும் துறையில் உள்ள பதிவேட்டில் காணப்படும் தொகையும் ஒன்றுக்கொன்று ஒத்துப் போகவில்லை.

2. 31.3.2014 அன்றுள்ள தேதிப்படி பேரேட்டின்படி திட்டங்கள் முன்னேற்றம் என்ற தலைப்பில் உள்ள பலவிதத்தலைப்புக்களில் அதாவது, குடிநீர் வழங்கல், கழிவுநீரகற்றல், பொது, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் மற்றும் சென்னைக் குடிநீர் பெருக்குத் திட்டம் இருப்புத் தொகையும் திட்டத்துறை பதிவேடுகளிலுள்ளபடி உள்ளபடி இருப்புத் தொகை முறையே ரூ. 3052.40 கோடி மற்றும் ரூ. 3164.27 கோடி உள்ளது. இதற்கு ஒத்திசைவு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3. தலைமை அலுவலக கணக்குகளில் புத்தகங்களை மட்டும் நிலையான சொத்துக் கணக்குகள் காட்டப்படுகிறது. 7 பகுதி அலுவலகங்களில், (பழைய பகுதி அலுவலகம் 9 பிற்பாடு நீக்கப்பட்டது) உட்பட, நிலையான சொத்துக்களிலும் முன்னேற்றத் திட்டங்களில் முறையே ரூ. 4.51 கோடி, ரூ. 0.16 கோடி மற்றும் பகுதி அலுவலகம் 11ல் ரூ. 2.47 கோடி (வரவு இருப்பு) பேரேட்டுக் கணக்கு எண் - 6220, 6270, 6320, 6400 மற்றும் 6440) இது சம்பந்தமாக ஒத்திசைவு தொடங்கப்பட்டுள்ளது. இருப்புக் கணக்கில் தொடர்ந்து நிலுவையிலுள்ளது.

4. அ) நிலையான சொத்துக்களில் ரூ. 81.40 கோடி சேர்க்கப்பட்டு முன்னேற்றத்திலுள்ள மற்றும் முடிப்பறிக்கை பெறப்படாத மூன்று திட்டப்பணிகள் அதாவது இரண்டாவது சென்னை நகர குடிநீர் திட்டப்பணி, நாளொன்றுக்கு 530 மில்லியன் குடிநீர் வழங்கும் திட்டப்பணி மற்றும் சென்னை நகர நதி நீர்ப் பாதுகாப்பு திட்டப் பணிகள் ஆகும். 2013-14 நடப்பாண்டில் நிலவும் நடைமுறைபடி மேலே குறிப்பிட்டுள்ள நியமித்த திட்டப்பணிகளுக்கு ஒரே தொகை சீரான முறையில் தேய்மானத் தொகை (5%) ரூ. 4.07 கோடி அளிக்கப்பட்டது.

ஆ) முன்னேற்றத்திலுள்ள பணி திட்டங்கள் /கழிவு நீரகற்றல்/வைப்புத் தொகை பணிகள், முடிப்பறிக்கை பெறப்படாத ரூ. 156.87 கோடிகள் சென்னை நகர நதி நீர்ப் பாதுகாப்பு திட்டம் மதுரை மற்றும் கும்பகோணம் கழிவு நீரகற்றுப் பணிகள் (மதுரை ரூ. 114.40 கோடி மற்றும் கும்பகோணம் ரூ. 42.47 கோடி) உள்ளடங்கும்.

5. ஊதியம், கூலி மற்றும் படிகளின் செலவினங்கள் மற்றும் நிர்வாகச் செலவுகள், எரிபொருள் மற்றும் மசகுகளின் செலவுகள் சரிமுறை விகித விழுக்காடுகள் முறையே 23%, 30%, மற்றும் 30% ஆகும் முன்னேற்றத்திலுள்ள பணிகளுக்காக.

6. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பணிகளுக்காக ரூ.336.20 கோடி( சென்ற ஆண்டு ரூ. 297.24 கோடி) (31.03.2012 முடிய நடப்பு ஆண்டில் உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை வாரியம் ஏற்றுக் கொண்டது தவிர) முன்னேற்ற திட்டப் பணிகளில் உள்ளது. இப்பணிகள் முடிவடைந்த பிறகு உள்ளாட்சிகளால் செலுத்தப்பட்ட வைப்புத் தொகையில் மொத்தச் செலவும் சரிக் கட்டப்படும்.

7. 530 நிகழ்வு திட்டப்பணிகளின் மொத்த தொகை ரூ. 348.30 கோடி, அவற்றில் 2012-13 ஆம் ஆண்டிலும் மற்றும் 2013-14 ஆம் ஆண்டிலும் எந்த வித வரவு செலவும் இல்லை மற்றும் திட்டப் பணிகளில் எந்த முன்னேற்றமும் இல்லை, இத்திட்டப் பணிகளின் முடிப்பறிக்கைகளைப் பெற நடவடிக்கை எடுக்கப்படுகிறது மற்றும் கணக்கு முறைக் கோட்பாடுகளின் படி இணை முறையில் தேய்மானம் கணக்கிடப்பட்டுள்ளது.

8. சில முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரை, அவற்றால் உபயோகப்படுத்தப்பட்ட சில சொத்துக்கள் அவற்றிற்கு உரிமை இல்லாததாகும். அச்சொத்துக்கள் அவற்றின் உபயோக உரிமையில் இருந்தாலும் அத்தொகைகளை நஷ்ட ஈட்டுடன் கூடிய உரிமையாளருக்கு மாற்றம் அல்லது தற்போது இருக்கும் நிலைமையே தொடர்வது போன்றவை இறுதி செய்யப்படவில்லை.

9. 2010-11 ஆண்டிலிருந்து நடைபெறும் வறட்சி நிவாரண பணிகளுக்கான தொகை ரூ. 107.85 கோடி

நிலையான சொத்துக்களில் உள்ளடங்கும். இவ்வாறான சொத்துகளுக்கு தேய்மானம் ஏதும் கருதப்படவில்லை. இச்சொத்துக்கள் பழமையானதும், வேலைத் திறனற்றதும் என்பதால் தக்க அதிகார ஒப்புதலுடன் அவற்றை தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்க கருதப்படுகிறது.

10. 31.3.2014 அன்றுள்ளபடி, 7 நிகழ்வுகளில், நிலையான சொத்துக்கள் ரூ.1.02 கோடி வாங்கியதில் தேய்மானத்திற்காக ரூ. 5.31 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்க கணக்கு முறை கோட்பாடுகளின்படி, மார்ச் மாதத்தில் சேர்ந்துள்ள சொத்துக்களுக்கு தேய்மானம் கணக்கீடு செய்யப்பட வேண்டியதில்லை.

11. முந்தைய ஆண்டுகளில் செயல்பாட்டில் வந்துள்ள நிலையான சொத்துக்கள் நடப்பு ஆண்டில் முதலீட்டு சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து முற்றுப் பெற்றதற்கான சான்றிதழ் பேரில் முதலீட்டுக் கணக்கில் கீழ்கண்ட வகைப்பாடுகளில் கீழ் கொண்டு வரப்படுகிறது. அதாவது குடிநீர், கழிவுநீர் மற்றும் பொது என்பவைகளில் மொத்தத் தொகையாக ரூ. 2,64,51,477 கொண்டு வரப்படுகிறது.. இதற்கு மொத்தமாக ரூ. 11,63,914/- தேய்மானத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

## VII. அட்டவணை – ஜி – நடப்புச் சொத்துக்கள், கடன்கள், முன்பணம் மற்றும் வைப்புத் தொகை

### 1. பொருட்கள் – ரூபாய் 12.02 கோடிகள் – (சென்ற ஆண்டு – ரூ. 17.48 கோடிகள்)

அ) 31 மார்ச் 2014 தேதியிலான, பொருட்கள் விவரப் பட்டியல் மீது அகவை பகுப்பாய்வு நடைப்பெறவில்லை, இதன் விளைவாக, அசையாத மற்றும் வழக்கற்றுப்போன பொருட்களும் ஒதுக்கீடுகளும் கண்டறியப்படுவது இன்னும் முடிவு பெறாமல் செயல்முறையில் உள்ளது.

ஆ) மற்றவற்றக்கிடையில் கிடங்கு தனிக் கணக்கில் ரூபாய் 4.97 லட்சம் இவற்றின் (மண்டல அலுவலகம் - 2/யின் ரூ.3.46 லட்சம் மற்றும் தலைமை அலுவலகம் ரூ. 1.51 லட்சம் உள்ளடக்கியதாகும்) மீதமுள்ள நிலுவை, ஏப்ரல் 2007 ஆம் ஆண்டு முதல் அதே நிலையில் உள்ள கிடங்கு தனிக் கணக்கின் மீதம், தக்க அதிகார ஒப்புதலுடன் உரிய காலத்தில் தள்ளுபடி செய்ய கருதப்படுகிறது.

இ) 2011 ஆம் ஆண்டிலிருந்து கீழ்க்காணும் பொருட்கள் விவரப்பட்டியலில் 2 கணக்குகளில் எ வ் வி த நடவடிக்கைகளோ / நடவடிக்கைகள் தொடர்ச்சியற்றும் இருப்பதால், அது சம்பந்தமாக ஒத்திசைவு தொடங்கப்பட்டுள்ளது.

பண்டகசாலையின்இருப்பு குறைவு (பேரேடு எண் - 8240) - ரூ.193.55 இலட்சம் (பற்று இருப்பு)
பண்டகசாலையின் இருப்பு மிகை (பேரேடு எண் - 8230 - ரூ.188.14 இலட்சம் (வரவு இருப்பு)

ஈ) ஏழு பண்டகசாலைகளில் அதாவது ஈடிசி பண்டகசாலை, பகுதி - I அலுவலக பண்டக சாலை கணக்கு, பகுதி III பண்டக சாலை கணக்கு, பகுதி அலுவலக 5 பண்டக சாலை கணக்கு, பகுதி அலுவலக 6 பண்டக சாலை கணக்கு, பகுதி அலுவலக 8 பண்டக சாலை கணக்கு, பகுதி அலுவலக 10 பண்டக சாலை கணக்கு ஆகியவற்றில் அளித்துள்ள, பொருள் விவரப் பட்டியலில் அளித்துள்ள சான்றிதழில் காணப்படும் தொகைக்கும் சம்பந்தப்பட்ட பண்டகசாலை பேரேட்டில் உள்ள நிலுவை இருப்புத் தொகையும் ஒத்துப் போகவில்லை. இதற்கு ஒத்திசைவு செய்யப்படுகிறது.

உ) மூன்று பண்டகசாலைகளில் அதாவது, பகுதி அலுவலக 1 பண்டகசாலை, பகுதி அலுவலக 3 பண்டகசாலை, மற்றும் பகுதி அலுவலக 5 பண்டகசாலை சம்பந்தப்பட்ட பேரேட்டிலுள்ள பொருட்கள் விவரப் பட்டியல் கணக்கில் காணப்படும் நிலுவை இருப்புத் தொகை எதிர்மறை இருப்பாக உள்ளது. இது சம்பந்தமாக ஒத்திசைவு செய்யப்பட்டு வருகிறது.

ஊ) பொருட்கள் விவரப்பட்டியல், சரிக்கட்டுதல் கணக்கில் உள்ள நிலுவை இருப்புத் தொகை

உள்ளடங்கியது. அதாவது பண்டகசாலை கட்டுப்பாட்டுக் கணக்கு, பண்டக சாலை இருப்பு சரிக்கட்டுதல், உள்ளே வரும் பொருட்பட்டியல் மதிப்பீடு, பொருட் பட்டியல் வள ஆதாரங்கள், நிலை இருப்பை போக்குவதற்கோ/திரும்பப் பெருவதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளது.

ஏ) கணக்கியல் நியமம் 2ன்படி, பொருட்கள் விவரப் பட்டியல் குறைந்த விலையில் மதிப்பீடு செய்வதோடு வசூலிக்கப்பட வேண்டிய நிகர மதிப்பீட்டில் இருக்க வேண்டும். 31.3.2014 அன்றுள்ள படி பொருட்கள் விவரப்பட்டியல் சம்பந்தமான சில பேரேட்டுக் கணக்கில், நிலுவை இருப்புத் தொகை எதிர்மறையாக உள்ளது. கணக்கியல் நியமம் 2ன் படி, தேவைப்படுகின்றவற்றில், அவ்வகையான இருப்புக்களைத் திரும்பப் பெற தேவையான நடவடிக்கைகள் தொடங்கப்பட இருக்கிறது.

ஏ) மத்திய பண்டகசாலைக்கும் பணிமனைகளுக்கும் எதிராக நடைபெறும் பொருட்கள் விவரப்பட்டியல் பகுதி அலுவலகங்கள் கணக்கு மூலமாக எதிர்கணக்கில் கணக்கீடு செய்யப்படுகிறது. இருந்த போதிலும் 6 பகுதி அலுவலகங்களில் தேவையான பதிவுகள் கணக்கீடு செய்யப்படாததால், அதாவது பகுதி அலுவலகம் 1,3,5,6,8 மற்றும் 10 பகுதி அலுவலக பண்டகசாலைகள் கணக்கில் 31.3.2014 அன்றுள்ளபடி, மொத்தமாக ரூ. 75.88 இலட்சம் வரவுக் கணக்கில் காட்டுகிறது.

2. <u>சில்லறைக் கடனாளிகள் – ரூ. 187.14 கோடி – (சென்ற ஆண்டு – ரூ. 207.18 கோடிகள்)</u>

அ) குடிநீர் கட்டணங்கள், வரிகள் மற்றும் கழிவு நீர்கட்டணங்கள் தலைப்பின் கீழ் நீண்ட நாட்களாக வரவேண்டியவைகளுக்கு எதிராக ஒதுக்கீடு செய்யும் போது, நீண்டநாள் கடனாளிகளை பகுப்பாய்வு செய்தல் கணக்கில் தொடர்கிறது.

ஆ) நடைமுறையிலுள்ள கொள்கைப்படி, கழிவுநீரகற்று சேவை கட்டணத்திற்கான சில்லறை கடனாளிகள் மீதான ஐயப்பாடுள்ள கடன்களுக்கு ஒதுக்கீடு கருதப்படவில்லை.

இ) வாரியத்தின் குழுமப் பணிக்கொடை பொறுப்பாட்சி கணக்கின் கீழ் வரும் ரூபாய் 1.21 கோடி (சென்ற ஆண்டு - ரூ. 0.48 கோடி - வரவு இருப்பு) சில்லறை கடனாளிகளில் உள்ளடங்கும்.

<u>ஈ) வரவேண்டிய நூற்று வீதக்கட்டணம் – ரூ. 0.55 கோடி ( வரவு இருப்பு) – சென்ற ஆண்டு – ரூ. 12.38 கோடி)</u>

31 மார்ச் 2014ன் படி, மேலே குறிப்பிட்டுள்ளத் தொகையை வரவு இருப்புத் தொகையாக காட்டப்படுகிறது. நிலுவையிலுள்ள தொகையை ஒத்திசைவு செய்யப்படவுள்ளது.

<u>உ) பொதுத் துறை ஆணைக்குழுக்களிடமிருந்து வரவேண்டியவை ரூ. 2.30 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 0.88 கோடி)</u>

மேற்கண்ட தலைப்பில் நடப்பு ஆண்டில் அதிகரித்திருப்பதற்கு சென்னை மாநகராட்சியிடமிருந்து ஓய்வூதிய மற்றும் பணிக்கொடைக்கு எதிராக பெறப்பட வேண்டிய தொகை அதிகரித்திருப்பதே காரணமாகும்.

3. <u>வங்கி இருப்புதொகை மற்றும் கையிருப்புத் தொகை – ரூ. 328.04 கோடி – (சென்ற ஆண்டு – ரூ. 467.03 கோடி)</u>

<u>அ) தலைமை அலுவலக / பகுதி அலுவலக நடவடிக்கை – ரூ. 71.01 கோடி( மீதமுள்ள நிகர வரவு) – (சென்ற ஆண்டு – ரூ. 47.02 கோடி)</u>

தலைமை அலுவலக/பகுதி அலுவலக நடவடிக்கை கணக்கில் இருக்கும் மீதமுள்ள நிலுவைத்தொகை ஒத்திசைவு செய்யப்படுகிறது.

<u>ஆ) வசூல் கட்டுப்பாடு கணக்கு ரூ. 0.78 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 0.95 கோடி)</u>

மேற்குறிப்பிட்டுள்ள மண்டல அலுவலகம் 2இன் கணக்கில் வரும் வசூல் கட்டுப்பாடு கணக்கு பொதுக் கணக்கு ஆகும். இத்தொகை சரி செய்யப்பட்டிருக்க வேண்டும். இதை ஒத்திசைவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது.

**இ) <u>அட்டவணையிடப்பட்ட வங்கிகளில் நடப்பு கணக்கு ரூ. 31.55 கோடி – (சென்ற ஆண்டு – ரூ. 32.06 கோடி)</u>**

I) 31.3.2014 அன்றுள்ளபடி இரண்டு நடப்புக் கணக்கின் மொத்தத் தொகை ரூ. 12.69 கோடி (த.அ.)யும் ரூ. 0.26 கோடி ஒரு நடப்புக் கணக்கிலும் (த.அ.) ரூ. 4.44 கோடி, பத்து நடப்புக் கணக்குகளிலும் (பகுதி அலுவலகங்கள்) மற்றும் ரூ. 4.2 கோடி மூன்று நடப்புக் கணக்குகளிலும் (பகுதி அலுவலகங்கள்) மேற்கண்டவற்றில் உள்ளவை ஒத்திசைவு செய்யப்பட வேண்டும். நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ii) பதினொன்று வங்கிக் கணக்குகளில், மொத்தமாக ரூ. 5.86 இலட்சத்திற்கான 48 நாளான காசோலைகள் 31.3.2014 அன்றுள்ளபடி செல்லாததானலே, அதற்கான மாற்றுப் பதிவு செய்தல் நடை பெற்று வருகிறது.

iii) 31.3.2014 அன்றுள்ளபடி, ஐசிஐசிஐ வங்கிக் கணக்கு பேரேடு எண் 9241 - இயங்கக் கூடிய கணக்கில், பற்று இருப்பிலுள்ள ரூ. 1,57,72,138க்கான வங்கி விவர அறிக்கை வங்கி ஒத்திசைவு அறிக்கை மற்றும் வங்கியிடமிருந்து இருப்புக்கான உறுதிச் சான்றிதழ் ஆகியவை பரிசீலனையில் / ஏற்பாட்டில் இறுதி நிலையில் உள்ளது.

iv) பத்து வங்கிக்கணக்குகளில் (பேரேடு கணக்கு எண் - 9042, 9202, 9013, 9183, 9203,9206, 9045, 9020, 9190, 9210) 31.3.2014 அன்றுள்ளபடி , ஒத்திசைவு அறிக்கையில் செய்யப்பட்ட சரிக்கட்டுதல்கள், இறுதி செய்யப்பட இருக்கிறது.

v) ஒன்பது வங்கிக்கணக்குகளில் (பேரேடு கணக்கு எண் - 9177, 9100, 9045, 9046, 9034, 9197, 9099, 9173, 9020) 31.3.2014 அன்றுள்ளபடி, ஒத்திசைவு அறிக்கையில் கொடுத்துள்ள வங்கி இருப்புத் தொகையும் சம்பந்தப்பட்ட வங்கிப் பேரேடுகளில் காணப்படும் வங்கி இருப்புத் தொகையும் ஒத்துப் போகவில்லை அது சரிபார்த்தல்/ஒத்திசைவு செய்யப்பட வேண்டியுள்ளது சொல்லப்பட்ட ஒன்பது வங்கிக் கணக்குகளில், ஐந்து கணக்குகள், 2014-15 வருடத்தில் சரிபார்த்தல்/ஒத்திசைவு செய்யப்பட்டுள்ளது.

vi) கனரா வங்கி - தலைமை அலுவலக சேகரித்தல் கணக்கில் (எண் 9131), 31.3.2014 அன்றுள்ளபடி வாரியப் பதிவேடுகளில் உள்ள நிலுவை இருப்புத் தொகைக்கும், வங்கியிடமிருந்து பெற்ற உறுதிச் சான்றிதழிலுள்ள தொகையும் ஒன்றுக்கொன்று மாறுபாடாக உள்ளதால், அதன் காரணங்களை கண்டறிய வேண்டி உள்ளது.

**ஈ) <u>முந்தைய உள்ளாட்சி அமைப்புகள் வங்கிகளில் வைத்திருந்த நிலையான வைப்புக் கணக்கின் இருப்பு ரூ. 27.79 கோடி(சென்ற ஆண்டு – ரூ. 16.60 கோடி)</u>**

அ) முந்தைய உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை சென்னைக் குடிநீர் வாரியம் ஏற்றுக் கொண்டதால் அவற்றால் வங்கிகளில் துவக்கப்பட்ட சில வைப்புத் தொகைகள் 2012 மார்ச் 31 ஆம் தேதி நிலவரப்படி மொத்தத் தொகையான ரூ. 15.33 கோடி இந்த நடப்பு நிதி ஆண்டில் 2012-13ல் பெறப்பட்டுள்ளது.

ஆ) பெறப்பட்ட தொகை ரூ. 15.33 கோடி, வாரியப் பதிவேடுகளில் வங்கி இருப்பாக கணக்கில் கொண்டு வரப்பட்டுள்ளது.

இ) 31.3.2014 அன்றுள்ளபடி, நிலுவை தொகை பெற்ற மொத்தத் தொகை மற்றும் இன்னும் ரொக்கமாக மாற்ற வேண்டியவை காலவரை வைப்புத் தொகையில் வரி வேண்டியது அளவில் குறைவாக உள்ளது தற்போதைய நிலுவையாக உள்ளது. அதற்கான ஒத்திசைவு செயல்பாட்டில் உள்ளது.

ஈ) அவ்வாறு காட்டப்படுகின்ற நிலையான வைப்புத் தொகை ரூ. 15.33 கோடி 31.3.2014 அன்றுள்ளபடி ஒத்திசைவு முடியாமல் நிலுவையில் உள்ளது.

உ) 31.3.2014 அன்றுள்ளபடி வாரியத்துடைய நிலையான வைப்புத் தொகை, அட்டவணை இடப்படாத வங்கிகளில் வைக்கப்பட்டுள்ள காலமுறை வைப்புத் தொகையும் சேர்ந்ததாகும்.

**ஊ)வங்கிகளில் உள்ள குறுகிய கால வைப்புத் தொகை ரூ. 154.55 கோடி (சென்ற ஆண்டு - ரூ. 260.33 கோடி)**

31 மார்ச் 2014 தேதியிலான வங்கிகளில் குறுகிய கால வைப்புத் தொகையின் விவரங்களும் அதற்கான விரிவுகளும் ஆதாரங்களுடன் ஒத்திசைவு செய்யப்பட கூர்ந்தாய்வில் உள்ளது.

**4. கடன் மற்றும் முன் பணம் செலவினங்கள் ரூ. 69.46 கோடி (சென்ற ஆண்டு – 22.27 கோடி)**

**அ) கடன் மற்றும் முன் பணங்கள் – செலவினங்கள் – ரூ 0.96 கோடி (முந்தைய ஆண்டு – ரூ. 0.82 கோடி)**

மேற்குறிப்பிட்டுள்ள தொகையில், தென்னக ரயில்வேக்கு முன் பணமாக கொடுக்கப்பட்டு ஏழு வருடங்களுக்கு மேலாக நிலுவையிலுள்ள ரூ. 0.67 கோடி உள்ளடங்கியதாகும்.

**5. வைப்புத்தொகை மற்றும் முதலீடு – ரூ. 176.85 கோடி (சென்ற ஆண்டு – 156.11 கோடி)**

**அ) வைப்புத்தொகை மற்றும் முதலீடுகள் – பணியாளர்கள் / பிறர்**

அ) 31 மார்ச் 2014 நிலையிலான வங்கிகளில் வைப்புத் தொகை, பொது பேரேட்டிலுள்ள நிலுவைத்தொகையும் நிதித் துறை பதிவேட்டிலுள்ள நிலுவை தொகையும் வேறுபடுகிறது. இவை ஒத்திசைவு செய்யப்படுகிறது.

ஆ) ஓய்வூதிய முதலீட்டு கணக்கில் (பேரேடு 8523) சேர்ந்துள்ள வட்டி, 31.3.2014 அன்றுள்ளபடி, ரூ. 5,62,53,965/- வரவு இருப்பாக உள்ளது. அதற்கான விவரங்கள் ஆய்வு மற்றும் ஒத்திசைவில் உள்ளது.

இ) சேர்ந்துள்ள வட்டி - மற்றவை கணக்கில் (பேரேடு 8520) 31.3.2014 அன்றுள்ளபடி ரூ. 19,19,710 பற்று இருப்பாக உள்ளது. அதற்கான விவரங்கள், ஆய்வு மற்றும் ஒத்திசைவில் உள்ளது.

**வரவு–செலவு கணக்கிற்கான குறிப்புகள்**

**I. அரசு மானியம் மற்றும் உதவித் தொகை– ரூ. 257.28 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 176.15 கோடி)**

மேற்காண் மானியங்களில் மீஞ்சூர் கடல் குடிநீர் தொழிற்சாலையிலிருந்து விலைக்கு வாங்கிய கடல் குடிநீருக்காக அரசிடமிருந்து பெற்ற மானியத் தொகை ரூ. 175 கோடியும் மேற்கண்டவற்றில் உள்ளடங்கிய தொகையாகும். அந்நிதியில் 31.3.2014 வரை பயன்படுத்திய தொகை ரூ. 170.37 கோடி குறைவாகப் பயன் படுத்தியதற்கு பொறுப்புக் கணக்கு உருவாக்கப்படவில்லை.

**II. அட்டவணை – ஐ – குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி**

**குடிநீர் வரி– ரூ. 23.85 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 23.02 கோடி)**

குடிநீர் வரியில் காட்டப்பட்டிருக்கும் தொகையை முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் வரித் தொகை சேர்க்கப்படவில்லை.

## III அட்டவணை – ஜே – இதர வருமானம்

### அ) வங்கியிலிருந்து பெறப்படும் வட்டி ரூ. 5.09 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 6.39 கோடி)

31.03.2014 அன்று வங்கியில் குறித்த கால உள்ள வைப்புத் தொகை ரூபாய் 225.55 கோடி (சென்ற ஆண்டு - ரூ. 320.82 கோடி) 31.03.2014 அன்று வங்கியில் காலவரை வைப்புத் தொகை மீது முதலீடு சேர்ந்து வட்டி, கணக்கில் கொள்ளப்பட வேண்டும்.

### ஆ) தள்ளுப்படி வருமானம் – ரூ. 1.61 கோடி (சென்ற ஆண்டு – ரூ.1.40 கோடி)

குறிப்பிட்ட கால கெடுவிற்கு முன்பு காலத்திற்கு முன்பே திட்டத்திற்கான பொருட்களை வழங்குபவர்க்கு பணம் செலுத்துகின்ற போது, வாரியம் அளிக்கும் கழிவுத் தொகையை மேற்கண்டது குறிக்கின்றது.

### இ) ரொக்கமாக்கப்பட்ட சேதாரங்கள் சரி செய்யப்பட்ட இழப்பீடு – ரூ.1.24 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 0.25 கோடி)

மேலே குறிப்பிட்டுள்ளதை வாரியத்தில், நிலவும் நடைமுறைப்படி தொடர்ந்து இதர வருமானமாக கருதப்படுகிறது.

## IV. அட்டவணை – கே– இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவுகள்

### இயக்குதல் செலவுகள் மின் சக்தி ரூ. 78.01 கோடி (சென்ற ஆண்டு – ரூ.73.61 கோடி)

மேலே குறிப்பிட்டுள்ள செலவினங்களை மொத்த வகையிலும் வட்டிமூலம் வருமானத்தை தனியே கணக்கிடாமல், வழக்கத்திலுள்ள கோட்பாடுகளின் படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் உள்ள பிணை வைப்புத் தொகையில் ஈட்டியிருக்கும் வட்டி மூலம் வருமானத்தை கழித்து செலவினங்கள் கணக்கிடப்பட்டுள்ளது.

## V. அட்டவணை – எல் – பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஒதுக்கீடுகள்

### 1. ஓய்வூதியம்

சேர்திரள் ஓய்வூதிய இருப்பு ரூ. 90.50 கோடி (சென்ற ஆண்டு - ரூ. 83.55 கோடி) . அதில் ரூ. 109.41 கோடி (சென்ற ஆண்டு - ரூ. 91.15 கோடி) தொகை முதலீடு செய்யப்பட்டுள்ளது, மேலும் ரூ. 9.44 கோடி ((சென்ற ஆண்டு - ரூ. 7.48 கோடி) பங்குத் தொகை பெறும் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டுள்ளது. 2014 மார்ச் 31 தேதிய நிலையில் பிற்கால ஓய்வூதியத் தேவை குறித்து மதிப்பீடு செய்ய வேண்டியுள்ளது.

### 2. பணிக்கொடை

அ) இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் பணிக்கொடை குழுமநிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திலுள்ள பங்குத் தொகை வருவாய்க்கான கணக்கில் உள்ளது.

ஆ) 2014 மார்ச் 31 தேதி நிலையில் பிற்கால பணிக்கொடை தேவை குறித்து மதிப்பீடு செய்யப்படவில்லை.

### 3. விடுப்பைப் பணமாக்குதல்

பணியாளர்கள் ஓய்வு பெறும்போது விடுப்பைபணமாக்கிய தொகை ரொக்க அடிப்படையில் வரவு செலவு கணக்கில் காட்டப்படுகிறது.

### 4. புதிதாக இணைக்கட்டப்பட்ட பகுதிகளின் பணியாளர்களுக்கான கொடுப்பு

அ) 2014 மார்ச் 31 ஆம் தேதி நிலையில் வாரியக் கணக்குகளில் முன்னாள் உள்ளாட்சி

அமைப்புகளிலிருந்து பெறப்பட்ட பணியாளர்களுக்கான பொது வைப்பு நிதி, பங்களிப்பு பெறும் ஓய்வூதியத்திட்டம் மற்றும் விடுப்பைப் பணமாக்குதல் போன்றவற்றிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளது.

ஆ) உள்ளாட்சி அமைப்புகளின் சில பணியாளர்கள் வாரியத்தின் பணியாளர்களாக எடுத்துக் கொள்ளப்பட்டார்கள், இவ்வாறான பணியாளர்களுக்கு 31 மார்ச் 2014 நிலையிலான பணிக்கொடை பொறுப்புகளுக்கான தவணை கட்டணம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

## VI. அட்டவணை – என் – முந்தைய கால கணக்கு சரிசெய்தல்

### 1. முந்தைய உள்ளாட்சி அமைப்புகளின் வங்கிக் கணக்குகளின் இருப்பு ரூ. 4.13 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 4.13 கோடி)

சென்னைக் குடிநீர் வாரியம் முந்தைய உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை ஏற்றுக் கொண்ட போது உள்ளாட்சி அமைப்புகள் கணக்கில் வைத்திருந்த தொகையான ரூ.17.99 கோடிக்கான 71 வங்கிக் கணக்குகள் முடிக்கப்பட்டன, வங்கிக் கணக்குகள் முடிக்கப்பட்ட பின் பெறப்பட்ட தொகையான ரூ. 14.13 கோடியில் ரூ. 13.86 கோடிக்கு மட்டுமே விவரங்கள் உள்ளன. மீதமுள்ள ரூ. 0.27 கோடி புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்காக பெறப்படும் நிதிக் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. 'முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் வங்கிக் கணக்குகளின் பெறத்தக்கவை' கணக்கில் மீதத் தொகையான ரூ. 4.13கோடி (ரூ. 17.99 கோடி கழிக்க ரூ. 13.86 கோடி) 2014 மார்ச் 31 ஆம் தேதி நிலவரப்படி நிலுவையிலுள்ளது. நிலுவைத் தொகையான ரூ. 4.13 கோடி பெறப்பட வேண்டியதாக இல்லாததால், இதை 2014 மார்ச் 31 ஆம் தேதி நிலவரப்படி பாரிய வரவு செலவுக் கணக்கில் முந்தைய காலக் கணக்கில் காட்டப்பட்டுள்ளது.

## VII. தேய்மானம்

மார்ச் 2014 ஆண்டில் வாங்கிய பொருட்களின் மதிப்பு ரூபாய் 1.02 கோடி அதற்கான ஒதுக்கப்பட்ட தேய்மானம் ரூ. 5.31லட்சம்.

## VIII. அட்டவணை – ஓ – கடன் சேவைக் கட்டணம் – நிதி நிறுவனங்கள்

முன்னாள் உள்ளாட்சி அமைப்புகள் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற நிதி பற்றிய உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனங்களிலிருந்து சில கடன்களைப் பெற்றுள்ளன. 2014 மார்ச் 31 ஆம் தேதிய நிலையில் இக்கடன்களில் மொத்தம் ரூ. 180.49 கோடி ஆகும். தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் கழகம் நிறுவனத்திடம் கடனுக்கான வட்டி ரூபாய் 18.19 கோடியும், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்திடம் கடனுக்கான வட்டி ரூபாய் 7.09 கோடியும் 31.03.2014 நிலையில் முதலாக்கம் செய்யப்பட வேண்டும்.

## IX. வருமானம் மீதான வரி

தொடர்ந்து ஏற்படும் இழப்புகளை கருத்தில் கொண்டு, வரிப் பொறுப்புகள் எதிர் காலத்தில் ஏற்படாது என்பதால் ஒத்திவைக்கப்பட்ட வரிகள் மீது ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை.

## இதர குறிப்புகள்

தற்போதைய அமைப்பின்படி, பணிமனைக்கு உரிய அதிகாரி / பகுதி அலுவலகங்களுக்கு முன் பணம் வழங்கப்படுகிறது. இவற்றில் சம்பந்தப்பட்ட அலுவலகங்களில், செலவுக் கணக்குத் தீர்க்கப்பட்டதில் வருமானவரி பிடித்தம் செய்யும் கருத்தை வாரியம் கருத்தில் கொள்ளவில்லை.

## 2. நிச்சயமற்ற பொறுப்புகள்

அ) வாரியத்திற்கு எதிராக நீதிமன்றங்களிலுள்ள 369 வழக்குகளில் (சென்ற ஆண்டு 356 வழக்குகள்) கேட்ட தொகையான ரூ. 16.12 கோடியை (சென்ற ஆண்டு 19.51 கோடி) வாரியம் கடனாக ஏற்றுக்கொள்ளவில்லை. அதில் 3 வழக்குகளுக்கான தொகை ரூ.12.77 கோடி மத்தியஸ்தம் கீழ் வருகிறது. ((சென்ற ஆண்டு ரூ. 12.77 கோடி)

ஆ) தண்ணீர் கொள்ளளவு கட்டணம் முதலியவைகளுக்கான மொத்த தொகையான ரூ. 52.25 கோடி வாரியத்திற்கும், சென்னை கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்திற்குமிடையே தகராறிலுள்ளது.

இ) முன்னாள் உள்ளாட்சி அமைப்பான ஆலந்தூர் நகராட்சியைப் பொறுத்தவரை ரூ.3.02 கோடி நிச்சயமற்ற பொறுப்பாக உள்ளது. ஆலந்தூர் நகராட்சி அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாதாளச் சாக்கடை அமைக்க ஐவிஆர்சிஎல் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்தது. இதில் ஏற்பட்ட தகராறில் நீர்மட்டம் மத்தியஸ்தர் ஐவிஆர்சிஎல் நிறுவனத்திற்கு ஆதரவாக அளித்த தீர்ப்பை எதிர்த்து ஆலந்தூர் நகராட்சி மேல் முறையீடு செய்துள்ளதால் நிச்சயமற்ற பொறுப்பாக உள்ளது.

3. மூன்றாம் நபர் நிலுவைகள் ஒத்திசைவு மற்றும் உறுதி படுத்துதலுக்கு உட்பட்டவை.

4. சென்ற ஆண்டின் கணக்கு மதிப்புகள் தேவைப்படும் இடங்களில், இந்த ஆண்டின் வகைப்பாடுகளுக்கேற்ப மறு தொகுப்பு செய்யப்பட்டுள்ளன.

இதே தேதியிட்ட எங்களது அறிக்கையின் படி
எஸ். வெங்கட்ராம் மற்றும் குழுமம்
**பட்டயக் கணக்காளர்கள்**
**பதிவு எண். 04656S**

வாரியத்திற்காக

| -ஒம்- | -ஒம்- | -ஒம்- |
|---|---|---|
| **கீதா குமார், எ.சி.எம்.ஏ., ஏ.சி.எஸ்.** | **டாக்டர் பி. சந்திரமோகன், இ.ஆ.ப.,** | **ஆர். கந்தவேலு** |
| நிதி இயக்குநர் பொறுப்பு | நிர்வாக இயக்குநர் | கூட்டாளி |
| | | உ.எண்.12811 |

இடம் : சென்னை
நாள் : 18.12.2015

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (சென்னைக் குடிநீர்) துறை

### சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் செயற்பாடுகள் பற்றிய 31.03.2014 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான தமிழக அரசின் ஆய்வறிக்கை

அ. நிதி (ஆதாரம்) செயல்பாடுகள்

1. சென்னைப் பெருநகரப் பகுதியில் வாழும் மக்களுக்கு, அதிகரித்து வரும் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வசதி ஆகியவற்றைத் திட்டமிட்ட மேம்பாடு மற்றும் உரிய வழியில் முறைப்படுத்தவும் . குறிப்பாக போதிய அளவு பாதுகாக்கப்பட்ட தரமான குடிநீர் வழங்கவும் மற்றும் கழிவுநீரை வெளியேற்றவும், பொதுச் சுகாதாரத்தைப் பாதுகாக்கவும் மற்றும் அவற்றோடு தொடர்புடைய பணிகள் அனைத்தையும் கவனிப்பதற்கென்று 1978ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றுதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28, 1978) கீழ் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் ஏற்படுத்தப்பட்டது.

2. 31-03-2014 ஆம் தேதியில் இவ்வாரியத்தின் சொத்துகளின் மதிப்பு ரூபாய் 6337.93 கோடிகள் ஆகும். இதில் நிகர நிலையான சொத்துகள் ரூபாய் 5452.42 கோடியும், நடப்பு சொத்துகள் ரூபாய் 885.51 கோடிகள் மதிப்புள்ள கடன்கள், முன்பணம் மற்றும் வைப்பீடுகள் ஆகியவைகள் அடங்கும்.

3. வாரியத்தின் பொறுப்புகள் மொத்தம் ரூபாய் 7079.53 கோடி ஆகும். இதில் பங்குகள் ரூபாய் 1483.68 கோடி, அரசு மான்யம் ரூபாய் 2507.97 கோடி, நீண்ட கால கடன்கள் ரூபாய் 1267.69 கோடி மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட வரவுகளும், வைப்புத் தொகை மற்றும் நடப்புப் பொறுப்புகள் ரூபாய் 1820.20 கோடி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

சென்னைக்குடிநீர் வாரியத்தின் குடிநீர் கட்டணங்கள் குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி பற்றிய வருவாய் விவரங்கள் கீழ்காணும் அட்டவணையில் தெளிவாகின்றன :

(ரூபாய் இலட்சங்களில்)

| அ. குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டணங்கள் | 2013-14 | 2012-13 |
|---|---|---|
| **அளவிடப்பட்டது** | | |
| வீட்டு உபயோகத்திற்கு | 1,900.37 | 1,996.41 |
| வணிகத்திற்கு | 11,584.20 | 12,504.33 |
| நிறுவனங்களுக்கு | 1,270.00 | 1,466.95 |
| நகராட்சிகளுக்கு | 706.58 | 266.80 |
| **அளவிடப்படாதவை** | | |
| வீட்டு உபயோகத்திற்கு | 2,880.87 | 2,905.79 |
| வணிகத்திற்கு | 1,794.61 | 1,776.30 |
| நிறுவனங்களுக்கு | 22.09 | 21.67 |
| தனியாருக்கு ஊர்திகள் மூலம் குடிநீர் வழங்கியது | 2,656.47 | 1,691.28 |
| கழிவு நீரகற்று கட்டணங்கள் | 1,981.91 | 2,126.52 |
| கழிவு நீரகற்று வரி | 1,301.65 | 1,212.58 |
| **மொத்தம் ( அ )** | **26,098.75** | **25,968.63** |

| | 2013-14 | 2012-13 |
|---|---|---|
| **ஆ.குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி** | | |
| குடிநீர் வரி | 2,384.77 | 2,301.75 |
| கழிவு நீரகற்று வரி | 8,756.88 | 8,439.25 |
| **மொத்தம் ( ஆ )** | **11,141.65** | **10,741.00** |
| இ. இதர வருமானம் | 8,515.59 | 6,432.86 |
| ஈ. ஐயப்பாடுள்ள கடன்களுக்குக் கூடுதல் ஒதுக்கீடு | 95.53 | - |
| உ. அரசு மானியம் | 25,728.74 | 17,615.43 |
| **மொத்த வருமானம்- (அ+ஆ+இ+ஈ.+உ)** | **71,580.26** | **60,757.92** |
| ஊ. செலவினங்கள் | **89,853.22** | **77,466.16** |
| எ. பற்றாக்குறை வருவாய் | **18,272.96** | **16,708.24** |

2004ம் ஆண்டு முதல் குடிநீர் கட்டண வீதத்தில் மாற்றம் செய்யாத காரணத்தினாலும் மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான செலவில் ஏற்றம் ஏற்பட்டதாலும் ரூபாய் 182.72 கோடி பற்றாக்குறை ஏற்பட்டது.

4. 2013-2014 ஆம் ஆண்டு மொத்த வருமானம் ரூபாய் 715.80 கோடியாகும். இதில் செலவு ரூபாய் 898.53 கோடி. இந்த ஆண்டில் பற்றாக்குறை ரூபாய் 182.73 கோடி இருக்க, சென்ற ஆண்டில் (2012-13) பற்றாக்குறை ரூபாய் 167.08 கோடியாகும். வாரியம் அதன் பல்வேறு நோக்கங்களையும், குறிக்கோள்களையும் அடையும் பொருட்டு மொத்த வருமானம் மொத்த செலவை விட குறைவாக இருந்தாலும் அதன் பணிகளை முழு நோக்குடன் சிறந்த முறையில் மேற்கொண்டு வருகிறது.

5. ஒவ்வோராண்டும் குடிநீர் வழங்க நீர் ஆதாரங்களைப் பெருக்குதல் மற்றும் அது சார்ந்த பணிகளைச் செய்வதற்கு வாரியம் பல திட்டங்களை செயல்படுத்துகிறது. ஆகவே, மொத்த வட்டியின் ஒரு பகுதியினைத் திட்டச் செலவுகளுடன் கூட்டி முதலாக்கம் செய்யப்படுகிறது. மொத்த வட்டியான ரூபாய் 92.24 கோடியில் நடப்பு ஆண்டில் மட்டும் ரூபாய் 1.66கோடி முதலாக்கம் செய்யப்பட்டுள்ளது. வட்டியை முதலாக்கம் செய்யப்பட்ட பின் ரூபாய் 90.57 கோடி வட்டியாக, 2013-14 ஆண்டிற்கான வருவாய் மற்றும் செலவு கணக்கின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது.

6. குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் கொள்ளளவினை அதிகரித்து மேம்படுத்த வாரியம், கடல் நீரை குடிநீராக மாற்றும் இரண்டு திட்டங்களை செயல்படுத்தி இருக்கிறது. ஒன்று மீஞ்சூரில் உள்ள கடல்நீரைக் குடிநீராக்கி இயக்கி, திருப்பித் தரும் திட்டம், மற்றொன்று ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு உதவியுடன் நெம்மேலியில் அமைந்துள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் ஆகும்.

**ஆ. செயல்முறை**

சென்னைப் பெருநகர் பகுதியில் வளர்ந்து வரும் குடிநீர்த் தேவை மற்றும் கழிவுநீர் வசதிகளை வழங்குவதற்கு ஆகஸ்டு 1978-ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் நிறுவப்பட்டது. போதிய அளவில் பாதுகாப்பான மற்றும் தரமான குடிநீர் வழங்குவதன் மூலம் சென்னை நகர மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வாரியம் சிறப்பாக செயல்படுகிறது.

தற்பொழுது வாரியத்தின் செயலாக்க பரப்பளவு 426 சதுர கிலோ மீட்டர். 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி சென்னை நகரின் மக்கள் தொகை 67.27 இலட்சம் ஆகும். பதினைந்து பகுதி

அலுவலகங்கள் மற்றும் 200 பணிமனை அலுவலகங்கள் வாயிலாக சென்னைக் குடிநீர் வாரியம் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

## 1 சென்னை நகருக்கு குடிநீர் ஆதாரங்கள்

### 1.1. நில மேற்பரப்பு நீர்

சென்னை நகருக்கு குடிநீர் வழங்க நிலமேற்பரப்பு நீர் ஆதாரமே முதன்மையானதாகும். நில மேற்பரப்பு நீர்த்தேக்கங்களான பூண்டி, சோழவரம், செங்குன்றம் (புழல்), செம்பரம்பாக்கம் மற்றும் கடலூர் மாவட்டத்தில் உள்ள வீராணம் ஏரி ஆகியவை சென்னை நகருக்கு குடிநீர் வழங்குவதற்கான முதன்மை நீர் ஆதாரங்களாகும்.

மேலும், தெலுங்கு கங்கா திட்டத்தின் கீழ் ஆந்திரப் பிரதேசத்தில் அமைந்துள்ள கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து கிருஷ்ணா நதி நீர் பெறப்பட்டு சென்னை நகருக்கு வழங்கப்படுகிறது.

### 1.2 கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள்

நில மேற்பரப்பு நீர் பருவமழையையே சார்ந்திருக்கிறது. சென்னைக்கு குடிநீர் வழங்குவதில் உள்ள பற்றாக்குறை மற்றும் வறட்சியை நிறைவு செய்ய மாண்புமிகு முதலமைச்சர் 2003-04ல் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டங்களை அறிவித்தார்கள்.

#### மீஞ்சூர் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம்

நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட கடல்நீரை நன்னீராக்கும் நிலையம், வடிவமைத்து, நிறுவி, சொந்தமாக்கி, இயக்கி மற்றும் திருப்பித் தரும் அடிப்படையில் மீஞ்சூரில் நிறுவப்பட்டு தற்பொழுது சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

#### நெம்மேலி கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம்

மத்திய அரசின் நிதி உதவியுடன், ரூ.871.24 கோடி மதிப்பீட்டில், நெம்மேலியில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 22.02.2013 அன்று துவக்கி வைத்தார்கள். இந்நிலையத்திலிருந்து தற்பொழுது சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 150 மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் மற்றுமொரு நிலையம் நெம்மேலியில் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள். இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

#### 400 MLD கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம்

சென்னை மாநகரின் அதிகரித்து வரும் குடிநீர் தேவையை நிறைவு செய்ய தெற்கு பகுதியில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் மற்றுமொரு நிலையம் தொடங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

### 1.3 நிலத்தடி நீர்

மீஞ்சூர், தாமரைப்பாக்கம், பூண்டி மற்றும் வீராணம் நிலத்தடி நீர் தளங்களில் இருந்து சராசரியாக சென்னைக்கு நாளொன்றுக்கு 30 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

### 1.4. குடிநீர் வழங்கல் இயக்குதல் மற்றும் பராமரித்தல்

நாளொன்றுக்கு 831 மில்லியன் லிட்டர் குடிநீர் சென்னை மாநகருக்கு வழங்கப்படுகிறது. இதில் நாளொன்றுக்கு 766 மில்லியன் லிட்டர் வீட்டு உபயோகத்திற்கும், 28 மில்லியன் லிட்டர் பெருமளவில் பயன்படுத்தும் நுகர்வோர்களுக்கு 37 மில்லியன் லிட்டர் தொழிற்சாலைகளுக்கும் வழங்கப்படுகிறது.

தினசரி தனி நபருக்கு வழங்கப்படும் குடிநீர் அளவு பழைய சென்னை நகரில் சராசரி 145 லிட்டராக உள்ளது. சென்னை மாநகருடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வசதிகள் வழங்க வாரியம் தற்போது பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

வாரியம், தனது சேவைகளை இயக்க, விரிவான வசதிகளையும் தொடரமைப்புகளையும் பெற்றுள்ளது. 1978ல் உருவாக்கப்பட்ட வாரியம் தனது சேவையிலும் அடிப்படை கட்டமைப்பிலும், விரிவான வளர்ச்சி அடைந்துள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு.

**குடிநீர் வழங்கல் செயல்முறைகளின் வளர்ச்சி**

| பொருள் | 1978ல் | 2013ல் |
|---|---|---|
| செயல்முறை பகுதிகள் (ச.கிமீ) | 174 | 426 |
| மக்கள் தொகை (இலட்சத்தில்) | 28.60 | 69.51 |
| குடிநீர் வழங்கல் (நா.மி.லி) | 240 | 831 |
| குடிநீர் குழாய்களின் நீளம் (கி.மீ) | 1250 | 5,275 |
| குடிநீர் விநியோக நிலையங்கள் | 3 | 74 |
| குடிநீர் சுத்திகரிப்பு திறன் (நா.மி.லி) | 182 | 1,494 |
| நுகர்வோர்கள் | 1,16,000 | 6,22,906 |

## 2 குடிநீர் வழங்கல்

வாரியம், குடிநீர் வழங்குதலில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குடிநீர் வசதி இல்லாத இடங்களுக்கு குறிப்பாக புதிதாக இணைக்கப்பட்ட 42 பகுதிகளுக்கு சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

### 2.1 செம்பரம்பாக்கத்திலிருந்து, பூந்தமல்லி புறவழிச்சாலை சந்திப்பு வரை நீர் கொணரும் இரண்டாவது பிரதான குழாய்

நிர்ணயிக்கப்பட்ட முழு அளவான 530 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை செம்பரம்பாக்கத்திலிருந்து சென்னைக்கு கொண்டுவர ஏதுவாக செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து 2000 மில்லி மீட்டர் விட்டமுள்ள இரண்டாவது இணையான குடிநீர் குழாய்கள் 6.5 கி.மீ. நீளத்திற்கு, ரூ.41.35 கோடி மதிப்பீட்டில் பூந்தமல்லி புறவழிச்சாலை சந்திப்பு வரையில் அமைக்க அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணி தற்போது நடைபெற்று வருகின்றது.

### 2.2 தாம்பரம், பல்லாவரம் மற்றும் பம்மல் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல் திட்டத்தினை விரிவுபடுத்துதல்

தாம்பரம், பல்லாவரம், பம்மல் மற்றும் நகரை ஒட்டியுள்ள உள்ளாட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்குதலை விரிவுப்படுத்த பூந்தமல்லி புறவழிச்சாலை சந்திப்பில் இருந்து தாம்பரம் வரை 22 கி.மீ. நீளத்திற்கு 1,200 மில்லி மீட்டர் விட்டமுள்ள பிரதான இரும்புக் குழாய்கள் பதிக்கும் திட்டத்திற்கு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதி மூலம் ரூ.93.48 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கான பணிகள் விரைவில் துவங்க உள்ளன.

### 2.3 சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் 2011-2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், சென்னை நகருக்கும் அத்துடன் சிறப்பு கண்ணோட்டத்துடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கும், உட்கட்டமைப்பு மற்றும் வசதிகளை மேம்படுத்த சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தை தொடங்கியுள்ளார்கள். 2011-12ல் குடிநீர் மற்றும்

கழிவுநீரகற்றும் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூ.189.10 கோடியில் கீழ்க்காணும் குடிநீர் வழங்கும் திட்டங்களுக்காக ரூ.56.50 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | குடிநீர் வழங்கும் பணிகள் | தொகை (ரூ.கோடியில்) | பணியின் விவரம் |
|---|---|---|---|
| 1 | குடிநீர் இணைப்புகள் இல்லாத குடிசைப் பகுதிகளில் வாழும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு குடிநீர் விநியோகிக்க குழாய்கள் பதித்தல் | 23.56 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 2 | புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு கீழ்நிலைத் தொட்டிகள் மற்றும் குடிநீர் நிரப்பும் நிலையங்கள் அமைத்தல் | 12.23 | |
| 3 | அடைப்பு ஏற்பட்ட பிரதான குடிநீர் குழாய்கள் மற்றும் பிவிசி குழாய்களை மாற்றி அமைத்தல் | 20.71 | |
| | **மொத்தம்** | **56.50** | |

**2.4 சென்னைப் பெருநகர வளர்ச்சி திட்டம் 2012–2013**

2012-13-ஆம் ஆண்டில் ரூ.192.02 கோடி மதிப்பீட்டில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு 8 ஒருங்கிணைந்த குடிநீர் திட்டங்கள் செயல்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேற்படி பணிகளுக்காக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஆய்வில் உள்ளது. அதன் விவரம் பின்வருமாறு :

| வ. எண். | குடிநீர் வழங்கல் திட்டங்கள் | திட்ட மதிப்பு ( ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | நொளம்பூர் | 18.00 |
| 2 | காரம்பாக்கம் | 20.56 |
| 3 | இராமாபுரம் | 32.54 |
| 4 | மணப்பாக்கம் | 10.92 |
| 5 | நந்தம்பாக்கம் | 6.00 |
| 6 | ஒக்கியம்-துரைப்பாக்கம் | 46.00 |
| 7 | ஈஞ்சம்பாக்கம் | 22.30 |
| 8 | சோழிங்கநல்லூர் - காரப்பாக்கம் | 35.70 |
| | **மொத்தம்** | **192.02** |

### 2.5 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டம் (JNNURM)

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் குடிநீர் வழங்கும் மேம்பாட்டு பணிகள் பின்வருமாறு : -

| வ. எண். | குடிநீர் வழங்கல் திட்டங்கள் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) | மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1. | சென்னை மாநகரின் குடிநீர் வழங்கல் அமைப்பில் மேம்பாட்டுப் பணிகள் | 322.00 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 2. | மதுரவாயல் | 23.30 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 3. | உள்ளகரம்-புழுதிவாக்கம் | 24.24 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 4. | திருவொற்றியூர் | 85.11 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 5. | ஆலந்தூர் - மேம்பாட்டுப் பணிகள் | 64.39 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 6. | அம்பத்தூர் | 267.08 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 7. | நெற்குன்றம் | 19.17 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| | இதர உள்ளாட்சி அமைப்புகள் | | |
| 8. | ஆவடி நகராட்சி | 103.84 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| | **மொத்தம்** | **909.13** | |

### 2.6 ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) நிதி

மாதவரம் பகுதிக்கு விரிவான குடிநீர் வழங்கல் வசதிக்காக ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியின் மூலம் ரூ. 55 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 3 கழிவுநீரகற்று சேவைகள்

1978-ல் வாரியம் துவக்கப்பட்டதிலிருந்து அதனுடைய கழிவுநீர் சுத்திகரிக்கும் பணிகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. வாரியம் கழிவுநீரகற்றும் பணிகளுடன் கழிவுநீர் சுத்திகரிக்கும் பணிகளையும் செய்து வருகிறது. தற்போது வாரியம் நாளொன்றுக்கு 558 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட கழிவுநீரை சுத்திகரிக்கும் திறன் கொண்டுள்ளது. கழிவு நீரகற்றும் பணியில் வாரியம் அடைந்துள்ள வளர்ச்சி விபரம் பின்வருமாறு:

| விவரங்கள் | 1978ல் | 2013ல் |
|---|---|---|
| கழிவுநீரகற்று குழாய்களின் நீளம் (கி.மீ) | 1.223 | 3.643 |
| கழிவுநீர் நீரேற்று நிலையங்களின் எண்ணிக்கை | 58 | 218 |
| கழிவுநீர் சுத்திகரிப்பு திறன் (எம்.எல்.டி) | 57 | 558 |
| நுகர்வோர்கள் | 1.14.000 | 7.35.608 |

மேலும், வாரியம் கழிவுநீரகற்றும் அமைப்பு வசதிக்கான பல்வேறு புதிய திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

### 3.1 சென்னைப் பெருநகர வளர்ச்சி திட்டம் 2011-2012

கழிவுநீர் வசதிக்கான 6 பணிகளுக்கும், கழிவுநீர் அமைப்பை பராமரிக்க இயந்திரங்கள் கொள்முதல் செய்வதற்கும், ரூ.132.60 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | கழிவுநீரகற்றும் பணிகள் | தொகை (ரூ.கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | நீரேற்று நிலையங்களுக்கு இடையில் உந்து குழாய் பதித்தல் | 9.26 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 2 | பிரதான கழிவுநீரேற்று குழாய்கள் பெரிதாக்குதல் | 32.43 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 3 | பிரதான கழிவுநீரேற்று குழாய்களை புதிய வழி தடத்தில் அமைத்தல் | 22.98 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 4 | முகப்பேர் பகுதியில் பல்வேறு இடங்களில் மனித நுழைவாயில்கள் அமைத்தல் மற்றும் நீர்மூழ்கி மின் இயந்திரத்துடன் கூடிய கழிவு நீரேற்று நிலையங்கள் கட்டுதல் | 15.61 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 5 | தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் கழிவுநீரேற்று நிலையங்களின் மேம்பாட்டு பணிகள் | 11.24 | பணிகள் நடைபெற்று வருகின்றன பணிகள் |
| 6 | 35 ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் 50 தூர் வாரும் இயந்திரங்கள் கொள்முதல் செய்தல் | 9.90 | கொள்முதல் பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 7 | கழிவுநீர் பிரதான குழாய்கள் பெரிதாக்குதல் | 31.18 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| | **மொத்தம்** | **132.60** | |

இத்திட்டத்தின் கீழ் 3 கழிவுநீரகற்றும் வசதி திட்டங்களுக்கும், கழிவுநீர் அமைப்பினை பராமரிப்பதற்கான இயந்திரங்களை கொள்முதல் செய்யவும் ரூ.260.75 கோடி மதிப்பீட்டில் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மதிப்பாய்வில் உள்ளது. இவற்றின் விவரம் பின்வருமாறு

| வ. எண் | பாதாள சாக்கடைத் திட்டங்கள் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | கத்திவாக்கம் | 86.15 |
| 2 | இராமாபுரம் | 48.50 |
| 3 | சோழிங்கநல்லூர்-காரப்பாக்கம் | 110.90 |
| | கூட்டுத் தொகை | 245.55 |
| 4 | கழிவுநீர் அமைப்பின் பராமரிப்புக்காக இயந்திரங்கள் கொள்முதல் | 15.20 |
| | **மொத்தம்** | **260.75** |

### 3.3 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டம்

இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் கழிவுநீரகற்றும் வசதிப் பணிகளின் விவரம் பின்வருமாறு :

| வ. எண் | பணியின் விவரம் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) | செயலாக்கத்தின் நிலை |
|---|---|---|---|
| 1 | ராஜீவ் காந்தி தகவல் தொழில் நுட்ப சாலை வழியாக குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வசதிகள் அமைக்கும் பணிகள் | 41.77 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 2 | பெருங்குடியில் நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கூடுதல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் | 31.48 | முடிவுற்றன |
| 3 | நெசப்பாக்கத்தில் நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கூடுதல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் | 54.57 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 4 | உள்ளகரம் - புழுதிவாக்கம் பாதாள சாக்கடைத் திட்டம் | 28.08 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 5 | அம்பத்தூர் பாதாள சாக்கடைத் திட்டம் | 130.91 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 6 | மதுரவாயல் பாதாள சாக்கடைத் திட்டம் | 57.45 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 7 | போரூர் பாதாள சாக்கடைத் திட்டம் | 38.29 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 8 | பெருங்குடி பாதாள சாக்கடைத் திட்டம் | 20.19 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 9 | பள்ளிக்கரணை பாதாள சாக்கடைத் திட்டம் | 58.61 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| | **இதர உள்ளாட்சி அமைப்புகள்** | | |
| 10 | ஆவடி நகராட்சி | 158.05 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 11 | தாம்பரம் நகராட்சி | 160.97 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 12 | திருமழிசை பேரூராட்சி | 20.47 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| | **மொத்தம்** | **800.84** | |

## 3.4.தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் – III (TNUDP - III)

இத்திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்ட 3 பகுதிகளுக்கு ரூ.203.60 கோடி மதிப்பீட்டில் கழிவுநீரகற்று வசதி பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்கான விவரம் கீழ்கண்டவாறு :

| வ. எண். | பணியின் விவரம் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) | செயலாக்கத்தின் நிலை |
|---|---|---|---|
| 1. | திருவொற்றியூர் | 87.63 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 2. | மாதவரம் | 50.22 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 3 | அம்பத்தூர் பிரிவு 1 | 65.75 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| | மொத்தம் | 203.60 | |

## 3.5 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து மின்சாரம் தயாரித்தல்

வாரியம் கடந்த 7 ஆண்டுகளில் நாளொன்றுக்கு 324 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட 5 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை துவக்கியுள்ளது. மேற்கண்ட 5 சுத்திகரிப்பு நிலையங்களும் உயிரி வாயு (Bio Gas) மூலம் மின்சாரம் தயாரிக்கும் வசதி கொண்டுள்ளது. இது சுத்திகரிப்பு நிலையத்தின் மின்சாரத்தேவையை பெருமளவில் பூர்த்தி செய்கிறது.

| வ. எண். | கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையங்கள் | கழிவுநீர் சுத்திகரிக்கும் திறன் (எம்.எல்.டி) | மின்சாரம் தயாரிக்கும் அளவு KwH / day |
|---|---|---|---|
| 1 | கொடுங்கையூர் | 110 | 12,000 |
| 2 | கோயம்பேடு | 60 | 5,000 |
| 3 | நெசப்பாக்கம் | 40 | 5,800 |
| 4 | பெருங்குடி I | 60 | 7,200 |
| 5 | பெருங்குடி II | 54 | 7,000 |
| | மொத்தம் | 324 | 37,000 |

கடந்த 7 வருடங்களில், ரூ.29.94 கோடி மதிப்பிலான மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதனால், தமிழ்நாடு மின் உற்பத்தி கழகத்திடமிருந்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு பெறப்படும் மின்சாரத் தேவை குறைந்துள்ளது. இனி வரும் காலங்களில் நிறுவப்பட இருக்கும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலும் இம்முயற்சியினைத் தொடர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரி எரி வாயு மூலம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் மின் உற்பத்தி செய்யப்படுவதால் சுற்றுச்சூழலில் வெளியேற்றப்படும் புவி வெப்பத்தை அதிகரிக்கும் திறன் உள்ள மீத்தேன் மற்றும் கரியமில வாயுக்களை தவிர்ப்பதுடன், மாநில மின் கட்டமைப்பில் இருந்து பெறப்படும் மின்சாரத்தின் அளவு குறைக்கப்படுகிறது.

இதனால், கடந்த 7 ஆண்டுகளில், வாயு மண்டலத்தில் சுமார் 3,73,356 டன் அளவு கரியமிலவாயு வெளியேற்றப்படுவது தவிர்க்கப்பட்டதுடன் மாநில மின் கட்டமைப்பிலிருந்து பெற்று இருக்க வேண்டிய 1,424 மெகாவாட் (MW) மின்சாரமும் சேமிக்கப்பட்டுள்ளது.

### 3.6 கழிவுநீர் அகற்றும் பணிகளை இயந்திர மயமாக்குதல்

கழிவுநீர் அகற்றும் அமைப்பின் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை வாரியம் இயந்திரமயமாக்கலை அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்காக, 116 தூர் வாரும் இயந்திரங்கள், 73 ஜெட்ராடிங் இயந்திரங்கள், 3 ஜெட்டிங்-உறிஞ்சும் இயந்திரங்கள், 3 அதிவேக உறிஞ்சும் இயந்திரங்கள் சென்னை நகரின் கழிவுநீரகற்றும் பணிகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன. வாரியம் மேலும் பல இயந்திரங்களை கொள்முதல் செய்ய முயற்சி எடுத்து வருகிறது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ. எண். | இயந்திரம் | எண்ணிக்கை | மதிப்பீட்டு தொகை (ரூ.கோடியில்) | திட்டம் |
|---|---|---|---|---|
| 1 | ஜெட்ராடிங் இயந்திரங்கள் | 10 | 2.00 | மாநில திட்டம் 2011-12 |
| 2 | தூர்வாரும் இயந்திரங்கள் | 50 | 2.71 | சென்னைப் பெருநகர் வளர்ச்சி திட்டம் 2011-2012 |
| 3 | ஜெட்ராடிங் இயந்திரங்கள் | 35 | 7.19 | |
| 4 | தூர்வாரும் இயந்திரங்கள் | 66 | 3.30 | சென்னைப் பெருநகர் வளர்ச்சி திட்டம் 2012-2013 |
| 5 | அதி வேக உறிஞ்சு இயந்திரங்கள் | 30 | 7.50 | |
| 6 | ஜெட்டிங்-உறிஞ்சும் இயந்திரங்கள் | 20 | 4.40 | |
| 7 | ஜெட்ராடிங் இயந்திரங்கள் | 14 | 2.80 | சட்டமன்ற / பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி |
| 8 | அதி வேக உறிஞ்சு இயந்திரம் | 8 | 2.00 | |
| 9 | தூர்வாரும் இயந்திரங்கள் | 33 | 1.65 | |
| 10 | ஜெட்டிங்-உறிஞ்சும் இயந்திரம் | 3 | 0.66 | |
| | **மொத்தம்** | **269** | **34.21** | |

### 3.7 கழிவுநீர் மேலாண்மை

வீட்டு கழிவுநீர் இணைப்புகளிலிருந்து உற்பத்தியாகும் கழிவுநீர் 4,265 கி.மீ. தொலைவிற்கு கழிவுநீர் குழாய்கள் மூலம் 218 கழிவுநீரேற்று நிலையங்களைச் சென்றடைகிறது. 5 மண்டலங்கள் அடங்கிய நகரின் பெரிய அளவிலான மொத்தக் கழிவுநீர் அகற்றும் அமைப்பு, ஒவ்வொரு மண்டலத்திலும் தனித்தனியாக கழிவுநீர் சேகரித்து, அனுப்பப்பட்டு, சுத்தம் செய்து, வெளியேற்றும் வசதியைக் கொண்டுள்ளது. கழிவுநீரேற்று நிலையங்களிலிருந்த வெளியேற்றப்படும் கழிவுநீர், 11 சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறது.

**தற்போதைய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்**

| வ. எண். | சுத்திகரிப்பு நிலையம் | திறன் (நா.மி.லி) |
|---|---|---|
| 1 | நெசப்பாக்கம் (2 அலகு : 23+40 எம்.எல்.டி.) | 63 |
| 2 | கொடுங்கையூர் (3 அலகு : 110+80+80 எம்.எல்.டி.) | 270 |
| 3 | கோயம்பேடு (2 அலகு : 34+60 எம்.எல்.டி.) | 94 |
| 4 | பெருங்குடி (2 அலகு : 54+60 எம்.எல்.டி.) | 114 |
| 5 | வில்லிவாக்கம் (1 அலகு : 5 எம்.எல்.டி.) | 5 |
| 6 | ஆலந்தூர் (1 அலகு : 12 எம்.எல்.டி.) | 12 |
| | **மொத்தம் (11 அலகுகள்)** | **558** |

கட்டுமானத்திலுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

| வ. எண். | இடங்கள் | திறன் நாளொன்றுக்கு மில்லியன் லிட்டரில் | மதிப்பீடு (ரூ. கோடியில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| 1 | நெசப்பாக்கம் | 54 | 54.57 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 2 | திருவொற்றியூர் | 36 | 26.33 | |
| 3 | சோழிங்கநல்லூர் | 18 | 33.71 | |
| 4 | கோயம்பேடு | 120 | 116.10 | |
| | மொத்தம் | 228 | 230.71 | |

மேலும் வில்லிவாக்கத்தில் நாளொன்றுக்கு 135 மில்லியன் லிட்டர் திறனுடனும் சோழிங்கநல்லூரில், நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறனுடனும் மற்றும் நாளொன்றுக்கு 6 மில்லியன் லிட்டர் திறனுடனும் கூடிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை எதிர்காலத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 3.8 சென்னை நதிகளில் கழிவுநீர் கலப்பதைத் தடுத்தல்

சென்னை நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் கழிவுநீர் அமைப்பினை மேம்படுத்துவதற்காகவும் கழிவுநீர் மேலாண்மைக்காகவும், சென்னை நதிகளில் கழிவுநீர் கலப்பதைத் தடுப்பதற்காகவும் ஒரு செயல்திட்டம் தயாரிக்கப்பட்டது.

சென்னை நகர நதிகளில் கழிவுநீர் கலக்கும் 337 இடங்களில், 179 இடங்களில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்காக, உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியின் கீழ் அரசு 2012-2013-ஆம் ஆண்டில், முதல் கட்டமாக ரூ.150 கோடி ஒப்பளித்துள்ளது. பணிகள் விரைவில் துவக்கப்பட உள்ளன.

### 3.9 கழிவுநீரை மறுசுழற்சி முறையில் சுத்தம் செய்து மீண்டும் உபயோகப்படுத்துதல்

அரசு கழிவுநீரை மறுசுழற்சி செய்து குடிநீர் அல்லாத பிற தேவைக்கு பயன்படுத்துவதை ஊக்குவிக்கிறது. நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் (Tertiary Treatment Reverse Osmosis) ஒன்றை கோயம்பேட்டில் அமைக்க விரிவான திட்ட மதிப்பீடு மற்றும் ஒப்பந்தப் புள்ளி தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதன் மூலம் இருங்காட்டுக் கோட்டை, ஸ்ரீபெரும்புதூர் மற்றும் ஒரகடம் பகுதிகளில் உள்ள சிறுதொழில் நுகர்வோர்களுக்கான தேவையை சமாளிக்க முடியும்.

## 4. இணைக்கப்பட்ட பகுதிகள்

சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 42 பகுதிகளில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றும் சேவையை மேம்படுத்துவதற்காக வாரியம் பல புதிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

### 4.1 குடிநீர் வழங்கல்

கத்திவாக்கம் மற்றும் வளசரவாக்கம் ஆகிய இரண்டு பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல் திட்டம் ஏற்கனவே உள்ளது. போரூரில் குடிநீர் வழங்கல் திட்டம் தற்போது முடிவடைந்துள்ளது. ஆலந்தூரில் குடிநீர் வழங்கல் மேம்படுத்தும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இப்பணி விரைவில் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் திருவொற்றியூர், மதுரவாயல், நெற்குன்றம், உள்ளகரம்-புழுதிவாக்கம், அம்பத்தூர், மாதவரம் மற்றும் மீனம்பாக்கம் ஆகிய 7 பகுதிகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மணப்பாக்கம், சோழிங்கநல்லூர், காரப்பாக்கம், ஒக்கியம்-துரைப்பாக்கம், ஈஞ்சம்பாக்கம், நந்தம்பாக்கம்,

காரம்பாக்கம், இராமாபுரம் மற்றும் நொளம்பூர் ஆகிய 9 பகுதிகளுக்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சி திட்டம் 2012-13 நிதியின் கீழ், குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 22 பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல் திட்டம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 4.2 கழிவுநீரகற்றும் வசதிகள்

சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 42 உள்ளாட்சி அமைப்புகளில் வளசரவாக்கம் மற்றும் ஆலந்தூர் பகுதிகளில் கழிவுநீரகற்று வசதிகள் உள்ளன. திருவொற்றியூர், அம்பத்தூர், இடையான்சாவடி, மாத்தூர், நொளம்பூர் மற்றும் கொட்டிவாக்கம் ஆகிய பகுதிகளில், கழிவுநீரகற்று வசதிகள் பகுதியளவே உள்ளன.

திருவொற்றியூர், மாதவரம், அம்பத்தூர், மதுரவாயல், போரூர், உள்ளகரம்-புழுதிவாக்கம், பெருங்குடி, பள்ளிக்கரணை மற்றும் மீனம்பாக்கம் ஆகிய 9 பகுதிகளில் கழிவுநீரகற்று திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. சோழிங்கநல்லூர், காரப்பாக்கம், இராமாபுரம் மற்றும் கத்திவாக்கம் ஆகிய 4 பகுதிகளுக்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சி திட்டம் 2012-13 நிதியின் கீழ், கழிவுநீரகற்று திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 27 பகுதிகளுக்கு கழிவுநீரகற்றும் வசதி அமைப்பதற்கு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

## 5 குறை நிவர்த்தி செய்தல்

நுகர்வோர்களின் குறைகளை, வேகமாகவும், வெளிப்படையாகவும் நிவர்த்தி செய்வதை உறுதிபடுத்த வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

### 5.1 புகார் கண்காணிப்பு அமைப்பு

வாரியத்தின் அனைத்து பகுதி அலுவலகங்கள், பணிமனை அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகம் ஆகியவை WAN என்ற இணையதளத்தின் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. நுகர்வோர் தங்களது புகார்களை வாரியத்தின் ஏதாவது ஒரு அலுவலகத்தில் தொலைபேசி மூலம் அல்லது நேரடியாக பதிவு செய்ய முடியும். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட புகார்கள், புகார் கண்காணிப்பு அமைப்பின் மூலம், உரிய நடவடிக்கை உடனுக்குடன் எடுப்பதற்காக சம்பந்தப்பட்ட பணிமனை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. புகார்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கை குறித்தும் இந்த அமைப்பின் மூலமாக கண்காணிக்கப்படுகிறது.

- 15 விழுக்காடு புகார்கள் மட்டுமே தலைமை அலுவலகத்தில் பதிவாகிறது (10 விழுக்காடு தொலைபேசி வாயிலாக மற்றும் 5 விழுக்காடு இணையதளம் வாயிலாக).
- 56 விழுக்காடு புகார்கள் பதிவு செய்த அன்றே நிவர்த்தி செய்யப்படுகிறது.

### 5.2 குறுந்தகவல் சேவை மூலம் புகார்கள் கண்காணிக்கும் அமைப்பு

சென்னைக் குடிநீர் வாரியம் குறுந்தகவல் சேவை முறையையும் (SMS) செயல்படுத்தியுள்ளது. இதன் மூலமாக நுகர்வோர் தங்களது புகார்களை அலைபேசி தொடர்பு மூலமாக பதிவு செய்வதுடன், வாரியத்திடமிருந்து புகார் பெறப்பட்டதற்கான ஒப்புகையையும் குறுந்தகவல் சேவை மூலமாக பெற முடியும். வாரியத்தால் அவ்வாறு பெறப்படும் புகார்கள், தானாகவே புகார் கண்காணிப்பு அமைப்பு மூலமாக சம்பந்தப்பட்ட பணிமனை பொறியாளர்களுக்கு புகார்களின் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதற்காக குறுந்தகவல் சேவை வாயிலாகவே அனுப்பப்படுகிறது. புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட பிறகு நுகர்வோருக்கு மீண்டும் குறுந்தகவல் சேவை மூலமாக அவர்கள் கொடுத்துள்ள அலைபேசி எண்ணுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து தகவல் தரப்படுகிறது. இவ்வகையில், சராசரியாக நாளொன்றுக்கு 50 முதல் 70 வரையிலான புகார்கள் பெறப்பட்டு நிவர்த்தி செய்யப்படுகின்றன.

### 5.3 இணையதளம் மூலம் குறை நிவர்த்தி செய்தல்

நுகர்வோர் தங்களின் புகார்களை வாரியத்தின் இணையதளம் www.chennaimetrowater.tn.nic.in மூலமாகவும் மற்றும் மின் அஞ்சல் சேவை cmwssb@md2.vsnl.net.in மூலமாகவும் பதிவு செய்ய முடியும். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட புகார்கள் மீது வாரியத்தின் மக்கள் சாசனத்தின்படி குறை நிவர்த்தி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

### 5.4 திறந்தவெளி கூட்டம்

சேவை வழங்குதலை மேம்படுத்துவதற்காக, வாரியம் திறந்தவெளி கூட்டங்களை (Open House Meeting) வாரியத்தின் அனைத்து பகுதி அலுவலகங்களிலும், ஒவ்வொரு மாதமும், இரண்டாம் சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை மூத்த அதிகாரிகளின் தலைமையில் நடத்துகிறது. இக்கூட்டங்களில், புகார்கள்/குறைகள்/ ஆலோசனைகள் பெறப்பட்டு, அவற்றின் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

### 5.5 புகார் கண்காணிப்பு – 24 X 7

சென்னைக் குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் 24 மணி நேர குறைகள் களையும் மையம் இயங்குகிறது. இம்மையத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி எண்கள் 28454040/45674567 மூலமாகவோ, நுகர்வோர், தங்களது புகார்களையும்/ குறைகளையும் பதிவு செய்யலாம். பதிவு செய்யப்பட்ட புகார்கள்/குறைகள் தாமதமின்றி அந்தந்த பணிமனைப் பொறியாளர்களுக்கு இணையதளம் மூலமும், குறுந்தகவல் சேவை மூலமும் அனுப்பப்பட்டு உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

## 6. தகவல் தொழில் நுட்பம்

சென்னைக் குடிநீர் வாரியம், கணினி வழியாக குடிநீர் வரி மற்றும் கட்டணங்களைச் செலுத்துவதற்கும் குறைபாடுகளை பதிவேற்றம் செய்வதற்கும் வசதிகளை வழங்கி உள்ளது. தற்போது பயன்பாட்டில் உள்ள மென்பொருள் ஆரக்கிளின் பிரயோகம் R 11லிருந்து R 12க்கும் மற்றும் 10 G யிலிருந்து 11 Gக்கும் மாற்றம் செய்யப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது., ஆரக்கிள் மென்பொருள் கணினி பயன்பாட்டை புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள பகுதி அலுவலகங்களில் உள்ள வரி வசூல் பிரிவுக்கும், நிதித்துறையிலுள்ள கணக்குப் பதிவேட்டிற்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

## 7. மழைநீர் சேகரிப்புத் திட்டம்

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிந்தனையில் உதித்த சிறப்பான திட்டம் 'மழைநீர் சேகரிப்பு' ஆகும். மாண்புமிகு முதலமைச்சரின் தொலைநோக்கு பார்வையில் உருவான மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை அமல்படுத்தியதில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கின்றது. சென்னைக் குடிநீர் வாரியம் மழைநீர் சேரிப்புத் திட்டத்தை சென்னை வாழ் மக்களிடையே பிரபலமடையச் செய்ய பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.**

சென்னைக் குடிநீர் வாரியத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சிறப்பு மழைநீர் சேகரிப்பு பிரிவு, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை ஏற்படுத்துவது மற்றும் அதன் பராமரிப்பு பற்றிய ஆலாசனைகளை வழங்கி வருகிறது.

அனைத்து கட்டடங்களிலும், மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்துவதை கட்டாயமாக்கும் விதமாக, 1987-ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் நிலத்தடி நீர் (ஒழுங்கு முறை) விதி 27/1987ஐ, அக்டோபர் 2002ஆம் ஆண்டில் திருத்தம் செய்யப்பட்டது.

புதிய குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பை பெறுவதற்கும், பழைய இணைப்பைப் புதுப்பிப்பதற்கும், மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துவது அனைத்து கட்டிடங்களுக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மழை நீரை முறையாக பராமரிப்பதற்காக மழை நீர் விழிப்புணர்வு பிரச்சாரம் நடத்தப்பட்டது. தற்போது மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளின் எண்ணிக்கை 8,00,000 ஆகும். செய்தித்தாள், எப்.எம் வானொலி, வலை விளம்பரம், துண்டு பிரச்சாரம் / ஒட்டுத்தாள், மிதவையுடன் மழைநீர் சேகரிப்பு முறை வேலை செய்யும் மாதிரி ஆகியவற்றின் மூலம் மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்து வாரியத்தால் தொடர்ந்து பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புகள் கோரி வாரியத்தில் சராசரியாக மாதந்தோறும் பெறப்படும் 1,100 விண்ணப்பங்களிலும் இணைப்பு வழங்கப்படுவதற்கு முன்பு மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு பராமரிக்கப்படுவது வாரியத்தால் உறுதி செய்யப்படுகிறது.

சென்னை நகரில், நிலத்தடி நீர் மட்டம் மற்றும் அதன் தரம், நகரெங்கும் உள்ள கண்காணிப்பு கிணறுகள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு கண்காணிப்பதன் மூலம், நிலத்தடி நீரின் மட்டம் 15 முதல் 20 அடிவரை உயர்ந்துள்ளதும், அதன் உப்புத்தன்மை 500 முதல் 3,000 பிபிஎம் வரை குறைந்துள்ளதும் கண்டறியப்பட்டுள்ளது. மழைநீர் சேகரிப்பு திட்டத்தை அமுல்படுத்தியதால் நிலத்தடி நீரின் மட்டமும், அதன் தரமும் ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்து வருகிறது.

**திரு. க. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப.,**
அரசு முதன்மைச் செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
தலைமைச் செயலகம்

# ஐந்தாண்டு நிதிநிலைச்சுருக்கம் - ஒரு கண்ணோட்டம்

(ரூபாய் கோடியில்)

| விவரங்கள் | 2013-14 | 2012-13 | 2011-12 | 2010-11 | 2009-10 |
|---|---|---|---|---|---|
| **அ. வருமானம்** | | | | | |
| குடிநீர் விற்பனை மற்றும் குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி | 372.4 | 367.11 | 341.38 | 340.05 | 319.49 |
| இதர வருவாய் | 343.4 | 240.47 | 188.78 | 180.55 | 73.12 |
| **மொத்த வருவாய்** | **715.8** | **607.58** | **530.16** | **520.6** | **392.61** |
| **ஆ. செலவினம்** | | | | | |
| சம்பளம் மற்றும் ஊதியம் | 157.27 | 153.71 | 158.66 | 131.97 | 127.91 |
| இயக்குதல் மற்றும் பராமரித்தல் | 439.47 | 327.3 | 263.27 | 227.73 | 117.21 |
| வட்டி | 90.57 | 96.05 | 93.99 | 93.11 | 95.17 |
| தேய்மானம் | 146.38 | 138.43 | 130.15 | 120.27 | 116.80 |
| இதர செலவினம் | 64.84 | 59.17 | 65.81 | 72.97 | 35.02 |
| **மொத்த வருவாய் செலவினங்கள்** | **898.53** | **774.66** | **711.88** | **646.05** | **492.11** |
| **வரவை விட செலவு அதிகம் (அ - ஆ) (பற்றாக்குறை)** | **-182.73** | **-167.08** | **-181.72** | **-125.45** | **-99.50** |
| பங்குகள் | 1483.68 | 1423.72 | 1231.77 | 1174.42 | 1106.44 |
| அரசு மானியம் | 2507.97 | 1939.42 | 1485.63 | 1075.58 | 852.18 |
| நீண்ட கால கடன்கள் | 1267.69 | 1310.3 | 1370.32 | 1240.38 | 1304.3 |
| நிலையான சொத்துக்கள் | 5452.42 | 4857.1 | 4480.87 | 4036.35 | 3564.42 |
| தற்போதைய நிகர சொத்துக்கள் | -934.69 | -742.52 | -784.95 | -756.05 | -386.14 |
| சேர்ந்த மிகை வரவு / பற்றாக்குறை | -741.60 | -558.87 | -391.76 | -210.07 | -84.62 |
| **மொத்த பணியாளர்கள்** | **3,483** | **3,573** | **3,929** | **4,167** | **4,333** |

# பணி மற்றும் நிர்வாகத் துறை

பணி மற்றும் நிர்வாக துறையே மனிதவள நிர்வாகத்திற்கும், வாரியத்தின் அனைத்து பணியாளர்களின் நலப்பணிகளுக்கும் பொறுப்பாகும். பணி மற்றும் நிர்வாகத் துறை பொது மேலாளரின் தலைமையில் இயங்கும். வருவாய் துறையின் மாவட்ட வருவாய் அதிகாரியே வாரியத்தின் பொது மேலாளராக அயற்பணியில் பணியமர்த்தப்படுகிறார். அவரே வாரியத்தின் செயலாளரும் ஆவார். பொது மேலாளர் நிர்வாக இயக்குநரின் நேரடி கண்காணிப்பில் பணிபுரிவார். பொது மேலாளரின் கண்காணிப்பில் கீழ்வரும் அலுவலர்கள் பணிபுரிகின்றனர்.

1) பணி மேலாளர்
2) தொழில் தொடர்பு மேலாளர்
3) மக்கள் தொடர்பு மேலாளர்
4) முதுநிலை நிர்வாக அலுவலர் (வாரிய பிரிவு)
5) முதுநிலை நிர்வாக அலுவலர் (விழிப்பு கு பிரிவு)
6) முதுநிலை நிர்வாக அலுவலர் (சட்டப் பிரிவு)
7) முதுநிலை நிர்வாக அலுவலர் (தகவல் அறியும் உரிமைச் சட்டப் பிரிவு)
8) வட்டாட்சியர் (நிலம் மற்றும் உடைமை)
9) வட்டாட்சியர் (நில கையகப்படுத்தல்)
10) சட்ட ஆலோசகர்

பணி மற்றும் நிர்வாக துறை நுண்ணிய பிரிவுகளான நியமனம் மற்றும் மதிப்பீடு, விழிப்பு குழு, சட்டப் பிரிவு, வாரிய பிரிவு, பணிப் பதிவேடு, தபால், பதிவறை, மக்கள் தகவல், தொழிலாளர் பதிவேடு, தொழில் தொடர்பு பிரிவு, மக்கள் தொடர்பு, பதிவறை பாதுகாப்பு ஆகிய பிரிவுகள் அடங்கியது.

இப்பிரிவுகள் வாரியத்தின் முக்கிய பணிகளான நியமனம் (நேரடி / பணிமாற்றம் / அயற்பணி), பதவி உயர்வுகள் கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள், பொது நிர்வாகம், அரசால் வெளியிடப்படும் அரசாணைகளை நடைமுறைபடுத்துதல், குற்றத் தடுப்பு கண்காணிப்பு, ஊழியர்கள் மீதான புகார்கள்மீது நடவடிக்கை, புலனாய்வு மற்றும் ஒழுங்கு செயல்முறை ஆணை, கடவுச் சீட்டு பெற அனுமதி, நீதி பேராணை மனு, நீதி பேராணைமேல்முறையீட்டு மனு, வாரியத்திற்கு எதிராக தொடரப்படும் வழக்குகளில் எதிர்வழக்காட வழக்குரைஞர்களை அமர்த்துதல், அனைத்து சட்ட விஷயங்கள், வாரிய கூட்டங்கள் நடத்துதல், விடுப்புகளுக்கு ஒப்பளித்தல், சம்பள உயர்வு, தேர்வுநிலை/சிறப்பு நிலை அளிப்பது, தகுதிகாண் பருவம் உறுதியாக்கம், தபால்களை பெறுவது மற்றும் பகிர்ந்தளிப்பது, வாரியத்தின் பதிவுருகளை பாதுகாப்பது, தொழிலாளர் நலன் சம்பந்தமான நடவடிக்கைகள் மேற்கொள்வது, வீடு கட்டும் முன்பணம் ஒப்பளிப்பு, முன்பணம் மற்றும் படிகள், மருத்துவ செலவு ஈடுசெய்தல், சேமநல காப்பீடு, ஓய்வுகாலப் பணிப்பயன்கள், இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிப்பயன்கள் ஆகிய பணிகளை மேற்கொள்கின்றன

# சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
## கழிவுநீரகங்கற்று வாரியத்தின் மொத்த பணியாளர்கள் விவரம் 31.3.2014 வரை

| வ. எண் | பதவி | பணியமர்த்தும் முறை | ஒப்பளிப்பு பெற்ற எண்ணிக்கை | பணியில் உள்ள எண்ணிக்கை | காலி பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | நிர்வாக இயக்குநர் | இ.ஆ.ப. | 1 | 1 | 0 |
| 2. | செயல் இயக்குநர் | இ.ஆ.ப. | 1 | 1 | 0 |
| 3. | நிதி இயக்குநர் | இ.த.&க.ப | 1 | 1 | 0 |
| 4. | பொறியியல் இயக்குநர் | பதவி உயர்வு | 1 | 1 | 0 |
| 5. | முதன்மை பொறியாளர் | பதவி உயர்வு | 5 | 5 | 0 |
| 6. | முதன்மை நிதி கட்டுப்பாட்டு அலுவலர் | பதவி உயர்வு | 1 | 1 | 0 |
| 7. | பொது மேலாளர் | அயல் பணி | 1 | 1 | 0 |
| 8. | தணிக்கை அலுவலர் | அயல் பணி | 1 | 1 | 0 |
| 9. | மேற்பார்வைப் பொறியாளர் | பதவி உயர்வு | 17 | 16 | 1 |
| 10. | நிதி கட்டுப்பாட்டு அலுவலர் | பதவி உயர்வு | 2 | 1 | 1 |
| 11. | நிதி பகுப்பாய்வாளர் | நேரடி நியமனம் | 1 | 0 | 1 |
| 12. | தொழிற் தொடர்பு மேலாளர் | நேரடி நியமனம்/ பதவி உயர்வு | 1 | 0 | 1 |
| 13. | மக்கள் தொடர்பு மேலாளர் | அயல் பணி | 1 | 1 | 0 |
| 14. | துணை நிதி கட்டுப்பாட்டு அலுவலர் | அயல் பணி | 7 | 2 | 5 |
| 15. | தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர் | பதவி உயர்வு | 1 | 1 | 0 |
| 16. | விவர வகைப்பாட்டு மேலாளர் | நேரடி நியமனம்/ பதவி உயர்வு | 1 | 1 | 0 |
| 17. | தகவல் தொடர்பு மேலாளர் | நேரடி நியமனம்/ பதவி உயர்வு | 1 | 0 | 1 |
| 18. | செயற்பொறியாளர் | பதவி உயர்வு | 57 | 52 | 5 |
| 19. | புவியியலாளர் | பதவி உயர்வு | 1 | 1 | 0 |
| 20. | பணியாளர் மேலாளர் | அயல் பணி/ பதவி உயர்வு | 1 | 0 | 1 |
| 21. | முதுமை கணினி பகுப்பாய்வாளர் | நேரடி நியமனம்/ பதவி உயர்வு | 1 | 0 | 1 |
| 22. | முதன்மை பகுப்பாய்வாளர் | பதவி உயர்வு | 1 | 0 | 1 |
| 23. | மருத்துவ அதிகாரி (டாக்டர்) | வேறு முறை | 1 | 1 | 0 |
| 24. | உதவி பொறியாளர் | பதவி உயர்வு | 161 | 148 | 13 |
| 25. | முதன்மை வேதியாளர்/ நீர் பகுப்பாய்வாளர் | பதவி உயர்வு | 7 | 7 | 0 |
| 26. | துணை புவியியலாளர் | பதவி உயர்வு | 2 | 2 | 0 |
| 27. | முதுநிலை நிர்வாக அலுவலர்/ முதுநிலை கணக்கு அலுவலர் | நேரடி நியமனம்/ பதவி உயர்வு | 37 | 18 | 19 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 28. | துணைமக்கள் தொடர்பு மேலாளர் | பதவி உயர்வு | 1 | 1 | 0 |
| 29. | கணினி பகுப்பாய்வாளர் | நேரடி நியமனம்/ பதவி உயர்வு/ பணியிடமாற்றம் | 3 | 1 | 2 |
| 30. | உதவி பொறியாளர் (கட்டிட/இயந்திர) | நேரடி நியமனம்/ பணியிட மாற்றம் | 262 | 142 | 120 |
| 31. | உதவி பொறியாளர்(மின்) | நேரடி நியமனம்/ பணியிட மாற்றம் | 118 | 66 | 52 |
| 32. | இளநிலை பொறியாளர் (கட்டிட/இயந்திர) | பதவி உயர்வு | 88 | 55 | 33 |
| 33. | இளநிலை பொறியாளர்(மின்) | பதவி உயர்வு | 40 | 68 | -28 |
| 34. | உதவி புவியியலாளர் | நேரடி நியமனம் | 6 | 3 | 3 |
| 35. | தொழில்நுட்ப அதிகாரி | நேரடி நியமனம்/ பதவி உயர்வு | 1 | 1 | 0 |
| 36. | கணக்கு அலுவலர் / நிர்வாக அலுவலர் | பதவி உயர்வு | 37 | 35 | 2 |
| 37. | திட்டமிடுபவர் | நேரடி நியமனம்/ பதவி உயர்வு | 10 | 6 | 4 |
| 38. | இளநிலை நிர்வாக அலுவலர்/ இளநிலை கணக்கு அலுவலர் | பதவி உயர்வு | 130 | 45 | 85 |
| 39. | உதவி நீர் பகுப்பாய்வாளர்/ வேதியாளர் | நேரடி நியமனம்/ பணியிட மாற்றம் | 20 | 0 | 20 |
| 40. | சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை 1 | பதவி உயர்வு | 7 | 7 | 0 |
| 41. | கணினி இயக்குபவர் | நேரடி நியமனம்/ பதவி உயர்வு/ பணியிட மாற்றம் | 18 | 13 | 5 |
| 42. | புகைப்பட நிபுணர் | நேரடி நியமனம் | 1 | 0 | 1 |
| 43. | தொழில்நுட்ப உதவியாளர் / தொழில் நுட்ப அலுவலர் | நேரடி நியமனம் | 3 | 1 | 2 |
| 44. | சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை 2 | பதவி உயர்வு | 20 | 20 | 0 |
| 45. | மேற்பார்வையாளர் | நகர பஞ்சாயத்து முறைகளிலிருந்து பின்பற்றப்பட்டவை | 1 | 1 | 0 |
| 46. | வரைவாளர் / நில அளவையாளர் | நேரடி நியமனம் | 65 | 10 | 55 |
| 47. | மின்னியல் இயந்திரம் இயக்குபவர் (உயரழுத்தம்) | நேரடி நியமனம் வேறு முறை | 171 | 16 | 155 |
| 48. | மின்னியல் இயந்திரம் இயக்குபவர் (உயரழுத்தம்) | பதவி உயர்வு | 46 | 45 | 1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 49. | தொழில்நுட்ப பரிசோதனையாளர் (நிலை 1) | பதவி உயர்வு | 11 | 9 | 2 |
| 50. | தொழில்நுட்ப பரிசோதனையாளர் (நிலை 2) | நேரடி நியமனம் | 15 | 0 | 15 |
| 51. | மருந்து வழங்குபவர் | வேறு முறை | 1 | 1 | 0 |
| 52. | பண்ணை மேலாளர் | பதவி உயர்வு | 1 | 1 | 0 |
| 53. | உதவியாளர் | பதவி உயர்வு | 100 | 47 | 53 |
| 54. | நூலகர் | நேரடி நியமனம் | 1 | 0 | 1 |
| 55. | பணிமனை மேலாளர் (முதல் நிலை) | பதவி உயர்வு | 22 | 21 | 1 |
| 56. | பணிமனை மேலாளர் (இரண்டாம் நிலை) | பதவி உயர்வு | 88 | 76 | 12 |
| 57. | மின்னாளர் | பதவி உயர்வு | 128 | 109 | 19 |
| 58. | இளநிலை உதவியாளர் (புதிதாக ஒன்றிணைக்கப்பட்ட பணிநிலை) (242 + 17) | பதவி உயர்வு/ நேரடி நியமனம்/ பணியிட மாற்றம் | 259 | 0 | 259 |
| 59. | இளநிலை உதவியாளர் | பதவி உயர்வு/ நேரடி நியமனம்/ பணியிட மாற்றம் | 29 | 29 | 0 |
| 60. | சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை 3** | நேரடி நியமனம் | 21 | 21 | 0 |
| 61. | விவர குறிப்பு கணினி இயக்குபவர்** | நேரடி நியமனம்/ பணியிட மாற்றம் | 7 | 7 | 0 |
| 62. | தட்டச்சர் மற்றும் முதல் நிலை தட்டச்சர்** | நேரடி நியமனம்/ பணியிட மாற்றம் | 15 | 15 | 0 |
| 63. | பணிமனை மேலாளர்** | நேரடி நியமனம்/ பணியிட மாற்றம் | 38 | 38 | 0 |
| 64. | வாகன ஓட்டுநர் | நேரடி நியமனம்/ பணியிட மாற்றம் | 67 | 26 | 41 |
| 65. | தொலைபேசி இயக்குபவர் | நேரடி நியமனம்/ பணியிட மாற்றம் | 4 | 2 | 2 |
| 66. | மிதி இயக்கி செய்தியாள் (இலகுரக ஓட்டுநர் உரிமம் உரியவர்) | நேரடி நியமனம்/ பணியிட மாற்றம் | 1 | 0 | 1 |
| 67. | மின்கண்காணிப்பாளர் | பின்பற்றுதல் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்) | 1 | 1 | 0 |
| 68. | குழாய் மற்றும் இயந்திரம் ஓட்டுபவர் | நேரடி நியமனம்/ பதவி உயர்வு | 1 | 0 | 1 |
| 69. | பொருத்துனர் (இரண்டாம் நிலை) | நேரடி நியமனம்/ பதவி உயர்வு | 5 | 5 | 0 |
| 70. | பொருத்துனர் | நகர பஞ்சாயத்து முறைகளிலிருந்து பின்பற்றப்பட்டவை | 1 | 1 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 71. | இயந்திரம் இயக்குபவர் (இரண்டாம் நிலை) | | 1 | 1 | 0 |
| 72. | நீரேற்று குழாய் இயக்குபவர் (முதல் மற்றும் இரண்டாம் நிலை) | | 10 | 10 | 0 |
| 73. | மின்நீரேற்று குழாய் இயக்குபவர் | | 154 | 10 | 144 |
| 74. | களப்பணியாளர் | வேறு முறை | 1 | 0 | 1 |
| 75. | மின் தூக்கி இயக்குபவர் | நேரடி நியமனம் | 1 | 1 | 0 |
| 76. | மருந்துவாயு இயக்குபவர் | பதவி உயர்வு | 8 | 5 | 3 |
| 77. | வடிகட்டி இயக்குபவர் | பதவி உயர்வு | 17 | 6 | 11 |
| 78. | பதிவுறு எழுத்தர் | நேரடி நியமனம் / பதவி உயர்வு | 45 | 17 | 28 |
| 79. | அலுவலக உதவியாளர் | நேரடி நியமனம் | 102 | 31 | 71 |
| 80. | குழாய் செப்பனிடுபவர் (நிலை I & II) | நகர பஞ்சாயத்து முறைகளிலிருந்து பின்பற்றப்பட்டவை | 2 | 2 | 0 |
| 81. | இணைப்புப் பலகை இயக்குபவர் | நகர பஞ்சாயத்து முறைகளிலிருந்து பின்பற்றப்பட்டவை | 2 | 2 | 0 |
| 82. | மின்கம்பியாள் | நகர பஞ்சாயத்து முறைகளிலிருந்து பின்பற்றப்பட்டவை | 1 | 1 | 0 |
| 83. | மின் உதவியாளர் | நகர பஞ்சாயத்து முறைகளிலிருந்து பின்பற்றப்பட்டவை | 2 | 2 | 0 |
| 84. | துப்புரவு பணியாளர் | நேரடி நியமனம் | 15 | 11 | 4 |
| 85. | காவலர் | நேரடி நியமனம் | 50 | 33 | 17 |
| 86. | வட்டாட்சியர்/வரி தண்டலர் | அயல் பணி | 11 | 10 | 1 |
| 87. | களபணி உதவியாளர்/ நில அளவையாளர் | அயல் பணி | 2 | 1 | 1 |
| | **மொத்த பணியாளர் எண்ணிக்கை** | | **2601** | **1351** | **1250** |
| 88. | தொழிலாளப்பணியாளர் | நேரடி நியமனம் | 4552 | 2080 | 2472 |
| | கனரக வாகன ஓட்டுநர் | | 101 | 52 | 49 |
| | **மொத்தம்** | | **7254** | **3483** | **3771** |

*2 செயற்பொறியாளர் பதவி உச்ச நீதிமன்ற ஆணைப்படி

**புதிதாக உருவாக்கப்பட்ட இளநிலை உதவியாளர் பணியிடங்கள் இணைக்கப்பட்ட காலியிடங்கள்.

# பயிற்சி மையம்

சென்னை குடிநீர் வாரிய பயிற்சி மையத்தில் வாரிய பணியாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. மற்றும் மத்திய பொதுநல மற்றும் சுற்றுச் சூழல் பொறியியல் அமைப்பின் ஆதரவில் அகில இந்திய அளவில் உள்ள நிறுவனங்களுக்கும் மற்றும் நமது பணியாளர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகிறது. இது தவிர சிறப்பு பயிற்சி வகுப்புகளும் தேவைக்கேற்ப நடத்தப்படுகிறது.

### வாரியப் பணியாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள்:

வாரியப் பணியாளர்களுக்காக 30பயிற்சி வகுப்புகள் மற்றும் மத்திய சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் அமைப்பின் ஆதாரவில் 4 வகுப்புகள் பின்வரும் தலைப்புகளில் நடத்தப்பட்டன. அதன் வகைகள்:

1. இயக்குதல் மற்றும் பராமரித்தல்
2. குடிநீரின் தரம்
3. கழிவு நீரை அகற்றுதல்
4. மனித வள மேம்பாடு
5. திட்ட மேலாண்மை
6. நிதி நிலை மேலாண்மை
7. மத்திய சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் அமைப்பின்ஆதரவு வகுப்புகள்.

2013 - 14 ம் ஆண்டு பயிற்சி மையத்தில் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்புகளின் மூலம் வாரிய பணியாளர்கள், களப்பணியாளர்கள் உள்பட 1620 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

### சிறப்பு பயிற்சி வகுப்புகள்

மேற்கூறிய பயிற்சி வகுப்புகளுக்கு கூடுதலான சிறப்பு பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டன.

| வ.எண் | பயிற்சியின் பெயர் | பங்கு பெற்றோரின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 20.08.2013 ஆம் தேதியன்று ஒய்வூதிய பணியாளர்களை தற்காலிகமாக பணி நியமனத்துக்கான எழுத்துத் தேர்வு நடத்தப்பட்டது | 107 |
| 2. | இயந்திரங்களைப் பயன்படுத்தி பாதுகாப்பு பாதாள சாக்கடை பராமரிப்பு பற்றி அந்தந்த பகுதியிலுள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் ஒரு நாள் சிறப்பு செய்முறை பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. | 289 |
| 3. | வாரிய பணியாளர்க்கான தேர்வு நடத்தப்பட்டது | 199 |
| | மொத்தம் | 595 |

## பகுதி அலுவலகம் மற்றும் பணிமனைகளின் விவரங்கள்

| வ. எண் | விவரம் | பகுதி-1 | பகுதி-2 | பகுதி-3 | பகுதி-4 | பகுதி-5 | பகுதி-6 | பகுதி-7 | பகுதி-8 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | பகுதி அலுவலகத்தின் பெயர் | திருவொற்றியூர் | மணலி | மாதவரம் | தண்டையார் பேட்டை | இராயபுரம் | திரு வி.க. நகர் | அம்பத்தூர் | அண்ணா நகர் |
| 2. | மொத்த பணிமனைகள் | 14 | 7 | 12 | 15 | 15 | 15 | 15 | 15 |
| 3. | மக்கள்தொகை (சென்னை மாநகராட்சி பட்டியலின்படி) | 317301 | 131868 | 196027 | 647694 | 627112 | 909121 | 521738 | 941000 |
| 4. | மொத்த தெருக்கள் | 1381 | 877 | 2562 | 2840 | 1387 | 2266 | 2252 | 2412 |
| 5. | தெருக்களின் நீளம்(கி.மீ) | 226.276 | 166.91 | 457.047 | 441.341 | 250.419 | 353.64 | 362.883 | 353.87 |
| 6. | குடிநீர்க் குழாயின் நீளம் (கி.மீ) | 82.737 | 168.76 | 412.55 | 398.48 | 270.321 | 377.571 | 257.33 | 399 |
| 7. | கழிவுநீர்க் குழாயின் நீளம் (கி.மீ) | 57.37 | 37.73 | 0 | 464.11 | 258.088 | 361.212 | 119.739 | 360.16 |
| 8. | ஆள்நுழைவாயிலின் எண்ணிக்கை | 1820 | 1697 | 0 | 12676 | 8261 | 10648 | 3811 | 11114 |
| 9. | கழிவுநீரேற்று நிலையத்தின் எண்ணிக்கை | 6 | 2 | 0 | 34 | 21 | 17 | 6 | 29 |

| வ. எண் | விவரம் | பகுதி-1 | பகுதி-2 | பகுதி-3 | பகுதி-4 | பகுதி-5 | பகுதி-6 | பகுதி-7 | பகுதி-8 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | பகுதி அலுவலகத்தின் பெயர் | தேனாம் பேட்டை | கோடம் பாக்கம் | வளசர வாக்கம் | ஆலந்தூர் | அடையார் | பெருங்குடி | சோளிங்க நல்லூர் | சென்னை |
| 2. | மொத்த பணிமனைகள் | 18 | 16 | 13 | 12 | 13 | 11 | 9 | 200 |
| 3. | மக்கள்தொகை (சென்னை மாநகராட்சி பட்டியலின்படி) | 1159000 | 1103542 | 467436 | 272174 | 796059 | 290794 | 298900 | 8679766 |
| 4. | மொத்த தெருக்கள் | 1758 | 2367 | 3095 | 1700 | 2794 | 2674 | 1820 | 32185 |
| 5. | தெருக்களின் நீளம்(கி.மீ) | 390.73 | 440.745 | 407.051 | 254.91 | 406.216 | 406.292 | 271.135 | 5189.47 |
| 6. | குடிநீர்க் குழாயின் நீளம் (கி.மீ) | 419.655 | 487.148 | 253.47 | 250.18 | 450.583 | 322.589 | 260.54 | 4810.91 |
| 7. | கழிவுநீர்க் குழாயின் நீளம் (கி.மீ) | 394.59 | 461.935 | 92.7 | 144.44 | 425.789 | 6.71 | 0 | 3181.57 |
| 8. | ஆள்நுழைவாயிலின் எண்ணிக்கை | 10335 | 12121 | 3409 | 4915 | 15672 | 112 | 0 | 96591 |
| 9. | கழிவுநீரேற்று நிலையத்தின் எண்ணிக்கை | 23 | 24 | 7 | 2 | 46 | 2 | 0 | 219 |

## இருப்பு நிலை குறிப்பின் அட்டவணை 'எப்' க்கு துணை அட்டவணை

**துணை அட்டவணை – 1** (ரூபாய் இலட்சங்களில்)

| நிலையான இருப்புகள் – குடிநீர் | 2013-14 |
|---|---|
| அணைகள் மற்றும் நீர் தேக்கங்கள் | 1825.10 |
| கிணறு மற்றும் குழாய் கிணறுகள் | 3421.98 |
| தண்ணீர் ஊடுறுவும் தொட்டி | 1.59 |
| திறந்த வெளி கால்வாய்கள் | 331.65 |
| பகிர்மான குழாய் கால்வாய் | 70355.55 |
| நீரேற்றும் நிலையம் | 13541.90 |
| வடிகட்டுதல் நிலையம் | 207.58 |
| குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் | 21271.03 |
| சுத்திகரிக்கப்பட்ட நீர் தொட்டி | 4916.60 |
| மின்உற்பத்தி மின் ஆக்கி | 689.83 |
| முதன்மை பகிர்மானம் | 69903.62 |
| பெருங்குழாயிலிருந்து நீர் பெறுவதற்கான அமைப்பு | 2.32 |
| நீருந்து இயந்திரம் மற்றும் நீரேற்று நிலையம் | 7937.78 |
| குடிநீர் இணைப்பு மற்றும் வழங்குதல் | 14322.20 |
| புதிய அளவீடு மற்றும் விசைமானி | 623.05 |
| நுகர்வோர் அளவை | 172.58 |
| கை பம்பு | 56.20 |
| பொதுக்குழாய் | 369.50 |
| நிலத்தடி நீர் வழங்குதல் | 1905.01 |
| குடிநீர் சார்ந்த கட்டுமானப்பணி | 29218.27 |
| குடிநீருக்கான மின் உபகரணங்கள் | 1374.57 |
| குடிநீருக்கான தளவாடம் மற்றும் உபகரணங்கள் | 680.48 |
| சென்னை மாநகர குடிநீர் அனுப்புதல் மற்றும் பகிர்மானத் திட்டம் | 26452.73 |
| குடிநீர் ஊர்தி | 3.79 |
| சென்னை மாநகர் செயல் திட்டம் | 5551.48 |
| 530 எம் எல் டி திட்டம் | 1616.99 |
| **மொத்தம்** | **276753.38** |

(ரூபாய் இலட்சங்களில்)

| நிலையான இருப்புகள் – கழிவுநீர் | 2013-14 |
|---|---|
| கழிவு நீர் சேவை இணைப்புகள் | 3714.14 |
| கழிவு நீர் சேகரிப்பு | 34261.51 |
| நீரேற்று நிலையம் | 14880.01 |
| மின்ஆக்கி | 836.79 |
| முதன்மை வலு ஈர்க்கும் கருவி | 18555.04 |
| கழிவு நீர் சுத்திகரிக்கும் நிலையம் | 5650.55 |
| முதன்னை நிலை | 68.66 |
| ஆக்சிடேசன் பாண்ட் | 0.66 |
| கழிவு நீர் பண்ணை | 1094.61 |
| கழிவு நீர் - பிற தளவாடங்கள் மற்றும் கருவிகள் | 3962.93 |
| நிலத்தடி - கழிவு நீர் | 113.27 |
| பிற கட்டுமானங்கள் | 13972.08 |
| மின் உபகரணங்கள் | 4610.82 |
| கழிவு நீர் ஊர்திகள் | 95.99 |
| செயலாக்கத் திட்டங்கள் | 971.52 |
| **மொத்தம்** | **102788.58** |

(ரூபாய் இலட்சங்களில்)

| நிலையான இருப்புகள் – பொது | 2013-14 |
|---|---|
| நிலம் - பொது | 74.92 |
| தெருக்கள் மற்றும் பாலங்கள் | 1447.94 |
| கட்டிடங்கள் | 1763.35 |
| மரச்சாமான்கள் மற்றும் தளவாடங்கள் | 252.25 |
| அலுவலக உபகரணங்கள் - பொது | 454.02 |
| கட்டுமான உபகரணங்கள் | 1403.51 |
| பயிற்சி மைய இயந்திரங்கள் மற்றம் தளவாடங்கள் | 36.87 |
| ஆய்வக கருவிகள் | 129.33 |
| நில அளவை மற்றும் வரைபட அலுவலக உபகரணங்கள் | 3.89 |
| தகவல் தொடர்புசாதனங்கள் | 92.85 |
| அலுவலக ஊர்திகள் | 369.84 |
| திறந்த சுமை ஊர்திகள் - சிறிய சுமை ஊர்திகள் | 13.22 |
| பிற பொது தளவாடங்கள் | 118.43 |
| கணினி பொருத்துதல் | 1075.79 |
| **மொத்தம்** | **7236.21** |

## சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் 2013-14 ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள் சட்டமன்றப் பேரவை முன் வைப்பதில் ஏற்பட்ட காலதாமத்திற்கு உரிய காரணங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | (அ) | தமிழ்நாடு அரசு நிதித் துறையின் அறிவுரைப்படி நிறுவனங்கள், கணக்குகளை எந்த கால கட்டத்திற்குள் தொகுக்க வேண்டும் | 30.06.2014 |
| | (ஆ) | கணக்குகள் தொகுக்கப்பட்ட தேதி | 18.12.2015 |
| | (இ) | உரிய கால கட்டத்திற்குள் தொகுக்கப்படாவிட்டால் அதற்கான காரணங்கள் | 42 உள்ளாட்சி அமைப்புக்களின் கணக்குகளை ஒருங்கிணைத்து திருத்தி அமைக்கப்பட்ட நகர அமைப்பால், கணக்குகளை முடிப்பதில் பெருமளவு தாமதம் ஏற்பட்டது. |
| 2. | (அ) | கணக்குகளை தணிக்கை செய்ய தணிக்கையாளர்கள் எப்பொழுது நியமனம் செய்யப்படவேண்டும் | இந்திய தணிக்கை துறைத் தலைவர் தணிக்கையாளர்களை சிபாரிசு செய்ததும், அதை அரசு அனுமதி கொடுத்தவுடன். |
| | (ஆ) | நியமனம் செய்யப்பட்ட தேதி | 19.09.2014 |
| | (இ) | உரிய காலத்திற்குள் முடிக்காவிட்டால் அதற்கான காரணங்கள் | எட்டு மாதங்களாக வாரியக் கூட்டம் நடைபெறவில்லை |
| 3. | (அ) | தணிக்கையாளர்கள் எந்த தேதியில் தணிக்கையை முடிக்க வேண்டும் | 31.10.2014 |
| | (ஆ) | தணிக்கை முடிந்த தேதி | 18.12.2015 |
| | (இ) | உரிய காலத்திற்குள் தணிக்கை முடிக்கப்படாததற்கான காரணங்கள் | 42 உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை வாரியம் எடுத்துக் கொண்ட பிறகு அவற்றை சரிபார்ப்பதற்கும், மதிப்பீடு செய்வதற்கும், ஆலோசகர் நியமிக்கப்பட்டார். 42 உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பதிவேடுகளை மற்றும் விவரங்களை சேகரிப்பதற்கு ஆலோசகர் நீண்ட காலம் எடுத்துக் கொண்டார். அவருடைய அறிக்கையின் அடிப்படையில் மேற்கண்ட உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் வாரியக்கணக்குடன் இணைக்கப்பட்டது. மேற்கண்ட காரணங்களால் தணிக்கையாளருக்கு குறித்த காலத்தில், 2011-12 மற்றும் 2012-13 ஆண்டுகளில், கணக்குகள் சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | | | 2011-12 மற்றும் 2012-13ம் ஆண்டுகளில் கணக்குகள் முடிப்பதில் ஏற்பட்ட தாமதம், தொடர்ந்து 2013-14ம் ஆண்டு கணக்குகள் முடிப்பதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. |
| 4. | (அ) | மாநில கணக்காயர் / தணிக்கையாளர் கருத்துகள் பெறப்பட வேண்டிய தேதி | பொருந்தாது |
| | (ஆ) | பெறப்பட்ட தேதி | பொருந்தாது |
| | (இ) | உரிய காலத்திற்குள் முடிக்காவிட்டால் அதற்கான காரணங்கள் | பொருந்தாது |
| 5. | (அ) | ஆண்டு கணக்குகள் எந்த தேதிக்குள் வாரியத்தின் பொதுக் குழுக் கூட்டத்தில் வைக்கப்படவேண்டும் | 30.11.2014 |
| | (ஆ) | எந்த தேதியில் வைக்கப்பட்டன | 23.02.2016 |
| | (இ) | கால தாமதத்திற்கான காரணங்கள் என்ன | 42 உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை வாரியம் எடுத்துக் கொண்ட பிறகு அவற்றை சரிபார்ப்பதற்கும், மதிப்பீடு செய்வதற்கும், ஆலோசகர் நியமிக்கப்பட்டார். 42 உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பதிவேடுகளை மற்றும் விவரங்களை சேகரிப்பதற்கு ஆலோசகர் நீண்ட காலம் எடுத்துக் கொண்டார். அவருடைய அறிக்கையின் அடிப்படையில் மேற்கண்ட உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் வாரியக்கணக்குடன் இணைக்கப்பட்டது. மேற்கண்ட காரணங்களால் தணிக்கையாளருக்கு குறித்த காலத்தில், 2011-12 மற்றும் 2012-13 ஆண்டுகளில், கணக்குகள் சமர்ப்பிக்கப்படவில்லை.<br><br>2011-12 மற்றும் 2012-13ம் ஆண்டுகளில் கணக்குகள் முடிப்பதில் ஏற்பட்ட தாமதம், தொடர்ந்து 2013-14ம் ஆண்டு கணக்குகள் முடிப்பதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. |
| 6. | (அ) | அச்சடிக்கப்பட்ட ஆண்டு அறிக்கைகள் பெறப்பட வேண்டிய தேதி | 31.12.2014 |
| | (ஆ) | உரிய காலத்தில் பெறப்படாவிட்டால் அதற்குரிய காரணங்கள் | 42 உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை வாரியம் எடுத்துக் கொண்ட பிறகு அவற்றை சரிபார்ப்பதற்கும், |

| | | | |
|---|---|---|---|
| | | | மதிப்பீடு செய்வதற்கும், ஆலோசகர் நியமிக்கப்பட்டார். 42 உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பதிவேடுகளை மற்றும் விவரங்களை சேகரிப்பதற்கு ஆலோசகர் நீண்ட காலம் எடுத்துக் கொண்டார். அவருடைய அறிக்கையின் அடிப்படையில் மேற்கண்ட உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் வாரியக்கணக்குடன் இணைக்கப்பட்டது. மேற்கண்ட காரணங்களால் தணிக்கையாளருக்கு குறித்த காலத்தில், 2011-12 மற்றும் 2012-13 ஆண்டுகளில், கணக்குகள் சமர்ப்பிக்கப்படவில்லை.<br>2011-12 மற்றும் 2012-13ம் ஆண்டுகளில் கணக்குகள் முடிப்பதில் ஏற்பட்ட தாமதம், தொடர்ந்து 2013-14ம் ஆண்டு கணக்குகள் முடிப்பதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. |
| 7. | (அ) | ஆண்டு கணக்குகள் அரசுக்கு அனுப்பப்பட வேண்டிய தேதி | 31.12.2014 |
| | (ஆ) | ஆண்டு கணக்குகள் அரசுக்கு அனுப்பப்பட்ட தேதி | 21.06.2016 |
| | (இ) | உரிய காலத்தில் பெறப்படாவிட்டால் அதற்குரிய காரணங்கள் | -- |
| 8. | (அ) | ஆண்டு அறிக்கையை அரசு பெற்ற தேதி | 21.06.2016 |
| | (ஆ) | ஆய்வு செய்ய எடுத்துக் கொண்ட காலம் | 80 நாட்கள் |
| | (இ) | காலதாமாமிருப்பின் அதற்குரிய காரணங்கள் | -- |
| 9. | (அ) | ஆண்டு அறிக்கை பேரவை முன் வைக்கப்பட வேண்டிய தேதி | 31.03.2015 முன்னால் |
| | (ஆ) | பேரவைச் செயலகத்திருந்து அனுப்பப்பட வேண்டிய தேதி | அடுத்த கூட்டத் தொடருக்கு முன்னால் |

**திரு. க. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப.,**
அரசு முதன்மைச் செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
தலைமைச் செயலகம்